கல்கி



KALKI நவம்பர் 7, 1954 4 அணா


நாளுக்கு நாள் அதிக தெளிவான,
எழிலோங்கும்
சருமம்
கேடில் கலந்த
ரெக்ஸோனா
இந்த அற்புத
வேலையைச்
செய்யட்டும்.
ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப் பொலிவுடன் விளங்குவீர்கள்.
ரெக்ஸோனா
கேடில்* கலந்த சோப் இதுவொன்றே
* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.
Rexona
Rexona
R.P. 123-50 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி
பொருளடக்கம்

மலர் 14 இதழ் 15	1954 நவம்பர் 7	ஜய ௵ ஐப்பசி 22

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



ஒரு வாரத்தில் எவ்வளவு துஷார்

உபயோகிக்கிறீர்கள்?

உங்கள் வாரத்தேவை என்னவானாலும், சௌகர்யமான, புதிய சுகாதார முறையில் பாக் செய்த டின்களில் உங்கள் மனதுக்கிசைந்த இப்பண்டம் கிடைக்கும். துஷார் இந்த டின்களில் கிருமியற்று, மிக்க சுத்தமான நிலையில் உங்களிடம் சேர்கிறது.

10 பவுண்ட்?
5 பவுண்ட்?
2 பவுண்ட்?



துங்கபத்ர இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்

துஷார்
வனஸ்பதி

கல்கி

மலர் 14 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 15

பாகிஸ்தானுக்கு நல்ல காலமா?

பாகிஸ்தானுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்று சொல்லத் தோன்றுகிறது.

பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்களுடைய கண்களை மறைத்திருந்த திரை விலகி யிருப்பது நல்ல காலத்துக்கு அறிகுறி அல்லவா?

சென்ற ஏழு ஆண்டுகளாகப் பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்களுக்கு உண்மையான நண்பர்கள் விரோதிகளாகத் தோன்றினர்; மத வெறியர்களும் சமய சஞ்சீவிகளும் ஆப்த சிநேகிதர்களாகக் காட்சி அளித்தனர்.

இப்போது திரை விலகி விட்டதால், உண்மை நிலைமை அவர்களுடைய கண்களுக்குப் புலனாகத் தொடங்கி யிருக்கிறது.

யார் உண்மையான நண்பர்கள்? யார் சந்தர்ப்பவாதிகள்? இதை யெல்லாம் உணர்ந்து கொள்ளும் சக்தி பாகிஸ்தான் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

• • • •

மலைப் பாறையை விழுங்கியவன் மிளகுக் கஷாயம் சாப்பிட்டால் போதுமா?

கடுமையான பயங்கர நோய்க்குக் காரசாரமான கசப்பு மருந்தைப் பிரயோகம் செய்ய வேண்டியது அத்தியாவசியம் அல்லவா?

இந்த உண்மையைப் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் முகமது அலி இப்போது உணர்ந்து காரியங்களைச் செய்துள்ளார்.

மேற்படி உண்மையை அவர் தாமாக உணர்ந்து காரியங்கள் செய்தார் என்பதைக் காட்டிலும், அந்த நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி அவரது கண்களைத் திறந்தது என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

பாகிஸ்தான் சர்க்கார் தங்களுடைய பரம விரோதி என்று கருதிய டாக்டர் கான் சாகிப், பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள புது மந்திரி சபையில் வருந்தி அழைத்துச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் ஏற்பட்டதும் ஏற்படாததுமாகப் பாகிஸ்தான் தலைவர்கள் வெட்கக் கேடான, அநீதியான ஒரு காரியத்தைச் செய்தார்கள்.

எல்லை மாகாணத்தில் அதிகாரத்தில் இருந்து வந்த கான் சாகிப் மந்திரி சபையைத் தகுந்த காரணமின்றி விலக்கினார்கள்.

சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்ட தியாக சீலர்களான டாக்டர் கான் சாகிப்பையும் அவரது உத்தம சகோதரர் எல்லை காந்தி கான் அப்துல் கபார்கானையும் விசாரணை யின்றிச் சிறைப்படுத்தினார்கள்.

பொது மக்களின் கிளர்ச்சி காரணமாக, ஆறு ஆண்டுகளுக்குப் பின் அவ்விரு தலைவர்களையும் பாகிஸ்தான் சர்க்கார் விடுதலை செய்தார்கள் என்றாலும், அவர்கள் மீது விதித்திருந்த தடைகளை அறவே நீக்க வில்லை.

முஸ்லிம் லீகர்களால் விரோதி என்று கருதப்பட்ட டாக்டர் கான் சாகிப் இப்போது பாகிஸ்தான் மந்திரி சபையில் இடம் பெற்றிருப்பது, பாகிஸ்தானின் கொள்கை மாற்றத்துக்குச் சிறந்த அறிகுறி என்பதில் சந்தேகமில்லை.

அதிலும் காஷ்மீர் இலாகா மந்திரியாக அவர் நியமிக்கப் பட்டிருப்பது யாரும் எதிர் பார்த்திராத ஆச்சரியம் ஆகும்.


டாக்டர் கான் சாகிப் லண்டனில் நேருஜியுடன் படித்தவர். பிறகு இந்தியாவுக்கு வந்த பின் இருவரும் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர்.

மாணவர்களாக இருந்தபோது அவர்களுக்குள் ஏற்பட்ட நெருங்கிய நட்பு இன்றளவும் சிறிதும் குன்றாமல் இருந்து வருகிறது.

இதைத் தவிர, டாக்டர் கான் சாகிப் இந்திய மக்களின் பேரபிமானத்துக்கும் பெரு மதிப்புக்கும் பாத்திரராக இருந்து வருகிறார்.

அப்படிப்பட்டவர் மீது பாகிஸ்தான் தலைவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்; இந்தியா-பாகிஸ்தான் தகராறின் அடிப்படையான காஷ்மீர் விவகாரத்தை அவரது நிர்வா

அதிலும் வெற்றி!



பிரிட்டிஷார் 1947-ம் வருஷத்திலேயே இந்தியாவை விட்டு வெளியேறினார்கள். பிரஞ்சுக்காரர்கள் 1954 நவம்பர் மாதம் 1-ந் தேதிதான் பிரஞ்சிந்தியப் பிரதேசங்களை இந்தியர்களிடம் ஒப்படைத்து விட்டுக் கப்பலேறினார்கள்!

கத்தில் ஒப்படைத்துள்ளனர்; பாகிஸ்தானின் உத்தாரணத்துக்கு, எதிர்கால நன்மைக்கு, கான் சாகிபின் ஒத்துழைப்பும் தொண்டும் அவசியம் என்பதை உணர்ந்துள்ளனர்.

இந்தியா - பாகிஸ்தானின் இன்றையத் தகராறைக் கவனிக்கும்போது, பாகிஸ்தான் தலைவர்களின் மனமாறுதல் ஆச்சரியகரமானது.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் குலாம் மூகமது இந்தியாவுடன் நேச உறவு வைத்துக் கொள்வதில் ஆர்வம் உள்ளவர்; காஷ்மீர் பிரச்னையையும் மற்றப் பிரச்னைகளையும் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் அவர் அக்கறை கொண்டுள்ளார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மனக் கசப்பை உண்டாக்கி யுள்ள காஷ்மீர் பிரச்னையும் இதர தகராறுகளும் சுமுகமாகத் தீருவதற்கு, நேர்மையும் நிர்வாகத் திறனும் உள்ள டாக்டர் கான் சாகிபின் நியமனம் உதவியாக இருக்கும்.

மேற்படி நியமனத்தைப் பாகிஸ்தான் பிரமுகர்களும் மக்களும் வரவேற்றிருப்பதிலிருந்து, காஷ்மீர் பிரச்னையை முற்றவிடப் பாகிஸ்தான் பொது மக்கள் விரும்ப வில்லை என்பதும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளியாகி யிருக்கிறது.

டாக்டர் கான் சாகிப் மந்திரி சபையில் இடம் பெற்றிருப்பதன் பலனாக, பாகிஸ்தானுக்குப் பெரும் தலைவலியாக இருந்து வரும் பாக்டூனிஸ்தான் பிரச்னையும் தீருவதற்கு வழி ஏற்படலாம்.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை மக்களின் உண்மையான பிரதிநிதிச் சபை அல்ல என்று கான் அப்துல் கபார்கான் அடிக்கடி கூறி வந்தார்.

பாகிஸ்தான் நிர்வாகம் நடத்த திறமை வாய்ந்த தலைவர்களிடம் இல்லை என்று கூறவும் எல்லை காந்தி தயங்கவில்லை.

அதைப் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலும் பிரதமருமே இன்று ஒத்துக் கொண்டு விட்டார்கள்.

எல்லை காந்தி கூறிய இரு பெரும் குறைகளுக்கும் பரிகாரம் தேடி விட்டார்கள்.

"பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள புது மந்திரி சபை, பல கட்சிப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டு மந்திரி சபை அல்ல, திறமையை அடிப்படையாகக் கொண்ட மந்திரி சபை" என்று ஜனாப் மூகமது அலியே குறிப்பிட்டுள்ளார்.

ஜனாப் மூகமது அலியின் பழைய மந்திரி சபையில், காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக யுத்த கோஷம் செய்தவர்கள், மத வெறி, துவேஷப் பிரசாரம், போட்டி, பொறாமை முதலியவற்றிற்குக் காரண புருஷர்களாக இருந்தவர்கள் விலக்கப்பட்டு விட்டார்கள்; சமாதான நோக்கமும் நிர்வாகத் திறமையும் உள்ளவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

எனவே, சென்ற ஏழு வருஷ காலமாகத் தாங்கள் அனுஷ்டித்து வந்த கொள்கை அபாயகரமானது, பாகிஸ்தானின் அமைதிக்கும் எதிர்கால க்ஷேமத்துக்கும் ஏற்றதல்ல என்பதை இப்போது பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர் என்பதையே அங்கு மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத மாறுதல்கள் காட்டுகின்றன.

இனிமேலாவது பாகிஸ்தானுக்கு நல்ல காலம் பிறக்கலாம்; இந்தியா-பாகிஸ்தான் உறவில் புதிய கட்டம் ஆரம்பமாகலாம் என்ற நம்பிக்கையைப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள மந்திரி சபை மாறுதல் உண்டாக்கி யிருக்கிறது.

நவ வாழ்வு அளித்த நன்னாள்!

பாரத மக்களுக்கு, 1954ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்த நன்னாள்! பிரஞ்சு இந்திய மக்களுக்குப் புது வாழ்வு அளித்த திருநாள்! பாரத சரித்திரத்தில் நிரந்தரமான இடம் பெற்ற பொன் நாள்!

1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி பாரத அன்னையைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலி தகர்ந்தது. எனினும், பாரதத் தாயின் புனித தேகத்தில் முன்போல் இருந்து வந்த பிரஞ்சு ஆதிக்கம் சென்ற திங்கட்கிழமை தான் மறைந்தது. பாரத நாட்டில் எஞ்சியுள்ள அன்னியத் திட்டுப் பிரதேசங்களை அமைதியாக மீட்போம் என்று சில வருஷங்களுக்குமுன் ஜெயபுரி காங்கிரஸ் மகா சபை செய்த சபதம் அந்தச் சுபதினத்தில் நிறைவேறியது.

புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் இந்த நாலு பிரதேசங்களிலிருந்தும் பிரஞ்சு ஆதிக்கம் மறைந்த அந்தத் திருநாளை அப் பிரதேச மக்கள் குதூகலமாகக் கொண்டாடினார்கள்.

அந்தப் பிரதேசங்களில் சென்ற இரண்டரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரஞ்சுக் கொடி இறங்கி, பாரதத் தாயின் மணிக் கொடி ஏற்றுவிக்கப் பட்டது. மேற்படி கொடியேற்று வைபவம் அங்குள்ள மக்களின் வாழ்வும் அந்தஸ்தும் வானோங்கி உயர்வதை உலகத்துக்குக் காட்டியது. அத் திருநாளை ஒட்டிக் காட்சி அளித்த தீபாலங்காரங்கள், பிரஞ்சு இந்திய மக்களின் அந்தகார வாழ்வை அகற்றிய சுதந்திர ஜோதியாக மினிர்ந்தன. அந்த நாலு கடற்கரைப் பிரதேசங்களிலும் ஒலித்த பாரதியாரின் கீதங்களும் மக்களின் சந்தோஷ ஆரவாரங்களும் கடல் அலைகளைக் காட்டிலும் கம்பீரமாக ஆர்த்தெழுந்தன.

அன்று புதுச்சேரி மக்கள் புதுச்சேரி பாரதி ஞாபகச் சின்னக் கமிட்டியின் கட்டிடத்தில் எல்லோருக்கும் முன்னதாகத் தாயின் திருக்கொடியை ஏற்றுவித்ததன் மூலம், தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் புத்துயிர் அளித்த, சுதந்திர தேவியின் பரம பக்தரான மகாகவி பாரதியாருக்கு அஞ்சலி செய்தார்கள்; தங்களுக்கும் பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

தென்னிந்திய பூமியில் ஓர் அங்குலம்கூட அன்னியரின் ஆதிக்கத்தில் இல்லை என்று இனி தென்னிந்தியர்கள் உலகத்தின் முன்னிலையில் பெருமிதம் கொள்ளலாம்.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் விடுதலைக்காகச் சென்ற பல வருஷங்களாகப் போராடித் தாய் நாட்டுடன் ஐக்கியம் அடைவதில் வெற்றி பெற்ற வீரத் தலைவர்களுக்கும் தேச பக்தர்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.

கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

திருவாங்கூர் - கொச்சி பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் போக்கு, கழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற கதையாக இருக்கிறது. மேற்படி கமிட்டியார், ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் சமர்ப்பித்துள்ள யாதாஸ்து அத்தகையதாக இருக்கிறது. அதில் அவர்கள் தனிக் கேரள ராஜ்யம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் டிருக்கிறார்கள். தாராளமாகத் தனி ராஜ்யம் அமைத்துக் கொள்ளட்டும். அவர்களின் மேற்படி கோரிக்கைக்கு இங்கு யாரும் குறுக்கே நிற்க விரும்பவில்லை.

அடுத்தபடியாக, தி. கொ. ராஜ்யமும் மலையாளப் பிரதேசங்களும் சென்னையுடன் இணைக்கப்படுவதென்ற யோசனையைத் தாங்கள் ஏறெடுத்தும் பார்க்க முடியாது என்று குறிப்பிட் டிருக்கிறார்கள். ரொம்பவும் சரி. அவர்கள் சென்னையுடன் இணைந்திருக்கத்தான் வேண்டும் என்று வற்புறுத்துவோர் தமிழ் நாட்டில் இல்லை.

ஆனால், தி. கொ. ராஜ்யத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் வாழும் ஒன்பது தாலூக்காக்களைச் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கக் கூடாது; அவ்விதம் சேர்ப்பது நேர்மையற்றதாகும்; கேரளத்தின் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாகும் என்று தி. கொ. பிரதேச காங்கிரஸ் குழுவினர் கூறி யிருப்பதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.

எந்த அடிப்படையான காரணத்தைக் கொண்டு அவர்கள் தனி கேரள ராஜ்யம் கோருகிறார்களோ, அதே காரணத்தைக் கொண்டுதான் தி. கொ. ராஜ்யத்தில் தமிழர் வாழும் ஒன்பது தாலூக்காக்களைச் சென்னை ராஜ்யத்துடன் இணைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவ்வாறு இணைப்பது கேரள ராஜ்யத்தின் நலனுக்கு உகந்ததா, இல்லையா என்ற பிரச்னை எழுவதற்கே இல்லை. தனி கேரள ராஜ்யம் கோருவோர், அவ்வாறு தனி ராஜ்யம் ஏற்படுவது சென்னை ராஜ்யத்தின் நலனுக்கு உகந்ததா என்று பார்க்கிறார்கள்! பாஷைவாரி மாகாணக் கொள்கைக்கு இணங்க, மலையாளிகள் கேரள ராஜ்யம் கோருவது எவ்வளவு நியாயமோ, அதுபோலவே தி. கொ. ராஜ்யத்தில் வாழும் தமிழர்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசங்கள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்பது நியாயம் அல்லவா! எனவே, தி. கொ. ராஜ்யத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களைக் கொடுக்க மாட்டோம் என்று கூறுவது, சென்னைமாநகரைத் தமிழ் நாட்டுக்கு விட மாட்டோம் என்று ஆந்திரப் பிரமுகர்கள் கூறியதைக் காட்டிலும் மோசமாக இருக்கிறது.

* * *

திருவாங்கூர்த் தமிழர்கள், தாங்கள் வாழும் பிரதேசங்கள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பல வருஷங்களாகப் போராடி வருகிறார்கள். அதற்காக அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களும் செய்த தியாகங்களும் அற்ப சொற்பமல்ல.

தங்களுடைய தர்ம நியாயமான கோரிக்கை நிறைவேறுவதற்காக அவர்கள் செய்த முயற்சிகள் பலன் கொடுக்காததாலேயே, திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் சில மாதங்களுக்கு முன் நேரடி நடவடிக்கையில் இறங்க நேர்ந்தது. அதன் விளைவாகத் திருவாங்கூர்த் தமிழர் வாழும் பிரதேசங்களில் போலீஸ் ஆட்சியும் அடக்குமுறை தர்பாரும் தாண்டவமாடின. இன்னமும் அடக்குமுறைகள் நின்றதாகத் தோன்றவில்லை. போலீசார் பொதுக் கூட்டத்தின் பேரில் சுட்ட சம்பவத்தைப் பற்றி விசாரிப்பதற்குப் பட்டம் சர்க்கார் ஒரு மலையாள நீதிபதியை நியமித்திருக்கின்றனர்.

இந்த விசாரணையினால் பலன் ஏதும் விளையப் போவதில்லை.

திருவாங்கூர்த் தமிழர்கள் விஷயத்தில் காங்கிரஸ் மேலிடத்தார் சிறிது கருணை காட்டி யிருந்தால், அப்பிரச்னை இவ்வளவு தூரத்துக்கு முற்றியிராது.

"திருவாங்கூர்த் தமிழர்ப் பிரச்னை இந்திய தேசிய மகா சபையின் கொள்கைக்கோ, ஜனநாயக தர்மத்துக்கோ முரணானதல்ல." அப்படி யிருந்தும் அவர்களுக்கு நியாயம் கிடைக்காதது பரிதாபகரமான விஷயம் அல்லவா!

திருவாங்கூர்த் தமிழர்களைக் காங்கிரஸ் மேலிடத்தார் கைவிட்டு விட்டார்கள். தமிழ்நாடு காங்கிரசும் திருவாங்கூர்த் தமிழர்கள் விஷயத்தில் அக்கறை கொள்ள வில்லை. அவர்களுடைய கோரிக்கைகளை ஆதரித்தும், திருவாங்கூர்–கொச்சி சர்க்காரின் கோரமான அடக்கு முறைகளைக் கண்டித்தும் தமிழ்நாடு காங்கிரசின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டமாவது நடைபெற்றதாகத் தெரியவில்லை. இவ்வாறாக, திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைச் சேர்ந்தவர்களை எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். போதாக்குறைக்கு, "தமிழர்கள் வாழும் தாலுக்காக்களை எக்காலத்தும் எங்கள் கைப் பிடியிலிருந்துவிட மாட்டோம்" என்று இப்போது மலையாளிகள் கூசாமல் கூறத் துணிந்திருக்கிறார்கள். இந்த இக்கட்டான நிலையில் திருவாங்கூர்த் தமிழர்களைக் கடவுள்தான் கைவிடாமல் காப்பாற்ற வேண்டும்!

பிரச்னை தீரச் சிறந்த வழி

கொழும்பு, அக்டோபர் மீ 29உ.

தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் இவ்வாரம் திருகோண மலையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்திய பொழுது கொத்தலாவலை அரசாங்கத்துக்குச் சரியான ஒரு கேள்வி போட்டார். அவர் சொன்னார்:

"இந்தியப் பிரச்னை ஒரு வகுப்புவாதப் பிரச்னையென்பதில் சந்தேகமே யில்லை. இலங்கையிலுள்ள அரசியல்வாதிகளுக்கு இந்தியப் பிரச்னை ஒரு நல்ல பிரசாரமாகப் பயன்பட்டு வருகிறது. தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சர்வ சிங்கள ராஜ்யத்தை ஸ்தாபிப்பதே இவர்களுடைய இலட்சியம். ஆனால் இந்தியப் பிரச்னையைப் பொருளாதாரப் பிரச்னையென்றும், இந்நாட்டின் பொருளாதாரம் தாங்காது என்பதற்காகவே பல ஆயிரம் இந்தியர்களை வெளியேறச் சொல்லுவதாயும் அரசாங்கம் பறைசாற்றுகிறது. பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கப் பொருளாதார முறையில் நடவடிக்கை எடுப்பதற்கென்ன!

"வடமேற்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கரா நிலம் தரிசாகக் கிடக்கிறது. அவற்றில் விவசாயம் செய்ய ஆள் பிடிக்கத் தீவிரமாக முயன்றும் வெற்றி பெற முடியவில்லை. நல்ல உழைப்பாளிகளான இந்தியர்களின் பிரஜா வுரிமையைப் பறித்து நாடு கடத்த முயற்சியாமல் அவர்களைத் தரிசு நிலங்களில் குடியேற்றினால் நாடு செழிக்கும். அரசாங்கம் ஏன் இந்த மேலான வழியைக் கடைப்பிடிக்கக் கூடாது!"

மேற்படி கேள்விக்கு இலங்கை சர்க்கார் என்ன பதில் சொல்ல முடியும்!

பிரிவுபசாரம்

இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ ஸி. ஸி. தேசாய் நவம்பர் 6-ம் தேதி தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புகிறார். அவருக்குப் பிரியாவிடை கூறுவதற்காக அடுத்தடுத்துப் பல உபசார விருந்துகள் நடைபெறுகின்றன. தீபாவளிப் பண்டிகை யன்று ஸ்ரீ தேசாய் அளித்த ஒரு விருந்துக்கு கவர்னர் ஜெனரல் ஸர் ஆலிவர் குணதிலகா, பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தொண்டமான், தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஸ்ரீ செல்வநாயகம் முதலான சர்வ கட்சித் தலைவர்களும் வந்திருந்தார்கள்.

ஆங்கிலப் பத்திரிகையின் சேவை

நான்கு மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட "கார்டியன்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை வட இந்திய வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்கு ஒரு நிதியை ஆரம்பித்து ரூ. 10,600 வரை வசூல் செய்து இவ்வாரம் தீபாவளிப் பண்டிகையின் பொழுது பாரதப் பிரதமருக்கு அனுப்புவதற்காக இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ ஸி. ஸி. தேசாயிடம் சமர்ப்பித்தது. இலங்கைப் பிரதம மந்திரியையும் சர்க்காரையும் தினசரி கடுமையாகத் தாக்கி எழுதாவிட்டால் இந்தப் பத்திரிகையின் முதலாளிக்குத் தூக்கம் வராது. அவர் பிரதம மந்திரியிடமிருந்தே முதல் நன்கொடையாக ரூ. 1000 பெற்று வெள்ள நிவாரண நிதியை ஆரம்பித்தார். வசூலாகிய தொகையையும் பிரதம மந்திரியைக் கொண்டே ஸ்ரீ தேசாயிடம் வழங்கச் செய்தார். இந்த வைபவத்தில் பிரதம மந்திரி பேசிய பொழுது "கார்டியன் பத்திரிகை ஆரம்பித்த சொற்ப காலத்துக்குள் இரண்டு பெரிய சேவைகள் செய்திருக்கிறது. ஒன்று இந்திய வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்கு நிதி திரட்டி உதவியது. மற்றொன்று சர்க்காரை ஓயாமல் ஒழியாமல் கண்டித்துக் கொண்டே யிருப்பது" என்றார்.

பத்திரிகையின் அதிபர் ஸ்ரீ கில்பர்ட் பெரைரா பேசுகையில் "தொகை சொற்பமா யிருப்பது எங்களுடைய வறுமையைக் குறிப்பிடுகிறதே தவிர இந்தியாவிடம் எங்களுக்கு உள்ள அன்பை அல்ல" என்று குறிப்பிட்டார்.

புதிய சங்கம்

கொழும்பில் இலங்கை இந்திய கலாசார சங்கம் என்ற பெயருடன் நவம்பர் 3-ம் தேதி ஒரு புதிய ஸ்தாபனம் இரு தேச நல்லுறவையும் வளர்க்கும் இலட்சியத்துடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட விருக்கிறது. நேருஜீ குடும்பத்தின் நெருங்கிய நண்பரான ஸ்ரீ எஸ். சோமசுந்தரமும் பிரபல பௌத்தத் தலைவரான ஸ்ரீ ராஜா ஹேவா விதார்னேயும் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு வருமாறு சகல வகுப்புப் பிரமுகர்களுக்கும் அழைப்புகள் அனுப்பியிருக்கிறார்கள்.

திருப்பாவை திவ்யப் பிரபந்தம் சம்பந்தமாக நவம்பர் மாதம் 4, 7, 11, 13 தேதிகளில் காலை 7·05 மணிக்கு இலங்கை வானொலியில் வீரகேசரி செய்திப் பகுதி ஆசிரியர் ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் எம். ஏ. ஒலிப் பதிவு செய்த ஐந்து சொற்பொழிவுகள் ஒலிபரப்பப் படுகின்றன. —ரஜனி





பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

5, சிங்கராச்சாரி தெரு, ... திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ⁘ மதராஸ் – 5
தந்தி: 'EVERMANS' . . . . போன்: 85834

சீட்டில் சேருவதற்கான கடைசி தேதி 20-11-54 முதல் ஏலத் தேதி 27-11-54

மாதாந்திர சீட்டுகள் (4-வது சனிக்கிழமை ஏலங்கள்)

25 மாதங்கள் — 25 மெம்பர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம்: மானேஜிங் டைரக்டர்

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை

எமது நேயர்களின் சௌகரியத்திற்காக B-6, பிளாக் தெ. 3, டெல்லி ஆஜ்மீர் கேட் ஸ்கீம், புது டெல்லி என்னும் விலாசத்தில் எங்கள் கிளை ஆபீஸ் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.


விடுதலை வெற்றி விழா
விடுதலை வீரர்களே வருக வருக

விடுதலை வெற்றி விழா!

●

பிரஞ்சிந்தியாவைச் சேர்ந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் ஆகிய பிரதேசங்கள் நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்தியாவுடன் இணைந்து விட்டன. புதுச்சேரிக்கு அருகில் உள்ள கீழூர் என்ற கிராமத்தில் பிரஞ்சிந்திய மக்களின் பிரதிநிதிகள் கூடித் தங்கள் பெருவாரியான வாக்குகளால், சுமார் இருநூற்று எண்பது வருஷத்திய பிரஞ்சு ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டனர். சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த வைபவத்தின் காட்சிகளையெல்லாம் இந்தப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

1. இதுதான் கீழூர் வாக்குச் சாவடி. பிரஞ்சிந்திய விடுதலைக்குச் சாதகமாக வோட்டளிக்கப் பிரஞ்சிந்திய மக்களின் பிரதிநிதிகள் 'க்யூ' வரிசையில் நிற்கின்றனர்.

2. விடுதலைக்குச் சாதகமாக வோட்டளித்து விட்டு, மலர்ந்த முகத்துடன் வந்து நிற்கிறார் ஸ்ரீ முத்துக்குமரப்ப ரெட்டியார் அவர்கள்.

3. காரைக்கால் விடுதலை இயக்க வீரர்களுக்குச் சக்தி விலாஸ் பஸ் சர்வீஸ் அதிபர் ஸ்ரீ வீரப்பப் பிள்ளை வரவேற்பு அளிக்கிறார்.

4. கீழூர் மகாநாட்டில் கலந்து கொண்ட பிரஞ்சிந்திய மக்கள் பிரதிநிதிகளும், இந்தியத் தூதர் ஸ்ரீ கேவல் சிங்கும், பிரஞ்சு வெளி நாட்டிலாகா அதிகாரி ஸ்ரீ பியரே லாண்டேயும்.

5. காரைக்கால் தலைவர் ஸ்ரீ பக்கிரி சாமிப் பிள்ளையைப் பிரஞ்சிந்திய இணைப்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. எஸ். வெங்கட கிருஷ்ண ரெட்டியார் வரவேற்கிறார்.

6. பிரஞ்சிந்திய விடுதலைக்குச் சாதகமாக வோட்டளித்து விட்டுத் திரும்பும் தங்கள் தலைவர்களை வரவேற்கக் கீழூர் சாலையில் இருபுறத்திலும் மக்கள் சூழ்ந்து நிற்கின்றனர்.

7. விடுதலை இயக்கத் தலைவர்களைக் கொம்பு, மேளம், நகரா, தப்பட்டை முதலிய கிராம வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர்.

8. 10. மதுகரையில் நடந்த விடுதலை இயக்கத் தற்காப்புப் படை அணி வகுப்பைப் பார்வையிடத் தலைவர்கள் செல்கின்றனர்.

9. பிரஞ்சிந்திய விடுதலைக்குச் சாதகமாக வோட்டளித்த ஸ்ரீ இ. ஜ். பிள்ளை (குபேர்), ஸ்ரீ கே. முத்துப் பிள்ளை, ஸ்ரீ வெங்கடசுப்ப ரெட்டியார் ஆகிய பிரஞ்சிந்தியத் தலைவர்கள்.





அமரதாரா

அத்தியாயம் 19

இரண்டு வருடத் தவணை

இந்தக் கடும் சிறைச் சாலையிலேயும், என்னிடம் அநுதாபம் காட்டும் இரண்டொருவர் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். வயது முதிர்ந்த சிறைச்சாலைச் சேவகர் ஒருவர் நேற்று என்னைப் பார்க்க வந்திருந்தார். இரும்புக் கதவுக்கு வெளியில் நின்றபடியே என்னுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

நான் ஸினிமா வானத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த நட்சத்திரமாக விளங்கிய நாட்களில் அவர் நான் நடித்த படங்கள் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாராம். அந்தப் படங்களைப் பற்றி அவர் வெகுவாகப் புகழ்ந்து பேசினார். எனக்கு அந்தப் பேச்சு வேட்பாக இருந்தது. அப்படியெல்லாம் ஒரு சமயம் புகழ் அடைந்-



திருந்த காரணத்தினாலேயே இவ்வளவு பெரிய துன்பம் எனக்கு நேர்ந்து விட்டது என்று எண்ணுகிறேன். எந்தவிதப் பெயரும் புகழும் இல்லாமல் இந்த உலகில் எத்தனையோ பேர் வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு அமைதியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது? எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்றமும், தாழ்ச்சியும் இல்லை. ஆனால் புகழும் பிரபலமும் அடைந்தவர்களுடைய வாழ்க்கையோ அதற்கு நேர் மாறாக இருக்கிறது. இன்றைக்குப் பல்லாயிரம் மக்கள் பார்த்து வியந்து போற்றிப் புகழ்கிறார்கள்; முகஸ்துதி செய்வதற்கென்று வந்து சூழ்ந்து கொள்கி

ஞர்கள். நாளைக்குத் திடீரென்று அதல பாதாளத்தில் தள்ளி விடுகிறார்கள். ஏனென்று கேட்பார் இல்லை; அநுதாபப் படுவாரும் இல்லை. சுற்றிச் சூழ்ந்து புகழ்ச்சி பாடியவர்கள் எல்லாம் எங்கே? அதே புகழ்ச்சிப் பாடல்களைப் பாடுவதற்குப் புதிதாகப் பிரபலமாகி யிருக்கும் ஒருவரைத் தேடிக் கொண்டு அவர்கள் போய் விடுகிறார்கள்!

இந்தச் சிறைச்சாலைச் சேவகர் அவ்வா றில்லாமல் இந்தத் துர்த்தசையிலும் என்னிடம் பிரியமாகப் பேசியது எனக்குத் திருப்தியாகவே இருந்தது. ஆனால், அவர் என்னுடைய பழைய பொய் வாழ்க்கையையும் போலிப் புகழையும் நினைவூட்டியது எனக்கு மிகவும் கசப்பா யிருந்தது.

அப்புறம் அச் சேவகர் என் தந்தையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். "சர்க்கஸ்காரர் காசிலிங்கத்தின் மகள் நீ என்று சொல்லுகிறார்களே? அது உண்மையா, தாயே?" என்று கேட்டார்.

"ஆமாம்; அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்றேன்.

"நன்றாய்த் தெரியும்; அவருடைய சர்க்கஸ் வித்தைகளை யெல்லாம் பார்த்திருக்கிறேன். அறுபதடி உயரத்தில் நின்று 'கரணம் தப்பினால் மரணம்' என்ற நிலையில் செய்த அற்புத ஆட்டங்களெல்லாம் பார்த்திருக்கிறேன்! என்னமோ, போதாத காலம், அவரைச் சிறைச் சாலையில் கொண்டு வந்து தள்ளி விட்டது. அப்போதும் நான் இந்த உத்தியோகத்தில் இருந்தேன். என்னாலியன்ற உதவிகளையும் செய்து வந்தேன். ஆனால் விதி யாரை விட்டது? சிறையில் ஒரு நாள் நடந்த கலகத்தில் அவரும் சிக்கிக் கொண்டார்!" என்றார் அந்த வயோதிகச் சிறைச்சாலைச் சேவகர்.

அந்தக் கலகத்தைப் பற்றி அவரிடம் விவரம் கேட்டேன்.

"சிறையிலே அப்போது ஒரு புரட்சிக்காரன் இருந்தான். அவனைக் கம்யூனிஸ்ட் என்றும் சொன்னார்கள். பிரிட்டிஷ் சர்க்காரைக் கவிழ்ப்பதற்காக வெடிகுண்டு செய்தானென்றும், புரட்சிக்குப் பணம் சம்பாதிப்பதற்காகக் கொள்ளை அடித்தானென்றும் அவனை ஏழு வருஷம் தண்டித்திருந்தார்கள். சிறைச்சாலையில் அவன் எப்போது பார்த்தாலும் விஷமம் செய்து கொண்டே யிருப்பான். மற்றக் கைதிகளைக் கலகம் செய்யும்படி தூண்டி விட்டுக் கொண்டே இருப்பான். சர்க்காரைப் பற்றியும் சர்க்கார் அதிகாரிகளைப் பற்றியும் பணக்காரர்களைப் பற்றியும் முதலாளிகளைப் பற்றியும் ஓயாமல் திட்டிக் கொண்டிருப்பான். 'ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறார்கள்; இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள்; தொழிலாளிகளின் எலும்புகளை நொறுக்கிப் போட்டு மாடமாளிகைகளை எழுப்புகிறார்கள்'' என்றெல்லாம் பேசுவான். பல கைதிகள் அவனுடைய வலையில் அகப்பட்டுக் கொண்டு வீணில் கஷ்டத்தை அடைந்தார்கள். பாவம்! உன் தந்தையும் அவனுடைய வலையில் சிக்கிக் கொண்டார். அதனால் ஒரு வருஷம் அதிகமாகச் சிறையில் இருக்க நேர்ந்தது!'' என்றார்.

என்னை வளர்த்த மகான் மந்திரமூர்த்தி ஊகமாகச் சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொண்டேன். அதற்கும் இதற்கும் பொருத்தமாகவே இருந்தது.

"இந்து! உன் தகப்பனார் இருநூறு முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பிறந்திருக்க வேண்டும். பிறந்திருந்தால், ஒரு மாபெரும் வீரனாகப் புகழ் பெற்றிருப்பான். பதினாயிரம் இருபதினாயிரம் வீரர்களுக்குப் படைத் தலைமை வகித்துப் பகைவர்களுடன் போராடி யிருப்பான். கோட்டை கொத்தளங்களைத் தகர்த்து வென்றிருப்பான். சிவாஜி மகாராஜா, குரு கோவிந்தசிங் முதலியவர்களைப்போல் ஒரு இராஜ்யத்தையே ஸ்தாபித்திருந்தாலும் ஸ்தாபித்திருப்பான். அதற்கு வேண்டிய மனோ தைரியம், மதி நுட்பம், தேக பலம் எல்லாம் இருந்தன. அநீதிகளையும் அக்கிரமங்களையும் கண்டு கொதிக்கும் இயல்பும் படைத்திருந்தான். ஆனால் அவ்வளவும் வீணாயிற்று. இந்த நாளில் பிறந்தபடியால், அவனுடைய ஆற்றல்கள் எல்லாம் பயனில்லாமல் போய் விட்டன!'' என்று அடிக்கடி மந்திரமூர்த்தி சொல்வார்.

என் தந்தை காசிலிங்கம் மறுபடியும் சர்க்கஸ் கம்பெனியில் சேரப் போவதாகச் சொல்லி விட்டுப் போனார் அல்லவா? வேலூரில் சர்க்கஸ் கூடாரம் தீப்பிடித்து எரிந்த பிறகு, அதன் சொந்தக்காரர் ஸாண்டோ சங்கராம் மனமுடைந்து இறந்து போனாராம். சங்கராமின் சகோதரர் சிவராம் என்பவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கம்பெனியை மறுபடியும் சேர்த்து நடத்திக் கொண்டு வந்தாராம். ஆனால் முன் மாதிரி சர்க்கஸ் கம்பெனி அவ்வளவு பிரபலம் அடையவில்லை; வருமானமும் கிடைக்கவில்லை. ஆகையால் காசிலிங்கம் சர்க்கஸ் கம்பெனிக்குப் போனபோது, "சேர்த்துக் கொள்ளச் சம்மதந்தான்; ஆனால் சம்ப

ளம் கொடுக்க வசதி இல்லை!" என்றார்கள். "எனக்குச் சம்பளமே வேண்டாம். சங்கரராம் சர்க்கஸுக்கு என்னால் விபத்து வந்தது. அதற்குப் பரிகாரம் செய்ய விரும்புகிறேன்" என்றார் காசிலிங்கம். அவரால் மீண்டும் சர்க்கஸ் கம்பெனி பிரபலமடைந்து லாபகரமாக நடக்கலாம் என்றெண்ணிச் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய ஆசை நிறைவேறவில்லை. காசிலிங்கம் ஏதோ பெயருக்குச் சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்திருந்தாரே தவிர அவர் வேறு ஏதேதோ காரியங்களில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிந்தது. இது சர்க்கஸ் முதலாளிக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அங்கேயும் காசிலிங்கத்தின் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை.

சில மாதங்களுக்கொருமுறை காசிலிங்கம் குங்குமத்துறைக்குத் திடீரென்று வருவார். என் அன்னைமீது அவர் கொண்டிருந்த அன்பு மட்டும் எள்ளளவும் மாறவில்லை. முதல் தடவை என் அன்னை அவரைக் கண்டதும் முகமலர்ச்சியுடன் வரவேற்றாள். பிறகு தன்னை விட்டு விட்டுப் போவது குறித்துக் குறை கூறினாள். கண்ணீரும் விட்டாள். காசிலிங்கம் அவளுக்குச் சமாதானம் கூறினார். "உன்னை விட்டு விட்டுப் போவதில் எனக்கு மட்டும் சந்தோஷம் என்று நினைக்கிறாயா? ஒவ்வொரு நிமிஷமும் உன் நினைவாக இருக்கிறேன். ஆண் பிள்ளை என்றால் ஏதாவது வேலை வேண்டாமா? குடும்ப காலட்சேபத்துக்காவது சம்பாதிக்க வேண்டாமா? உன் சொந்தக்காரர்களிடமிருந்து உன்னை அழைத்துக் கொண்டு வந்துவிட்ட நான் உன்னை வைத்துக் காப்பாற்றவாவது பணம் சம்பாதிக்க வேண்டாமா? இல்லாவிட்டால், உலகம் என்னைத் தூற்றாதா? என் மனச் சாட்சியே என்னை வருத்தாதா?" என்றார்.

"எனக்குச் சேர வேண்டிய என்னுடைய தாயாரின் சொத்துத்தான் நிறைய இருக்கிறதே? வழக்குப் போட்டு அதை மீட்கலாமே? அந்தச் சொத்து வந்து விட்டால் நமக்கு என்ன கவலை?" என்றாள் சந்திரமணி.

"ஆகா! வழக்குப் போடுகிற காரியம் மட்டும் என்னிடம் சொல்லாதே! வழக்குப் போட்டால் ஒன்பது வருஷம் நீடித்து நடக்கும். ஏற்கெனவே பண்ணையார் பல கேஸ்கள் நடத்திப் பாதிசொத்துக்குமேல் இழந்து விட்டார். நம்மால் மற்றப் பாதியும் போய் விடும். நமக்கு இவ்வளவு உபகாரம் செய்தவருக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம் இதுதானா? கோர்ட் பக்கமே போகக் கூடாது; வக்கீல் வீட்டு வாசலையே மிதிக்கக் கூடாது. இப்படி நான் விரதம் எடுத்திருக்கிறேன்" என்றார் காசிலிங்கம்.

"பின்னே, என்னதான் உங்கள் உத்தேசம்? இப்படியே எங்களை விட்டு விட்டுப் போய்க் கொண்டே இருப்பீர்களா? நாங்கள் பண்ணையாரின் தயவிலேயே வாழ்ந்திருக்க வேண்டியதா?" என்று சந்திரமணி கேட்டாள்.

"அப்படியெல்லாம் உன்னை நான் விட்டு விட மாட்டேன். பண்ணையாருக்கு மேலும் நான் கடன்பட மாட்டேன். கொஞ்ச காலம் பொறுத்திரு. அதற்குள் ஏதேனும் ஒரு நிலையான ஏற்பாடு செய்து விட்டு உன்னை அழைத்துப் போகிறேன்" என்றார்.

இம்மாதிரி சில தடவை வந்துவிட்டுப் போன பிறகு, ஒரு நாள் எப்போதைக் காட்டிலும் குதூகலத்துடன் காசிலிங்கம் வந்து, "என்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் ஒன்று நிறைவேறி விட்டது" என்று கூறினார்.

"இனிமேல் எங்களை உங்களுடன் அழைத்துப் போகலாம் அல்லவா?" என்றாள் சந்திரமணி.

"இல்லை, இல்லை! அதற்கு இன்னும் காலம் வரவில்லை. உன்னுடைய மாமன்மார்கள் நம்முடைய பண்ணையாரிடமிருந்து மிரட்டி உருட்டி மூவாயிரம் ரூபாய் அடித்துக் கொண்டு போனார்கள் அல்லவா? அதைத் திருப்பி வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்!" என்றார்.


அவர் கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்து வெள்ளிப் பணமாக மூவாயிரம் ரூபாயையும் எடுத்துக் கலகலவென்று கொட்டினார்.

இது இராத்திரி வேளையில் நடந்ததாகையால், பண்ணையார் மந்திரமூர்த்திக்கும் சந்திர மணிக்கும் கொஞ்சம் பயமாகவே இருந்தது.

"பணம் எப்படிக் கிடைத்தது? அவர்களே புத்தி வந்து கொடுத்தார்களா? அல்லது வேறு யாராவது மத்தியஸ்தம் செய்தார்களா?" என்று குங்குமத்துறைப் பண்ணையார் கேட்டார்.

"முதலில் பணத்தை எடுத்து வையுங்கள்; அப்புறம் சொல்கிறேன்!" என்றார் காசிலிங்கம்.

பண்ணையார் பணத்தை எடுத்து இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினார்.



உடனே காசிலிங்கம் சந்திரமணிக்கும் குழந்தைக்கும் வாங்கிக் கொண்டு வந்திருந்த பட்டுத் துணிகள், விளையாட்டுப் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்து விரித்து வைத்தார்.

"குழந்தை இந்து எங்கே? பார்த்து ரொம்ப நாளாயிற்று. அவளைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. கனவிலே கூட எனக்கு அவளுடைய ஞாபகந் தான்!" என்றார் காசிலிங்கம்.

"அப்படியானால் என்னுடைய ஞாபகம் உங்களுக்குக் கிடையாதா?" என்று கேட்டாள் சந்திரமணி.

"அழகாயிருக்கிறது. குழந்தை என் சொப்பனத்திலே மட்டும் சில சமயம் வருகிறாள். நீயோ கனவிலும் நினைவிலும் எப்போதுமே என்னுடன் இருந்து கொண்டிருக்கிறாய்!" என்று சொன்னார் காசிலிங்கம்.

இந்தச் சம்பவம் நடந்தபோது எனக்கு நாலு பிராயம் இருக்கும் என்று பிற்பாடு மந்திரமூர்த்தி சொன்னார். அப்பாவைப் பார்த்ததாக எனக்கு இந்த ஒரு தடவை தான் ஞாபகம் இருக்கிறது. கொஞ்சம் தாடி மீசை வளர்ந்திருந்த அவருடைய முகமும் நினைவு இருக்கிறது. அப்போது அவரைப் பார்த்ததும் எனக்குக் கொஞ்சம் பயமாகவே இருந்தது என்பதும் நினைவிருக்கிறது.

தூங்கிக் கொண்டிருந்த என்னை மந்திரமூர்த்தி வந்து அன்புடன் தட்டி எழுப்பி அழைத்துக் கொண்டு போனார்.



அங்கே புதிய மனிதர் ஒருவர் உட்கார்ந்திருப்பதையும் என் தாயாரின் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டிருப்பதையும் கவனித்தேன். அந்தப் புதிய மனிதர் அம்மாவை ஏதோ திட்டுகிறார் என்று நினைத்துக் கொண்டேன்.

பிறகு, அந்தப் புதிய மனிதர் தான் என் தந்தை என்று சொன்னதெல்லாம் என் மனத்தில் நன்றாய்ப் பதியவில்லை. மந்திரமூர்த்தி தான் என் தகப்பனார் என்று அத்தனை காலமும் எண்ணிக் கொண்டிருந்தேன். மீசை தாடி வளர்ந்த முகத்துடன் என் அம்மாவை அழவிட்டுக் கொண்டிருந்த மனிதர்தான் என் தகப்பனார் என்று என்னால் நம்ப முடியவில்லை. அவரிடம் போக மறுத்தேன்.

பண்ணையார் மந்திரமூர்த்தியைக் கட்டிக் கொண்டு "இதோ இருக்கிறாரே, என் அப்பா!" என்றேன்.

"நானும் உன் அப்பாதான்; அவரும் உன் அப்பாதான்! இதோ பார், உனக்காக அவர் எத்தனை விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கி வந்திருக்கிறார்!" என்றார் மந்திரமூர்த்தி.

என் தாயாரும் எவ்வளவோ எனக்கு நல்ல வார்த்தை சொன்னாள். நான் அப்படியும் கேட்காமற் போகவே கோபித்துக் கொண்டு திட்டினாள். நானும் அழத் தொடங்கி விட்டேன்.

எப்படியோ என்னைச் சமாதானப் படுத்தித் திருப்பி அழைத்துக் கொண்டு போய்த் தூங்கப் பண்ணி விட்டார்கள்.

அன்று நடந்தது ஏதோ மங்கலான கனவில் கண்டது போலத்தான் எனக்கு நினைவிருக்கிறது. பிறகு மந்திரமூர்த்தியும் என் அன்னையும் பல முறை விவரமாகச் சொன்னார்கள்.

என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி அழைத்து வருவதற்கு முன்னும் பின்னும் நடந்ததைப் பற்றி அவர்கள் சொன்னார்கள்.

என் தந்தை எனக்காக ஆடும் மரக் குதிரை ஒன்று வாங்கி வந்திருந்தாராம்.

"நீங்கள் மட்டும் நிஜக் குதிரைமேல் சவாரி செய்கிறீர்கள். குழந்தைக்கு மட்டும் மரக் குதிரை வாங்கி வந்திருக்கிறீர்களே? நீங்கள் சவாரி செய்யும் நிஜக் குதிரையிலேயே குழந்தையையும் ஏற்றி அழைத்துக் கொண்டு போங்கள்!" என்றாள் என் அன்னை.

"பேஷாக அழைத்துப் போகிறேன். இந்துவுக்கு மட்டும் பிராயம் வரட்டும். அவளுக்கு ஒரு பெரிய பாரிஜாதக் குதிரை வாங்கிக்கொடுக்கிறேன். குதிரை சவாரியும் கற்றுக் கொடுக்கிறேன். அவளை ஜான்ஸி ராணி ஆக்குகிறேனா, இல்லையா, பார்!" என்றார் என் தகப்பனார் காசிலிங்கம்.

இதை யெல்லாம் பின்னால் அறிந்த போது, எனக்குச் சந்தோஷமாகவுமிருந்தது; வருத்தமாகவும் இருந்தது. அன்றிரவு என் தந்தையிடம் போகாமல் முரண்டு பிடித்ததற்காக மிகவும் வருத்தப் பட்டேன்.

என் தாயார் அன்றைக்கு என்னிடம் கோபமாய்ப் பேசினாலும் பிறகு தன்னையே நொந்து கொண்டாள். அப்பாவைப் பற்றி என்னிடம் சொல்லி வைக்காதது தன்னுடைய தவறுதான் என்று வருத்தப் பட்டாள். பிறகு, புகைப் படக்காரர் சேகர் வந்தபோது எடுத்த விதவிதமான புகைப் படங்களை யெல்லாம் எனக்குக் காட்டினாள். அந்தப் படத்தில் என் தந்தை மீசை தாடியுடன் இராமல், களை பொருந்திய அழகிய முகத்துடன் இருப்பதைக் கண்டேன். அவர் சர்க்கஸ் வித்தைகள் செய்த போது எடுத்த படங்களையும் பார்த்துப் பார்த்து வியந்தேன். என் தந்தை இவ்வளவு சாமர்த்தியசாலி என்று தெரிந்த போது எனக்குண்டான பெருமைக்கு அளவில்லை. மறுமுறை என் தந்தை வரும் போது அவரிடம் நானே போய் "அப்பா!" என்று அழைத்து அவரைக் கட்டிக் கொண்டு கொஞ்ச வேண்டும் என்று என் குழந்தை உள்ளத்தில் ஆசை உண்டாயிற்று. ஆனால் அந்த ஆசை நிறைவேறாமலே போய் விட்டது. அப்பாவுடன் கொஞ்சிக் குலாவுவதாகப் பல முறை மனோராஜ்யம் செய்வதுடன் திருப்தி அடைய வேண்டிய தாயிற்று.

என்னைத் தூங்குவதற்கு அனுப்பிய பிறகு அன்றிரவு மேலும் முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச்சு நடந்ததாம். புருஷன்—மனைவி சண்டை என்று சொல்லுமளவுக்கு என் தந்தைக்கும் தாய்க்கும் விவாதம் நடந்ததாம்.

என் தந்தை "சந்திரமணி! அடுத்த தடவை நான் திரும்பி வருவதற்குக் கொஞ்சம் அதிக நாள் ஆகலாம். அதற்காக நீ கவலைப்படக் கூடாது!" என்று பேச்சை ஆரம்பித்தாராம்.

"எத்தனை காலம் ஆகும்?" என்று கேட்டாள் என் தாயார்.

"ஒருவேளை இரண்டு வருடங்கூட ஆகலாம்!" என்றதும், என் அன்னைக்குத்

துக்கமும் ஆத்திரமும் எரிச்சலும் அழுகையும் பொங்கிக்கொண்டு வந்து விட்டன.

"இப்போதே எங்களை அழைத்துக் கொண்டு போகும்படி நான் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன். திரும்பிவர இரண்டு வருடம் ஆகும் என்கிறீர்களே? இரண்டு வருடம் கழித்துத் திரும்பி வரும் போது நான் உயிரோடிருக்க மாட்டேன்!" என்று சந்திரமணி கூறி விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

காசிலிங்கம் என் அன்னையைச் சமாதானப் படுத்தி, அழுகை கொஞ்சம் அடங்கிய பிறகு கூறினர் :—

"உன்னையும் குழந்தையையும் விட்டு விட்டுப் போவதில் எனக்குச் சந்தோஷம் என்று நினைக்கிருயா? ஒரு நாளும் இல்லை. வேறு வழி ஒன்றும் இல்லாத படியினால் தான் சொல்கிறேன். சர்க்கஸ் வேடிக்கைக்கு இப்போதெல்லாம் மவுஸ் குறைந்து விட்டது. ஜனங்கள் பார்க்கப் பிரியப்படுவதில்லை. இரண்டணவும் நாலணவும் கொடுத்து எல்லாரும் சினிமாப் பார்க்கப் போய்விடுகிருர்கள். சர்க்கஸ் கம்பெனி நஷ்டத்தில் நடக்கிறது. ஆட்டக்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கவே முடிவதில்லை. எனக்குத் தெரிந்தவர் ஒருவர் மலாய் நாட்டிலிருந்து திரும்பி வந்திருக்கிருர். அந்த நாட்டில் தெரு வீதிகளிலெல்லாம் பணம் கொட்டிக் கிடக்கிறதாம். அவ்வளவு வளமுள்ள நாடு என்று சொல்கிருர்கள். நான் பிறந்த கிராமத்தில் பத்து முஸ்லிம்களின் வீடுகள் உண்டு. பதினைந்து வருஷத்துக்கு முன்னல் அவர்கள் எல்லாரும் ஏழைகளாயிருந்தார்கள். கூரை வீட்டில் வசித்தார்கள். அவர்களில் ஒரு வீட்டுக்காரர் மலாய் நாட்டுக்குப் போனர். அவரிடமிருந்து அடிக்கடி மணியார்டர்கள் அவருடைய வீட்டுக்கு வரத் தொடங்கின. அதைப் பார்த்து விட்டு மற்ற ஒன்பது வீட்டுக்காரர்களும் மலாய் நாட்டுக்குப் போனர்கள். இப்போது அந்தப் பத்து வீட்டுக்காரர்களும் பெரிய பெரிய மச்சு வீடு கட்டியிருக்கிருர்கள். மோட்டார் வண்டி வைத்திருக்கிருர்கள். ஒவ்வொருவரிடமும் இரண்டு லட்சம், மூன்று லட்சம் சொத்து இருக்கிறது. அவர்களில் ஒருவர் என் சிநேகிதர். என்னையும் அழைத்துக் கொண்டு போவதாகச் சொல்கிருர். அங்கே சம்பாதிப்பதற்கு எத்தனையோ வழிகள் உண்டு என்று கூறுகிருர். இரண்டு வருஷம் அங்கே இருந்து கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொண்டு திரும்பி வந்து விடுகிறேன். இல்லை, அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடலாம் என்று தோன்றினல் உங்களையும் தருவித்துக் கொள்கிறேன்."

இதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரமணி, "நீங்கள் சொல்வதெல்லாம் நியாயந்தான்; நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனல் போகும் போது எங்களையும் அழைத்துக் கொண்டு போங்கள்! அவ்வளவுதான் நான் வேண்டிக் கொள்வது!" என்ருள்.

மந்திரமூர்த்தி நடுவில் குறுக்கிட்டு, "நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து இப்படி என்னைக் கைவிட்டு விடுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்ருர்.

காசிலிங்கம் அப்போது, "இல்லை, இல்லை! குழந்தை இந்துவை அழைத்துப் போவதாக எனக்கு எண்ணமே இல்லை. அவளைப் பிறந்தது முதல் தாங்கள்தான் வளர்த்தீர்கள். அவளும் தங்களைத்தான் 'அப்பா' என்று எண்ணிக் கொண்டிருக்கிருள். அவளைத் தங்களுக்குத் தத்துக் கொடுப்பதாக நாங்களும் ஒப்புக் கொண்டிருக்கிறேம். இந்துமதி இங்கேயே இருக்கட்டும். இரண்டு வருஷம் கழித்து வந்து சந்திரமணியை மட்டும் நான் அழைத்துப் போகிறேன்!" என்ருர்.

"இரண்டு வருஷம் கழித்து என்கிற பேச்சு மாத்திரம் வேண்டாம். குழந்தையை இங்கேயே விட்டு விட்டுப் போகலாம். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. என்னை மட்டும் கட்டாயம் அழைத்துக் கொண்டுதான் போக வேண்டும்" என்ருள் சந்திரமணி.

"அங்கே போய் ஏதாவது தொழில் கிடைத்துக் கால் ஊன்றிக் கொண்ட பின்னர் அல்லவா உன்னை அழைத்துக் கொண்டு போக வேண்டும்? இப்போதே எப்படி அழைத்துப் போவது?" என்ருர் காசிலிங்கம்.

"இந்த யோசனையெல்லாம் என்னைக் கைப்பிடித்துக் கலியாணம் செய்து கொள்வதற்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். அன்றைக்கு என்னை வேறு ஆதரவு ஏதுவுமில்லாமல் தானே அழைத்துக் கொண்டு வந்தீர்கள்?"

"அது பிசகு என்று உணருகிறேன், சந்திரமணி! முன் யோசனை இல்லாமலும், தகுந்த ஏற்பாடு செய்யாமலும், உன்னை அழைத்து வந்து விட்டபடியால், ஊர் ஊராக உன்னை இழுத்து அடித்து எவ்வளவோ கஷ்டங்களுக்கு உன்னை ஆளாக்க நேர்ந்தது. மறுபடியும் அத்

தகைய தவறையே என்னைச் செய்யச் சொல்கிறாயா?'' என்று கேட்டார்.

"எனக்குக் கஷ்டம் என்று ஏன் வெறுமனே சொல்கிறீர்கள்? நீங்கள் என்னால் கஷ்டப்பட்டீர்கள் என்று சொல்லுங்கள்! மற்றவர்களுக்குக் கஷ்டம் கொடுப்பதற்குத்தானே நான் பிறந்திருக்கிறேன்!'' என்று கூறி என் அன்னை விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

இவ்விதம் அன்றிரவெல்லாம் விவாதமும் சச்சரவும் அழுகையும் சமாதானப் படுத்துவதுமாகக் கழிந்தது. ஆனாலும் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

எப்படியும் மலாய் நாட்டுக்குப் புறப்படுவதற்கு முன் இன்னொரு தடவை வந்து சந்திரமணியிடம் விடைபெற்றுக் கொண்டு போவதாகச் சொல்லி விட்டுக் காசிலிங்கம் சென்றார்.

அத்தியாயம் 20

கடைசிச் சந்திப்பு

காசிலிங்கம் அம்முறை வந்து போன பின்னர் மந்திரமூர்த்திப் பண்ணையார் என் அன்னை சந்திரமணியிடம் சில விவரங்களை மனம் விட்டுப் பேசினார்.

"சந்திரமணி! நான் சொல்லுவதைப் பற்றி நீ தப்பாக எண்ணிக் கொள்ளாதே. நீ உன் கணவனுடன் போய் வாழலாம் என்கிற எண்ணத்தை யெல்லாம் விட்டுவிடவேண்டியதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றார்.

சந்திரமணி மறுமொழி கூறாமல் மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள்.

"நான் சொல்லுவது உனக்குத் துன்பமாகவே யிருக்கும். ஆனாலும் பிறகு பெரிய ஏமாற்றமும் துன்பமும் அடைவதற்குப் பதிலாக முன்னாலேயே தெரிந்து கொள்வது நல்லதல்லவா?'' என்றார்.

அதற்கும் சந்திரமணி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நான் இதைப் பற்றிப் பேசுவது உனக்குப் பிடிக்கா விட்டால், சொல்லிவிடு. கடவுள் அறிய, உன் மனத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை'' என்றார் மந்திரமூர்த்தி.

அப்போது சந்திரமணி, "அப்பா! எனக்கு அது தெரியாதா? எனக்குத் தாயும் தந்தையுமாக நீங்களே இருந்து வருகிறீர்கள். 'அம்மை நீ அப்பன் நீ' என்று கடவுளைக் குறித்துப் பாடுவீர்களே, அந்தக் கடவுள் எனக்கு நீங்களே தான். என் மனத்தைப் புண்படுத்தத் தாங்கள் விரும்புவீர்களா? நீங்கள் சற்று முன் கூறியதையே என் உள் மனசும் சொல்லிக் கொண்டிருக்கிறது. அவருடன் இனிமேல் நான் சேர்ந்து வாழலாம் என்பதெல்லாம் பகற் கனவுதான் என்று அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. தாங்களும் அதையே சொன்னதனால் பேசாமலிருந்தேன். ஆனால் ஏன் அவ்வாறு தாங்கள் சொல்லுகிறீர்கள்? எனக்கு மனத்தில் அவ்வாறு தோன்றுகிறதே தவிர, காரணம் ஒன்றும் தெரியவில்லை. தாங்கள் அம்மாதிரி சொல்வதற்குக் காரணம் இருக்க வேண்டுமே?'' என்றாள்.

"காரணம் இருக்கிறது, அம்மா! என்னவெல்லாமோ நான் கேள்விப்படுகிறேன். சிலர் காசிலிங்கம் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். சிலர் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். நம் ஊர் மலையாளத்தின் கீழ் எல்லையில் இருக்கிறதென்று உனக்குத் தெரியும் அல்லவா? இந்த மலையில் கொஞ்ச தூரம் ஏறிப்போனால், அப்பால் மலையாளத்தின் எல்லை வந்து விடுகிறது. மலை உச்சியில் நெடுந் தூரத்துக்குப் பயங்கரமான அடர்ந்த காடு இருக்கிறது. அங்கே காட்டு யானைக் கூட்டங்கள் மந்தை மந்தையாகச் சஞ்சரிக்கின்றன. புலி, சிறுத்தை முதலிய வன விலங்குகளும் உண்டு. பிரிட்டிஷ் இராஜ்யத்துக்கு எதிராகப் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் சிலர் சர்க்கார் வாரண்டிலிருந்து தப்பித்துச் சென்று அந்தக் காட்டில் வசிக்கிறார்கள். வெடிகுண்டு போட்டும், மற்றும் ரயிலைக் கவிழ்த்தல், கொலை செய்தல் முதலிய பயங்கரமான காரியங்களைச் செய்தும் அவர்கள் இந்தத் தேசத்திலிருந்து பிரிட்டிஷ்காரர்களைத் துரத்திச் சுதந்திரம் தேட வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள். இந்த முயற்சிகளினால் தீமையே தவிர நன்மை இல்லை யென்றும், காரியமும் வெற்றி பெறாதென்றும் நம் நாட்டுப் பெரியோர்கள் பலர் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அவர்களுடைய பயங்கர இயக்கத்தை நடத்துவதற்குப் பணம் வேண்டும் அல்லவா? அதற்காகப் பாங்கிக் கொள்ளைகள், பணக்காரர் வீட்டுக் கொள்ளைகள், வழிப்பறிகள் முதலியவை

நடத்துகிறார்கள். இந்தக் கூட்டத்தின் தலைவனுக்குத் 'தென்னாட்டுப் பகத் சிங்' என்று பெயராம். சமீபத்தில் இந்த ஜில்லாவில் கூட ஒரு பாங்கிக் கொள்ளை நடந்தது. அது, ஈசுவரமூர்த்தி தலைவரா யுள்ள பாங்கி. இன்னும் கொள்ளை யடித்தவர்கள் பிடிபடவில்லை. இந்தக் கூட்டத்தில் நம் காசிலிங்கமும் சேர்ந் திருக்கிறானோ என்று நான் சந்தேகிக் கிறேன், அம்மா!'' என்றார் மந்திர மூர்த்திப் பண்ணையார்.

என் அன்னை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்து, "எனக்குக் கூட இம் மாதிரி ஏதோ இருக்க வேண்டுமென்று சந்தேகம் பல தடவை தோன்றி யிருக் கிறது. நீங்கள் எப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள், அப்பா?'' என்றாள்.

அம்மா மந்திரமூர்த்தியை "அப்பா'' என்றுதான் அழைப்பது வழக்கம். அத னால்தான் எனக்கும் அவரை "அப்பா!'' என்று கூப்பிடும் பழக்கம் ஏற்பட்டது.

மந்திரமூர்த்தி சிறிது யோசனை செய்து விட்டு, "அம்மா! இந்தத் தடவை காசி லிங்கம் வந்துவிட்டுப் போனபிறகு இந்த ஊரில் சி. ஐ. டி. க்காரர்களின் நடமாட் டம் அதிகமா யிருக்கிறது. முக்கியமாக, நம்முடைய வீட்டைக் கண்காணித்து வருகிறார்கள். சில நாளைக்கு முன்பு என் னிடம் ஒருவன் வந்து 'தோட்டக்காரன் வேண்டுமா?' என்று கேட்டான். நான் 'வேண்டாம்' என்றேன். இரண்டு வீட்டுக்கு அடுத்த வீட்டில் அவன் தோட் டக்காரனாக அமர்ந்திருக்கிறான். அடிக் கடி நம் வீட்டில் கண்ணோட்டமா யிருக் கிறான்! மற்றொரு முறை காசிலிங்கம் நம் வீட்டுக்கு வருவதே அபாயகர மாகலாம்!'' என்றார்.

"நானும் அப்படியே சந்தேகப்பட்டுக் கொண் டிருந்தேன். ஆகையினாலேயே அவர் மலாய் நாட்டுக்குப் போகும் யோசனையை அவ்வளவு சீக்கிரம் நான் ஒப்புக் கொண்டேன்'' என்றாள்.

"ஆனால் நீயும் காசிலிங்கத்தோடு போவது என்று பிடிவாதம் பிடித்தால், அவனால் போகவே முடியாது. சி. ஐ. டி. கண்காணிப்பில் விழுந்தே தீர வேண்டும். சந்திரமணி! நீ இங்கேதான் என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் வற் புறுத்த வில்லை. வேதாந்த சாஸ்திர மெல்லாம் படித்து நான் வைராக்கிய சிந்தையை உண்டுபண்ணிக் கொண்டிருக் கிறேன். நீங்கள் என் வீட்டில் வந்து வசிக்க இவ்வளவு நாள்தான் கொடுத்து வைத்திருந்தேன் என்று எண்ணிக்கொள் கிறேன். ஆனால், இப்போதே நீயும் புறப் படுவதாகச் சொல்வது உசித மல்ல!'' என்றார் குங்குமத்துறைப் பண்ணையார்.

சந்திரமணி கண்ணீர் பெருக்கிக் கொண்டு, "அப்பா! என்னை நன்றி கெட்டவள் என்று எண்ண வேண்டாம். எங்களுக்குத் தாங்கள் அடைக்கலம் கொடுத்துச் செய்திருக்கும் உதவியை ஏழேழு ஜன்மத்திலும் எங்களால் தீர்க்க முடியாது. ஆனாலும், அவரை விட்டுப் பிரிந்து இருக்கிற தென்றால், எனக்கு நரக வேதனையா யிருக்கிறதே? நான் என்ன செய்வேன்?'' என்றாள்.

"உன்னுடைய அன்பின் காரணமாக உன் கணவனுக்கு ஆபத்து உண்டாக்கக் கூடாதல்லவா?'' என்றார் பண்ணையார்.

இம்மாதிரி அடிக்கடி அவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். கடைசியில் சந் திரமணியும், காசிலிங்கத்துடன் தான் போகிற யோசனையைக் கைவிட்டு விட் டாள். எப்படியாவது அவர் இங்கே அபாயத்துக்கு உள்ளாகாமல் அயல் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தாற்போதும் என்று எண்ணினாள். ஆனால் மலாய் நாட்டுக்கு அவர் போகிறதாகச் சொன்ன விஷயமே, தன்னை அடிக்கடி வந்து பார்க்காம லிருப்பதற்காகச் சொன்னதா, உண்மையிலேயே அந்த உத்தேசம் அவ ருக்கு உண்டா என்ற சந்தேகமும் தோன்றிக் கொண்டிருந்தது.

• • •

நான் பிறந்த நாளிலிருந்து என் பெற்றோர்களுக்குப் பல துன்பங்களை விளைவித்து வந்தேன். ஏன்? என்னிடம் அன்பு வைத்தவர்கள் எல்லாருக்குமே என்னால் துன்பமே தவிர, நன்மை எதுவு மில்லை. என்னுடைய அன்னைக்கு ஒரு பெரிய ஆபத்து அந்த நாளில் என்னால் ஏற்பட்டது.

குங்குமத்துறையில் மழை பெய்யும் பருவம் வந்தது. ஏராளமாக மலையில் மழை கொட்டியபடியால், அருவிகளில் பெரு வெள்ளமாகத் தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது.

எல்லாரும் போய்க் குளிக்கும் முக்கிய மான பெரிய அருவிக்கு நாங்கள் அதிக மாகப் போவதில்லை. கொஞ்சமாகத் தண்ணீர் விழும் புனலருவிக்குத் தான் போவது வழக்கம். பெரிய அருவிக்குப் போனால் அங்கே வரும் பெண்பிள்ளைகள் ஏதாவது அநாவசியமான கேள்விகள் கேட்டு வாயைப் பிடுங்கி வயிற்றெரிச்

சலிக் கொட்டிக் கொள்வார்கள் என்று என் அன்னைக்கு ஒரு தயக்கமும் இருந்தது.

ஆனால் பெருமழை பெய்து ஆகாச கங்கையைப் போல் அருவி விழுந்து கொண்டிருந்தது என்று கேள்விப்பட்ட போது, நான் போய் அந்தக் காட்சியைப் பார்க்க விரும்பினேன். என் அன்னையும் அதற்கு இணங்கி என்னை அருவிக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

அருவி விழும் இடத்தில் ஜனங்கள் குளிப்பதற்காக இரும்புக் கம்பி வேலி எடுத்துப் பந்தோபஸ்து செய்திருந்தார்கள். விழுந்த அருவி ஜலமெல்லாம் சிறிது அப்பால் சென்று ஒரு விஸ்தாரமான பொய்கையில் விழுந்தது. பொய்கை நிறைந்து ததும்பி வழிந்து மறுபடி கீழே விழுந்து வாய்க்காலாக ஓடிற்று.

நாங்கள் அருவி விழும் இடத்துக்குச் சற்றுத் தூரத்திலேயே, பொய்கையின் கரையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். பொய்கையில் அருவி நீர் அலைமோதிக் கொண்டு பாய்ந்து பெரிய பெரிய சுழல்களையும் சுழிகளையும் உண்டு பண்ணி விட்டு அப்பால் வழிந்து கீழே முப்பது அடி ஆழத்தில் இருந்த வாய்க்காலில் வழிந்து கொண்டிருந்தது. கரையோரமாகக் காணப்பட்ட ஒரு சிறிய சுழலில் ஒரு தாமரைப் பூ சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அதை எடுப்பதற்காக நான் குனிந்தேன். திடீரென்று பொய்கையில் விழுந்து விட்டேன். தண்ணீரில் முழுகி மூச்சுத் திணறித் திண்டாடிப் பிறகு மேலே வந்தேன். பொய்கை அவ்வளவு ஆழமானதில்லை. ஐந்தாறு அடிதான் இருக்கும். என்னை முழுக்கடிப்பதற்கு அதுவே போதும் அல்லவா? மேலும் ஜலம் பாயும் வேகத்தில் நான் அகப்பட்டுக் கொண்டு விட்டால், பொய்கையின் கரையில் வழிந்து விழும் ஜலத்தோடு கீழே முப்பது அடிப் பள்ளத்தில் விழ வேண்டியது தான்.

அருவி விழுவதைப் பார்த்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த என் அன்னை "அம்மா!" என்று நான் கூவியதைக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பொய்கையில் நான் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். உடனே "ஐயோ!" என்று அலறிவிட்டுப் பொய்கையில் குதித்தாள். தண்ணீரின் வேகத்தைச் சமாளிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டு என்னை நோக்கி வந்தாள். இதற்குள் நான் மறுபடியும் தண்ணீரில் முழுகி விட்டேன். என் அன்னையின் அலறலைக் கேட்டு அருவியில் குளிக்க வந்திருந்த பலர் உடனே ஓடி வந்து பொய்கையில் குதித்து எங்களைக் கரை சேர்த்தார்கள். இதற்குள் பண்ணையார் மந்திரமூர்த்தியும் வந்து விட்டார். எங்களைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி செலுத்தி விட்டு, வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

எங்கள் உயிருக்கு ஆபத்து வராமல், முப்பது அடிப் பள்ளத்தில் பாறைகளின் மீது விழுந்து நாங்கள் சின்னாபின்னமாகி விடாமல், காப்பாற்றியதற்காக மந்திரமூர்த்தி குங்குமத்துறை முருகனுக்கும் மற்றும் அக்கம் பக்கத்து ஊர்களிலுள்ள எல்லாத் தெய்வங்களுக்கும் வேண்டிக் கொண்டார். இரண்டு நாள் வரையில் இந்த விபத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம்.

மூன்றாம் நாள் என் அன்னைக்குக் கடும் சுரம் வந்து விட்டது. முதலில் சாதாரண ஜுரம் என்று நினைத்து அசட்டையாயிருந்தார்கள். மறு நாளே சுரம் உச்ச நிலையை அடைந்து என் அன்னை நினைவு இழந்து பிதற்ற ஆரம்பித்துவிட்டாள். மந்திரமூர்த்தி உடனே வைத்தியர்களை அழைத்துக் கொண்டு வந்தார். வைத்தியர்கள் சிகிச்சை செய்தார்கள். ஆனாலும் என் தாயார் சுரம் குணமாகிப் படுக்கையை விட்டு எழுந்திருக்க ஒன்றரை மாதத்துக்கு மேலாகி விட்டது.

நான் பொய்கையில் விழுந்து தத்தளித்ததைப் பார்த்த போது ஏற்பட்ட பீதியினால்தான் என் அன்னைக்குச் சுரம் வந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

நினைவு இழந்திருந்த போதும் சரி, தப்பித் தவறித் தூங்கினாலும் சரி, திடீர் திடீர் என்று என் அன்னை அலறுவாள். என் பெயரையும், காசிலிங்கத்தின் பெயரையும் சொல்லி அலறுவாள். வெறி கொண்டவள் போல் அழுது புலம்புவாள். "என் குழந்தை போய் விட்டாள். நான் இனி எதற்காக இருக்க வேண்டும்? யமனே! என்னையும் கொண்டு போ!" என்று கதறுவாள்.

அப்போதெல்லாம் நான் பக்கத்திலிருந்து அம்மாவைத் தடவிக் கொடுத்து ஆறுதல் கூறுவேன். விழிப்பு வந்ததும் என் தாயார் என்னைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடிப்பாள்.

என் அன்னை சந்திரமணி ஒப்பற்ற அழகுடையவள். அவள் தெருவோடு போனால், வழிப் போக்கர்கள் எல்லாரும்

சற்று நின்று அவளைப் பார்த்து விட்டுத் தான் போவார்கள். என் அன்னையோ தன்னை மற்றவர்கள் கவனிக்கிறார்கள் என்பதையே பொருட்படுத்தாமல் குனிந்த தலை நிமிராமல் போய்விடுவாள்.

அப்படிப்பட்ட சௌந்தரியவதி, சுரம் வந்து இருபது நாளைக்குள் எலும்பும் தோலுமாகி விட்டாள். முகமோ பார்க்கவும் முடியாத வெறி கொண்ட பயங்கரத் தோற்றத்தை அடைந்திருந்தது. பேய் பிடித்தவர்களைப் போல் கண்களை உருட்டி அங்குமிங்கும் பார்த்து விழிக்கத் தொடங்கினாள்.

அப்போது எனக்கு அக்கம் பக்கத்தில் நடக்கும் காரியங்களை அறிந்து நினைவு வைத்துக் கொள்ளும் பிராயம் வந்திருந்தது. என்னால் என் அன்னைக்கு இவ்வளவு பெரிய அபாயம் வந்து விட்டதே என்று நான் நினைத்து நினைத்து வருத்தப் பட்டதெல்லாம் இன்னமும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

என் அன்னை சுரமாகப் படுத்து ஒரு மாதத்துக்குப் பிறகு என் தந்தை காசிலிங்கம் திடீரென்று ஒரு நாள் முன்னிரவில் வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டுக்கு மூன்று பக்கத்தில் மூன்று வாசல்கள் இருந்தன. ஆயினும், அவர் சமையற்கட்டில் கதவு உடைந்து திறந்திருந்த ஜன்னல் வழியாக ஏறிக் குதித்து வந்தார். சந்திரமணியின் அருகில் போய் உட்கார்ந்ததும் 'ஓ' வென்று அழுது விட்டார். அவள் இந்த நிலைமையை அடைந்ததற்குத் தம் பேரிலேயே குற்றத்தைப் போட்டுக் கொண்டார். இரண்டு கைகளாலும் தலையிலே அடித்துக் கொண்டார்.

சந்திரமணி அவருக்கு வெகுவாகச் சமாதானம் கூறினாள். "நான் கட்டாயம் பிழைத்து விடுவேன். உங்கள் அன்பே என்னைக் காப்பாற்றும். ஒரு வேளை எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அருமைக் கண்மணி இந்துவைப் பார்த்துக் கொள்ளுங்கள். முழுதும் மந்திர மூர்த்தியிடமே பொறுப்பை விட்டு விட வேண்டாம்!" என்றாள்.

அப்போது காசிலிங்கம் என்னைக் கண்டபடி திட்டியது எனக்கு நினைவிருக்கிறது. "இந்தத் துக்கிரி உன் வயிற்றில் தோன்றிய நாளிலிருந்தே உனக்குக் கஷ்டந்தான். கடைசியில் உன் உயிருக்கே உலை வைத்து விட்டாளே! அருவித் தண்ணீர் இவளை அடித்துக் கொண்டு போயிருக்கக் கூடாதா? உனக்கா இந்த ஆபத்து வரவேண்டும்?" என்றார்.

மறுபடியும் தம்மைத் தாமே நொந்து கொண்டார். "பாவம்! அறியாக் குழந்தை என்ன செய்வாள்? உனக்கு வந்த துன்பமெல்லாம் என்னால் வந்தது. ஐயோ! உன்னை உன் குடும்பத்தாரிடமிருந்து அழைத்து வந்தவன், உன்னை ஆதரித்துக் காப்பாற்ற முடியாதவனாகி விட்டேனே? தெய்வமும் நம்மைக் கை விட்டு விட்டதே!" என்று கதறினார்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது மந்திரமூர்த்தி விரைந்து ஓடி வந்து, "காசிலிங்கம், ஜாக்கிரதை! சி. ஐ. டி. போலீஸார் வருவது போலத் தோன்றுகிறது. கூட்டமாகச் சேர்ந்து வருகிறார்கள்!" என்றார்.

உடனே காசிலிங்கம் என் அன்னையின் எலும்புந் தோலுமான முகத்தில் ஒரு முறை முத்தமிட்டு விட்டுச் சட்டென்று

குரு குஹ கான சபா (ரிஜிஸ்டர்டு) கோயமுத்தூர்
இரண்டாவது ஆண்டு விழா

★

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ... பாட்டு
திருவாலங்காடு ஸ்ரீ டி. என். சுந்தரேசய்யர் ... ... வயலின்
தஞ்சாவூர் ஸ்ரீ டி. கே. மூர்த்தி ... ... மிருதங்கம்
உமையாள்புரம் ஸ்ரீ கோதண்டராமய்யர் ... ... கடம்

9-11-54 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு

கோயமுத்தூர்
ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் காம்பவுண்டில் உள்ள கல்யாண மண்டபத்தில்
கனம் மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமை வகிப்பார்கள்

மைக் அண்டு ஒலி பெருக்கி ஏற்பாடு: அசோஸியேடட் ரேடியோ ஏஜன்ஸீஸ், திருச்சிராப்பள்ளி

எழுந்து நின்றார். "என் கண்ணே! நீ எப்படியாவது குணமடைந்து பிழைத்து எழுந்திரு! நம்முடைய பகைவர்களை யெல்லாம் ஒரு கை பார்த்து விடுகிறேன். நீயும் நானும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும் காலம் ஒன்று வரும். கடவுள் அருள் புரிவார்" என்று சொல்லி விட்டு, அவர் ஒரே பாய்ச்சலில் சமையற்கட்டுக்குள் சென்று, திறந்த ஜன்னல் வழியாகப் பாய்ந்து சென்றார்.

அப்போது பலமாக மழை பெய்து கொண்டிருந்தது. இரண்டடி தூரத்தில் உள்ள பொருள்கள் தெரியாத படி கனாந்தகாரம் சூழ்ந்திருந்தது. ஒரே நொடியில் காசிலிங்கம் மழைக்கால இருளில் மறைந்து விட்டார்.

மந்திரமூர்த்தி சொன்னபடியே ஒரு பெரிய கூட்டத்தார் வந்தனர். அவர்களில் சிலர் போலீஸ் உடை தரித்திருந்தனர். சிலர் சாதாரண உடையில் இருந்தனர். வந்தவர்கள் வாசற் கதவைத் தடதட வென்று இடித்தார்கள். வீட்டைச் சுற்றி நாலு புறமும் சேவகர்களை நிறுத்தி வைத்தார்கள்.

மந்திரமூர்த்தி கதவைத் திறக்கப் போன போது, எலும்புந் தோலுமாக எழுந்திருக்கவும் சக்தியின்றிப் படுத்திருந்த சந்திரமணியும் எழுந்து, அவர் அறியாமல் பின்னோடு வந்தாள்.

மந்திரமூர்த்தி "யார்? என்ன?" என்று கேட்டுக் கொஞ்சம் காலங் கடத்தி விட்டுக் கதவைத் திறந்தார். வந்தவர்கள் போலீஸ் லாந்தரின் வெளிச்சத்தில் சந்திரமணி பின்னால் நின்றதைக் கண்டதும் 'பேயோ, பிசாசோ!' என்று பயந்து போனார்கள்.

அதற்கேற்றாற் போல் என் அன்னையும் "ஐயோ! யம தூதர்கள் வந்து விட்டார்களே!" என்று சொல்லி விட்டுப் பேய் பிடித்தவள் போலக் கத்தினாள். சிறிது நேரம் கத்திவிட்டுக் கீழே விழுந்து மூர்ச்சையானாள்.

"ஐயோ! இம்மாதிரி அக்கிரமம் உண்டா? நோயாய்ப் படுத்திருந்த என் மகளைப் பயமுறுத்திக் கொன்று விட்டீர்களே?" என்று அலறினார் மந்திரமூர்த்தி.

சிறிது தயங்கி நின்ற போலீஸ்காரர்கள் அவரைத் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்ந்து சென்றார்கள். மூலை முடுக்குகளெல்லாம் தேடினார்கள். "பறவை பறந்து போய் விட்டது!" என்று ஒருவர் கூறினார். உடனே எல்லாரும் வீட்டை விட்டு வெளியேறினார்கள். 'ஹா, ஹூ!' என்று கத்திக் கொண்டு நாலா புறமும் ஓடினார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் கூச்சல் ஓய்ந்தது. எங்கள் வீட்டில் அமைதியும் நிசப்தமும் நிலவின.

என் அன்னைக்கு நினைவு வந்ததும் மந்திரமூர்த்தியிடம் "அவர் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டாரே?" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒரு நாளும் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டார். மலை மேல் ஏறி மறைந்திருப்பார். இவர்களால் அங்கே போகவே முடியாது. சந்திரமணி! உன்னுடைய உயிருக்கு நீ அபாயம் உண்டு பண்ணிக் கொண்டாலும், நல்ல சமயத்தில் வாசற்படிக்கு வந்து அப்படி அலறினாய். அதனால் சில நிமிஷ நேரம் காசிலிங்கத்துக்கு அவகாசம் கிடைத்திருக்கும்!" என்றார் பண்ணையார்.

சந்திரமணியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி விழுந்தது. அது முதல் என் அன்னையின் உடல் நிலையும் அபிவிருத்தி அடைந்து வந்தது. (தொடரும்)

சித்திரக் கலைக் கண்காட்சி

மகாத்மா காந்தியடிகளின் நினைவுச் சின்னமாக, கிண்டி ராஜபவனத் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிரார்த்தனை மண்டபத்துக்குத் தமிழ் நாட்டில் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற தொகையை அளித்துக் கட்டிடம் உருவாவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதோ பானு சகோதரர்களும் தங்கள் காணிக்கையைச் செலுத்த முன் வந்திருக்கிறார்கள்.

சித்திரக் கலை உலகில் புகழ் ஏணியில் வெகு வேகமாக முன்னேறி வரும் பானு சகோதரர்களை அறியாதவர்கள் இருக்க முடியாது. பானு சகோதரர்கள் சித்திரங்கள், டில்லி முதல் இலங்கை வரை நிகழ்ந்த பல விழாக்களை யொட்டி ஏற்படுத்தப்பட்ட சித்திரக் கண் காட்சிகளை அலங்கரித்துள்ளன. திருக்குறள், கம்ப ராமாயணம், சங்க கால இலக்கியங்கள் முதலிய நூல்களிலிருந்து பல காட்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார்கள். இந்தியக் கவிஞர்கள், மேனாட்டு விஞ்ஞானிகள், கட்டபொம்மன் வாழ்க்கைச் சித்திரங்கள், அஜந்தா ஓவியங்கள்—முதலியவற்றை யெல்லாம் தீட்டியிருக்கிறார்கள். காந்தி மகானின் வாழ்க்கையை யொட்டி வரையப்பட்டுள்ள சித்திரங்கள் பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றவையாகும். இப்படி அவர்கள் வரைந்துள்ள சித்திரங்கள் முந்நூறுக்கு மேலிருக்கும். இவற்றைப் பொது மக்களின் பார்வைக்குச் சென்னை ராஜாஜி மண்டபத்தில் இம்மாதம் 11-ம் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குக் கண்காட்சியாக வைக்க ஏற்பாடாகி யிருக்கிறது. கலைக் கண் காட்சியைச் சென்று பார்ப்பதின் மூலம் அழகிய சித்திரங்களைப் பார்த்து மகிழ்வதுடன், அந்தக் கண் காட்சிக்குக் கொடுக்கும் நுழைவுக் கட்டணம் காந்தி மகான் ஞாபகார்த்த மண்டபத்துக்குப் போய்ச் சேருகிறது என்னும் பெருமைப் படலாம்.



சென்னை ராஜ்யத்துக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸ்ரீ சி. ரெங்கராஜுலு நாயுடு
9/1, கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்

உண்டுகளித்த உண்மையை
உவந்து சொல்கிறான் அந்தரங்கமாய்



"ஜே. பி. மங்காராமின் ராயல் க்ரீம் பிஸ்கட்டு களை வாங்கித் தரச் சொல்லி அப்பாவைக் கேள். இந்த பிஸ்கட்டு களில் இருக்கும் கோத்தியான க்ரீமின் வாசனையை விரும்புவாய்!"

தரத்தில் உயர்ந்தது
விடமின் சத்து நிறைந்தது

அழகிய வர்ண வேலைப்பாடுகளமைந்த காற்றுப்புகாத பாக்கெட்டுகளில் உள்ள மங்காராமின் ராயல் க்ரீம் பிஸ்கட்டுகள் பரிசுக்கு உகந்ததாக விளங்குகின்றன!

J. B.
MANGHARAM'S
ROYAL
CREAM
BISCUITS

ஜே. பி. மங்காராம் & கோ குவாலியர்

சென்னை ஆபீஸ்: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1

NATIONAL M. 2

புடமிட்ட பொன்



வியார்ஜி

சிட்டி பாபுவுக்கு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் எழுத்தறிவித்த 'இறைவ'னாகிய ஐயாசாமி வாத்தியார் இப்பொழுது உயிரோடில்லை. உயிரோடிருந்தால் தாம் அடிநாளில் அவனைப் பற்றிச் சொன்ன ஜோசியம் அப்படியே பலித்திருப்பதைக் கண்டிருப்பார். அவர் வாக்குப்படி அவன் உருப்படாமலேயேதான் போய் விட்டிருந்தான்.

"நாம் என்னத்தைப் பெரிசாகப் படிச்சுக் கிழிக்கப் போகிறோம்" என்ற ஞானோதயம் சிட்டிபாபுவுக்குப் பதினொரு வயதுக்குள்ளேயே ஏற்பட்டு விட்டது. அவ்வளவுதான் பஞ்சாயத்து போர்டு ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்கு ஒருபெரிய கும்பிடாகவே போட்டு விட்டுத் தன்னுடைய படிப்பைச் சுருக்கமாக முடித்துக் கொண்டான். மறுநாள் வழக்கம் போலப் பிள்ளையார் மண்டபத்தின் உச்சியில் இருந்து தலைகீழாக ஆற்றில் குதிப்பதற்கு முன்பு தன்னுடைய மூன்றும் வகுப்புப் பாட புஸ்தகத்தையும், கற் பலகையையும் தலையைச் சுற்றித் தண்ணீரில் எறிய அவன் மறக்கவில்லை.

இத்தனை நாளும் பள்ளிக்கூடத்தில் கழித்த நேரத்தை யெல்லாம் அவன் புளியந் தோப்பிலும், ஆற்றங் கரையிலும் செலவிட்டான். 'ஜமா' சேர்த்துக் கொண்டு சடையாண்டிக் கோனாரின் மாந்தோப்பில் மதிலேறிக் குதித்து மாங்காய் திருடினான். அகப்பட்டுக் கொண்ட போது மரத்தில் கட்டி வைக்கப்பட்டு உதையும் பட்டான். மற்ற நேரங்களில் சாலைப் பிள்ளையார் கோயில் மதில் ஓரத்தில் 'மூன்று கோலி' விளையாடினான்.

காலக்கிரமத்தில் அவன் தனக்கென்று ஒரு பெயரைச் சுற்று வட்டாரத்தில் சம்பாதித்துக் கொண்டான்; ஸ்தாபிக்கவும் செய்து விட்டான். வஸ்தாது சின்னப் பையனுடைய சகவாசம் கிட்டியது. வஸ்தாது சின்னப் பையன் பேரில் எப்பொழுதுமே போலீஸ் இலாகாவுக்கு ஒரு கண் தான். சின்னப் பையன் பெரிய ஆள்! ஜேப்படிக் கலையில் நிபுணன். பல பெரிய திருட்டுக்களைக் காதும் காதும் வைத்தாற் போல் நடத்திப் போலீஸ் இலாகாவின் கண்ணில் மண்ணை நிறையவே அள்ளிப் போட்டிருப்பவன். சின்னப் பையனிட மிருந்துதான் சிலம்பம் கற்றுதலையும் சில கத்தி வேலைகளையும் சிட்டிபாபு கற்றுக் கொண்டது. சிட்டிபாபு குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகி விட்டான் என்று சொல்லிக் கொண்டார்கள். அதென்னவோ ஓரளவுக்கு வாஸ்தவம் தான். ரௌடி சின்னப் பையன் தன் வாழ்நாளிலேயே ஐந்து முறைக்கு மேல் சிறைக்குச் சென்றது கிடையாது. ஆனால் சிட்டிபாபு இந்த இருபத்தியாறு வயதுக்குள்ளேயே நாலு முறை கம்பி எண்ணி விட்டான்!

இதெல்லாம் பழைய கதை. இப்பொழுது அவன் வேலூர்ச் சிறையில் ஒரு கைதி. சரியானபடி ஆள் அகப்பட்டா லொழியக் கோஷ்டித் திருட்டு கூடவே கூடாது என்று சிட்டிபாபு தன்னுடைய கசப்பான அநுபவத்திலிருந்து கற்றுக் கொண்ட உண்மை. இப்பொழுது அகப்பட்டுக் கொண்டது கூட அம்மாதிரித் திருட்டு ஒன்றினால்தான். "வேலுப் பயல் வேண்டவே வேண்டாம்" என்று முதலிலிருந்தே சிட்டிபாபு அடித்துக் கொண்டான். மற்றவர்கள் கேட்கவில்லை. வேறு சுத்த உதவாக்கரை என்பது சிட்டிபாபுவின் தீர்மானம். சிறிய வயதிலிருந்தே வேறு எதற்கும் அவன் லாயக்கில்லாதவன்.

அவனுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எந்த விளையாட்டிலும் 'ஒழிந்து போகட்டும்' என்று 'ஒப்புக்குச் சப்பாணி'யாகத்தான் அவனைச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

அந்தப் பயல், தான் வகையாக அகப்பட்டுக் கொண்டது மல்லாமல் எக்கச்சக்கமாக உளறி மற்றவர்களையு மல்லவா மாட்டி வைத்து விட்டான். உம். இருந்ததெல்லாம் இருந்தாகி விட்டது. இன்னும் ஒரு பத்து நாள் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட்டால் போகிறது. அப்புறம் அவன் சுதந்திர புருஷன்......

"என்ன தம்பி, யோசனை பலமாக இருக்கிறது! வெளியே போனால் நடத்த வேண்டிய 'புரோகிராம்'களுக்கு இங்கிருந்தே 'பிளான்' தயாராகிறதாக்கும்!" என்று சொல்லி விட்டு விகாரமாகச் சத்தம் போட்டுச் சிரித்தான் சங்கிலி.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, அண்ணே..."

"சும்மா அளக்காதே தம்பி, இதோ பார் இன்னும் ஒரு மாசம். அதற்குப் பிறகு இந்தச் சங்கிலியும் வெளியேதான். சிட்டிபாபுவும் இந்தச் சிங்கக் குட்டி சங்கிலியும் சேர்ந்து ஒரு காரியத்தில் இறங்கினார்கள் என்றால் இந்த உலகத்தையே ஒரு கலக்கு கலக்கி விடலாமே! நீ பயப்படாதே, தம்பி!" என்றான் சங்கிலி சுவாதீனமாக.

சிட்டிபாபு ஒரு கணம் யோசித்தான். சங்கிலி சொல்வதிலும் உண்மை இல்லாமல் இல்லை. சங்கிலியைப் போல் ஒரு சகா கிடைத்தால் எதைத் தான் செய்ய முடியாது!

"தம்பி, நான் சொன்னதை மறந்து விடாதே. வெளியே போனதும் மறக்காமல் தயவு செய்து நான் சொன்ன விலாசத்தில் விசாரிக்கப் பாரு. நான் இன்னும் கொஞ்ச நாளில் வந்து விடுவேன் என்பதை மூத்தம்மாவிடமும் கிழவியிடமும் சொல்லு" என்றான் சங்கிலி.

*　　　*　　　*

சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து, தான் சிறைக்குள்ளே நுழையும் போது, அணிந்திருந்த ஆடைகளையும், சிறையில் வேலை செய்ததற்கான



சில்லறைப் பணத்தையும் உணர்ச்சி பேதலிப்பு ஏதுமின்றி வாங்கிக் கொண்டது போலவே, "இனிமேலாவது நாணயமாகப் பிழைக்கக் கற்றுக் கொள், தம்பி!" என்ற அவருடைய புத்திமதியையும் அநாயாசமாகக் காதில் வாங்கிக் கொண்டான் சிட்டி பாபு!

கற்சுவர்களாலும், கம்பிக் கதவுகளாலும் ஆன குறுகிய சிறைக் கூடத்தை விட்டுச் சிட்டிபாபு பரந்த வெளி உலகத்தில் காலடி எடுத்து வைத்தான். வேதாந்த பரமாகப் பார்க்கப் போனால் (ஆன்ம விடுதலை கிட்டும் வரைக்கும்) வெளி உலக வாழ்வும் ஒரு விதத்தில் சிறைதானே! சிட்டிபாபு அப்படி நினைக்க வில்லை. அவனுக்கு அப்படி எல்லாம் நினைக்கத் தெரியாது. தத்துவ விசாரணை அவன் அறியாத ஒரு கலை. அவ்வாறு மூளையைக் குழப்பிக் கொள்ள அவனுக்கு நேரம் கிடையாது. சந்தர்ப்பமும் ஏற்பட்டதில்லை. 'வாழ்க்கைப் பிரச்னைகள்' என்று பெரிய பெயர் இட்டு அழைக்கக் கூடிய எதுவுமே அவனைப் பாதித்ததில்லை. சொல்லப் போனால் அவனுடைய வாழ்க்கையில் பிரச்னையே இல்லை! அவன் தனிக்கட்டை. சூழ்நிலையும் சகவாச தோஷமும் அவன் வாழ்க்கையைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு உழைத்துச் சம்பாதிக்க முடியாமல் செய்து விட்டன. வயதான தாயையும் இழந்த பிறகு அவனைச் சார்ந்திருப்பவர்கள் என்று சொல்லிக் கொள்வதற்கு யாரும் கிடையாது. அவனைப் பற்றிக் கவலைப் படுவதற்கும் யாரும் இல்லை.

ஆனால் இப்பொழுது! யாரோ ஒரு மூன்றாம் மனிதனின் தாயையும் தங்கையையும் தேடிக் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தத்தை வலிய வரவழைத்துக் கொண்டிருக்கிறான். சிறையில் சங்கிலியுடன் பழகிய சிறிது காலம் அவனிடம், மற்றவர்களுக்காகத் தாட்சணியம் காட்டும் குணத்தை ஏற்படுத்தி விட்டது என்று சொன்னால் அது சிட்டி பாபுவைச் சரியாக அறியாதவர்கள் பேசும் பேச்சாகத்தான் இருக்கும். மனிதன் அடிப்படையில் முழுவதும் சுயநலம் நிறைந்தவன் என்று யாரோ சிலர் சொல்லி வந்தார்கள். சிட்டி பாபுவைப் பொறுத்தவரையில் அது மிகவும் சரி. இன்னும் சில நாட்களுக்குப் பிறகு சங்கிலியும் வெளி வந்து விட்டால், நாலைந்து பேர்கள் தேவைப்படுகின்ற பிரம்மாண்டமான காரியங்களை அவர்கள் மட்டுமே செய்துவிட முடியும் என்பது சிட்டிபாபுவின் நம்பிக்கை. சிறந்த அநுபவசாலியான சங்கிலியின் நட்பை அவ்வளவு சீக்கிரம் இழந்து விடுவதற்கு அவன் விரும்பவில்லை.

"யார் வேணும் உங்களுக்கு!" என்ற குரல் கேட்டுச் சிட்டிபாபு தன் நினைவுக்கு வந்தான். கண்டாங்கிச் சேலையும், அள்ளிச் செருகிய கொண்டையுமாகச் சுமார் இருபது வயது மதிக்கத் தக்க பெண் ஒருத்தி குடிசையின் வாயிலில் நின்றுகொண்டிருந்தாள். சிட்டிபாபுவின் கண்கள் அவளை ஒரு முறை மொத்தமாக மதிப்பிட்ட பிறகு அவள் பக்கம் மறுபடி திரும்பவில்லை. பெண்கள் விஷயத்தில் அவன் எப்பொழுதும் சற்றுக் கவனமாகவே இருந்தான். 'பொம்பளைங்க விவகார'த்துக்கும் தன்னுடைய தொழிலுக்கும் சரிப்பட்டு வராது என்று சிட்டிபாபுவுக்குத் தெரியும்.

"முத்தம்மா வீடு இதுதானே! நீதான் அந்த முத்தம்மாவா!" என்று கேட்டான்.

"ஆமாம்; நீங்க யாரு!" இதைக் கேட்டவுடன் நாணம் கலந்த புன்னகை ஒன்றை நெளியவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். முதல் கேள்வியில் இல்லாத குழைவும் நயமும் திடீரென்று இக்

கேள்வியில் வந்து புகுந்து கொண்டதைச் சிட்டி பாபு கவனித்தான். கேள்வி கேட்க ஆரம்பிக்கும் பொழுது மூக்குத்தியின் மூக்கையே வெறுமனே பிடித்து விஷமம் செய்து கொண்டிருந்த அவனுடைய இடது கை ஆள்காட்டி விரலில் இப்பொழுது மூக்குத்தியின் கால் பகுதி சுற்றிக் கொண்டிருந்தது! அவனுடைய வார்த்தையில் திடீரென்று தொனித்த அசாதாரண நயம்தானோ என்னவோ அவனை மீண்டும் ஒரு முறை அவள் முகத்தைப் பார்க்கத் தூண்டியது!

"உன் அண்ணன் சங்கிலிக்கு வேண்டியவன் நான். அவன் இன்னும் ஒரு மாதத்துக்குள் வருவான். நீயும் உங்கம்மாவும் சுகந்தானே! விசாரித்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்" என்று தன்னை அவளுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான் சிட்டி பாபு.

"அம்மாவுக்கு வயசாயிட்டுது. அதனால் வெளியே போகக் கொள்ள முடியாது. நான்தான் நாலு இடத்திலே வேலை செய்து ஏதோ கொண்டாரேன். அண்ணன் மட்டும் குறியா யிருந்தான்னா எப்படி எப்படியோ இருக்கலாம்!" என்று சொன்னாள் முத்தம்மா விரக்தி கலந்த குரலில்.

"அப்படியா! சரி. நான் சங்கிலி வந்த பிறகு மறுபடி வந்து பார்க்கிறேன்!" என்று விடை பெற்றுக் கொண்டான் சிட்டிபாபு.

அவன் இரண்டடி சென்ற பிறகுதான், "அவரை உள்ளே வரச் சொல்லாமல் போய் விட்டோமே. பேரைக்கூடக் கேட்க மறந்து விட்டேனே, பாவி!" என்று எண்ணிக் கொண்டாள் முத்தம்மா. சிறிது நேரமாகக் குடிசை வெளியே யாருடனோ தனது மகள் பேசிக் கொண்டிருப்பதை அறிந்த கிழவி இருமிக் கொண்டே வெளியில் வந்தாள்.

"யாரம்மா, அது வந்து போனது!"

"யாரோ சங்கிலிக்கு வேண்டியவராம். கேட்டு விட்டுப் போக வந்தாரு" என்று சுருக்கமாகச் சொன்னாள் முத்தம்மா.

"ஆமாம். உங்கண்ணனை விசாரிக்க வேறே எவன் வரப் போகிறான்! எவனாவது 'கேப்மாரி' தான் வந்திருப்பான்" என்றாள் கிழவி மிகவும் சலித்துக் கொண்டே.

"இல்லே, அம்மா; இவரைப் பார்த்தால் அப்படி யெல்லாம் தோன்றவில்லை. ஒழுங்கான ஆசாமியாகத்தான் தெரியுது." முத்தம்மா முதலில் அப்படிச் சொல்ல விரும்ப வில்லை. இருந்தாலும் அவளையும் மீறி வார்த்தைகள் வெளி வந்துவிட்டன. கிழவி தன்மகளை ஒரு தரம் முறைத்துப் பார்த்து, "சரி, சரி, ஆவட்டும்!" என்று சொல்லிவிட்டு உள்ளேபோனாள்.

★

சங்கிலி சிறையில் இருந்து வந்து விட்ட பிறகு, சிட்டிபாபு அடிக்கடி அவன் வீட்டுக்கு வந்து போவது வழக்கமாகி விட்டது. புத்திசாலியான முத்தம்மா வெகு சீக்கிரமே சிட்டி பாபுவைப் பற்றித் தெரிந்து கொண்டாள். தன் அண்ணனும் அவரும் 'ஓரேகுட்டையில் ஊறின மட்டைகள்' என்று அவர்கள் பேச்சுக்களிலிருந்தும், ரகசியமாகப் போடும் திட்டங்களிலிருந்தும் நன்றாகப் புலப்பட்டது. இருந்தபோதிலும் அவளால் ஏனோ சிட்டிபாபுவை வெறுக்க முடியவில்லை.

'அவர் முகத்தைப் பார்த்தால் நல்லவராகத்தான் தோணுது. சேர்க்கைதான் நல்லா இல்லை' என்று தனக்குள்ளேயே சமாதானம் சொல்லிக் கொண்டு தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டாள் அவள். சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி வேறு அவளுக்குச் சிட்டிபாபுவிடம் ஏற்கெனவே இருந்த மதிப்பை மேலும் நன்றாக உயர்த்தி விட்டது.

அன்றைக்கு முத்தம்மா யார் முகத்தில் விழித்தாளோ தெரியவில்லை. என்றுமே ஒரு வார்த்தை கூடக் கடிந்து பேசியிராத அவள் வேலை செய்து வந்த 'ஐயர் வீட்டு அம்மா' அவளை அன்றைக்கென்று பார்த்து இரண்டு மூன்று தரம் கோபித்துக் கொண்டாள். மனம் நொந்து குடிசைக்குத் திரும்பிய முத்தம்மாவுக்குக் குடிசைக்கு வெளியில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து, சிட்டிபாபுவிடம் பேசிக் கொண்டிருந்த தன் அண்ணனைப் பார்த்ததும் எரிச்சல் எரிச்சலாக வந்தது. தன்னுடைய ஆத்திரத்தை யெல்லாம் அவன்மீது கொட்டினாள்.

"ஆமாம், இப்படியே குந்திகிட்டு இருந்தால் சோறு வானத்திலிருந்தா விழும்! நான் கேட்கிறேன். ஏதாவது வேலையின்னும் வெட்டியின்னும் வெளியே போவாங்க ஆம்பிளைங்க, நானும் பார்த்திருக்கிறேன். ஆனாலும்......"

"இந்தா, நிறுத்து புள்ளே! என்னமோ பெரிசாப் பேசிக்கிட்டே போறியே! பேசாமல் உள்ளே போவியா!" என்றான் சங்கிலி, கஷ்டப்பட்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.

"உள்ளே போவாம நான் இங்கேயே குந்திக்கவாப் போறேன், உன்னைப்போல! நீ செய்யறது உனக்கே நல்லா இருக்குதா, சொல்லு. உனக்கு என்ன குறைவு! மொண்டியா முடமா! எத்தனை நாளைக்கு இந்த மூடிச்சவிழ்க்கிற பொழைப்பு, நல்லா இருக்கிறவங்களையும் கெடுத்துக்கினு! கொஞ்சமாவது மானம் வாணும் மனிசனுக்கு. தூ!" என்று காறி உமிழ்ந்தாள் முத்தம்மா.



திருவல்லிக்கேணியில் 'மகாத்மாஜி சேவா சங்கம்' என்னும் பெயர் கொண்ட பெண்மணிகளின் ஸ்தாபனம் அரிய சமூகத் தொண்டுகள் செய்து வருகிறது. இந்தச் சங்கத்தின் தலைவி ஹரிகதா கலாநிதி ஸ்ரீமதி சி. சரஸ்வதி பாய்; இந்தச் சங்கத்தை ஸ்தாபித்துப் பொதுக் காரியதரிசியாகவும் இருந்து திறம்பட நடத்தி வருகிறவர் புகழ்பெற்ற நாவலாசிரியரும் தேச விடுதலைப் போரில் ஈடுபட்டவருமான ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள். 1948-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட இச்சங்கத்தின் தொண்டுகளை ராஜாஜி முதலிய பல தேசத் தலைவர்கள் வியந்து பாராட்டி யிருக்கிறார்கள். இந்தச் சங்கம் நிலைபெற்றுப் பணி செய்வதற்குச் சொந்தக்கட்டிடம் ஒன்று வேண்டுமென்று கருதப்பட்டது. சென்ற வருஷத்தில் இதற்கு முயற்சி தொடங்கி ஒரு சிறு கட்டிடமும் வாங்கினார்கள். அதற்குரிய பணத்தைக் கொடுப்பதற்காக 13,500 தேவையா யிருப்பதால், சங்கத்தைச் சேர்ந்த சகோதரிகள் தாங்களும் பணம் உதவி நண்பர்களிடமும் வசூலித்து வருகிறார்கள். இந்தக் கட்டிட நிதிக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை மனமுவந்து அளித்த பெருமாட்டி ஸ்ரீமதி என். புஷ்பம்மாள் அவர்களின் திரு உருவத்தை இங்கே மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம்.



கட்டிட நிதிக்கு மேலும் பணம் தேவைப்படுவதால் நாளது நவம்பர் மாதம் 12-ந் தேதி மாலை திருவல்லிக்கேணி சதுர்த்தி விநாயகர் கல்யாண மண்டபத்தில் "பணப் பேராசை" என்னும் நாடகத்தைச் சங்கத்தைச் சேர்ந்த சகோதரிகள் நடத்துகிறார்கள். பெண்மணிகள் மட்டுமே இந்த நாடகம் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். சேவைப் பற்றுள்ள சகோதரிகள் இந்த நாடகத்துக்குத் திரளாக விஜயம் செய்து நாடகத்தின் நோக்கம் நிறைவேறத் துணை புரியும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இது கொஞ்சம் அதிகம்தான். திடீரென்று கட்டிலினின்றும் எழுந்த சங்கிலி மூத்தம்மாவின் இரண்டு கன்னங்களிலும் 'பளீர் பளீ'ரென்று நான்கு அறைகள் அறைந்தான். அப்படியும் அவனது ஆத்திரம் அடங்கியதாகத் தெரியவில்லை.

"நீ எனக்குப் புத்தி சொல்லுகிற அளவுக்கு ஆயிட்டுதா!" என்று உறுமினான்.

பிறர் விஷயத்தில் நாம் தலையிடுவானேன் என்று சிட்டிபாபுவும் பொறுமையுடன்தான் இருந்தான். சங்கிலியின் மிருகத்தனமான கோபாவேசத்துக்குப் பூங்கொடி போன்ற மூத்தம்மா ஆளாகித் தவிப்பதைக் கண்ணால் பார்த்துக் கொண்டு எந்த மனிதன்தான் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்! பூப்போன்ற அவள் கன்னம் பட்டை பட்டையாக வீங்கி விட்டது. கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. இந்தப் பரிதாபப் படும்படியான கட்டத்தில், மான் போன்ற தன் மருண்ட பார்வையை மூத்தம்மா சிட்டிபாபுவின் மீது ஒரு கணம் செலுத்தினாள். ஆகா! அந்த ஒரு கண நேரத்தில் உலகத்திலுள்ள இரக்க குணமெல்லாம் ஒன்று சேர்ந்து தன்னை நோக்கிக் கெஞ்சுவதுபோல் தோன்றியது சிட்டிபாபுவுக்கு. அவனையும் அறியாமல் அவனுடைய கண்ணோரங்களில் நீர் முட்டி நின்றது. தாங்க முடியாத சங்கடத்தை மனத்தில் அடக்கிக் கொண்டு, "என்னப்பா சங்கிலி, வயசுப் பெண்ணைப் போட்டு இப்படியா கண்ணு மண்ணு தெரியாமல் அடிப்பாங்க. அதுவும் கன்னம் இரண்டும் எப்படிச் சிவந்து போயிட்டுது பார்த்தியா! கை விரல் கூடப் பதிஞ்சுட்டாப் போலே இருக்குதே!" என்றான் சிட்டிபாபு, விசித்துக் கொண்டிருந்த மூத்தம்மாளுக்குப் பரிந்து கொண்டு.

இந்தச் சம்பவம் நடந்து பல நாட்களாகி விட்டன. சங்கிலி அடித்ததைக் கூட அவள் அறவே மறந்து விட்டாள். ஆனால் சிட்டிபாபு அவளுக்காகப் பரிந்து பேசியதை மட்டும் அவளால் மறக்க முடிய வில்லை. ஏனென்றால் சங்கிலி அவளை அடிப்பது புதிதான விஷயம் அல்ல. அது அவளுக்குச் சாதாரணமாகப் பழகி விட்ட அநுபவம். ஆனால் பின்னது அப்படியல்ல; இதற்கு முன் உணர்ந்திராத புத்தம் புது அநுபவம்!

* * *

மூத்தம்மாள் மனம் ஒரு நிலையில் இல்லை. எப்படிப் பார்த்தாலும் அவள் அண்ணன் செய்ய நினைத்திருப்பது பெரிய அநியாயம் என்றே அவளுக்குத் தோன்றியது.

"அப்ப அதுதான் உன் முடிவான தீர்மானமா!" என்றாள் மூத்தம்மா, பிரயாசையுடன் தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு.

"இதிலே என்ன புள்ளே தீர்மானிக்கிறதுக்கு இருக்குது! சங்கிலி ஒன்றைச் செய்யணும்னு நினைச்சென்னா நினைச்சதுதான்."

"நம்பின ஒருத்தரை மோசம் பண்றது பெரிய பாவமாச்சே! இது துரோகம்னு உனக்கே படலியா! வாணாம் அண்ணாத்தே! அவரு பங்கை

மரியாதையாகக் கொடுத்து விடு. அவர் வயத் தெரிச்சலே என்னத்துக்கு நாம் கொட்டிக்கணும்!''

"இந்தா, நீ சும்மா வள வளன்னு ஏதாச்சும் பேசிக்கிட்டிருந்தே, அப்பறம் எனக்குக் கெட்ட கோபம் வந்திடும். ஆமாம், சொல்லிப் புட்டேன். இத்தனை நாளும்தான் அவன் பங்கை அழுதேனே! ஏதோ இந்தத் தடவை மொத்தமாகக் கிடைச்சிருக்குது. இதை அப்படியே அமுக்கிக்கிட்டா கொஞ்ச நாள் கவலைப்படாமல் காலம் கழிக்கலாம்னு பார்த்தால் நீ பெரிய தடங்கலாக இருக்கிறயே. உங்காத்தா செத்துப் போனபோதே நமக்கு இருந்த தடங்கல் மூச்சூடும் ஒரு வழியா ஒழிஞ்சதுன்னு நினைச்சேன். இப்ப புதுசா நீ வேறே முளைச்சிட்டியா! இதோ பாரு, முடிவாச் சொல்றேன். காலைக்குப் பல பலன்னு விடியற நேரத்திலே நாம் இந்த ஊரை விட்டு எத்தனையோ மைலைத் தாண்டியிருக்க வேணும். இந்த விவகாரத்தைப் பற்றி யாரிடமும் மூச்சு விட்டு விடாதே!'' என்றான் சங்கிலி.

அண்ணன் சங்கிலியின் சுபாவம் முத்தம்மாவுக்கு தெரிந்ததுதான். அவன் சிறு பிராயத்திலிருந்தே முரட்டு சுபாவம் உள்ளவன். தான் மனத்தில் தீர்மானித்து விட்டதே சரியென்று பிடிவாதம் பிடிப்பான். மற்றவர்களையும் தன் வழிக்கே திருப்ப முயன்று மிகவும் ஆத்திரங் கொள்ளுவான். இதனால் அவர்கள் குடும்பத்தில் அடிக்கடி சச்சரவும் குழப்பமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். எப்படியும் சங்கிலி தன் வழியிலேயே சென்று காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுவான். இந்த அவனது கடுமையான சுபாவம்தான் முத்தம்மாவுக்கு ரொம்பவும் அச்சத்தை உண்டு பண்ணியது. சிட்டி பாபுவைப் பிரிந்து, அதுவும் அவனுக்குத் துரோகம் இழைத்து விட்டு, ஊரைவிட்டே போய் விடுவது என்பதை நினைக்கும்போது அவள் மனம் பட்ட வேதனை சொல்லி முடியாது. அண்ணன் சங்கிலியை இனிமேல் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது என்பது விபரீதத்தையே விளைவிக்கும் என்று ஏற்கெனவே அவளுக்கு நன்கு தெரிந்துதானிருந்தது. முத்தம்மா ஒரு குறிப்பிட்ட காரியத்தில் சிரத்தை காட்டுகிறாள் என்பதை மட்டும் சங்கிலி அறிந்து கொண்டு விட்டால் அனர்த்தம்தான். அதற்காகவே அவன் முரண்டு பிடித்துத் தன் காரியத்தைச் சாதிக்க முயன்று இன்னும் பரபரப்புக் காட்டுவான். கடைசியில் அவள் நினைத்த எல்லா காரியங்களும் கெட்டே விடும்.

சிட்டிபாபு அநியாயமாக ஏமாற்றப்படுவதை நினைக்க நினைக்க முத்தம்மாளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவளுடைய அண்ணனைப் போலவே சிட்டிபாபுவும் திருடன்தான். ஆனால் அவன் — சமீபத்தில் அவள் வேலைசெய்யும் வீட்டு எஜமானி அழைத்துச் சென்று காண்பித்த தமிழ்ச் சினிமாவில் கேட்ட சம்பாஷணையில் வந்தது போல — அவளுடைய உள்ளத்தையும் அல்லவா திருடி விட்டிருந்தான்!

வெளியே சென்றிருந்த சங்கிலி திரும்பிவருவதற்குள் சிட்டிபாபுவிடம் சென்று எப்படியாவது தன் அண்ணன் அவருக்குச் செய்யத் திட்டமிட்டிருக்கும் துரோகத்தைப் பற்றிச் சொல்லிவிடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். ஆம். அதுதான் அன்று சிட்டிபாபு அவளிடம் காட்டிய பரிவுக்கு அவள் செய்யக்கூடிய தகுந்த பிரதி உபகாரமாகும். கையெழுத்து மறையும் நேரத்தில் குடிசைக் கதவைச் சாத்திவிட்டு, சிட்டிபாபுவின்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

சுந்தரகாண்டம்

(இப்பொழுது கிடைக்கும்)

காலஞ் சென்ற கீர்த்தனுச்சார்ய **ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார்,** B.A., அவர்களால்

தமிழ் வசன நடையில் எழுதப்பட்ட மொழிபெயர்ப்பு

மூன்றும் பதிப்பு – (டெமி ஆக்டேவோ – 274 பக்கங்கள்)

குறைக்கப்பட்ட விலை ரூ. 4. தபால் செலவு பிரத்யேகம்

தினசரி பாராயணக் கிரமத்துடன் பட்டாபிஷேக ஸர்க்கமும் அடங்கியது

பாலகாண்டம் முதலாக ஏழு காண்டங்களையும், டெமி ஆக்டேவோ சுமார் 200 பக்கங்களடங்கிய 12 மாத சஞ்சிகைகளாக 1954 டிசம்பர் 1-ம் தேதியில் ஆரம்பித்து மறு பதிப்பு வெளியிட உத்தேசித்துள்ளோம்.

ஒவ்வொரு சஞ்சிகையின் விலை ரூ. 2-8-0. (தபால் சார்ஜ் உள்பட)

வாங்க விருப்பமுள்ளவர்கள் முழு செட்டுக்கும் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். எல்லா காண்டங்களும் சுமார் ஒரு வருஷ காலத்தில் பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுந்தர காண்டத்தை ஏற்கனவே வாங்கியுள்ளோரும் முழு செட்டுக்கும் இப்பொழுது பதிவு செய்து கொள்ளலாம்.

இதர விவரங்கள் கிடைக்குமிடம் : R. நாராயணய்யர்,
C/o "ஹிந்து" ஆபீஸ், மவுண்ட் ரோடு :: மதராஸ் - 2

இருப்பிடத்தை நோக்கி விரைந்தாள். மூன் ஜாக்கிரதையாக மண் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். அப்படி ஒருகால்தான் திரும்பி வருவதற்குள் சங்கிலி வந்து விட்டால் தண்ணீர் கொண்டுவரப் போனதாகச் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

சிட்டிபாபு மூத்தம்மாவை அந்த அகாலத்தில் பார்த்தபோது ஆச்சரியப்பட்டான். ஆனால் அவள் தட்டுத் தடுமாறித் தான் வந்த விஷயத்தைப் பற்றிச் சொன்னபொழுது அவன் அவ்வளவாக ஆச்சரியப் படவில்லை. அது மூத்தம்மாளுக்கு ஆச்சரியத்தை அளித்தது!

"இவ்வளவுதானா, நான் என்னமோ ஏதோன்னுல்லே பயந்துட்டேன். நான்தான் முழுப் பங்கையும் 'நீயே எடுத்துக்க'ன்னு சங்கிலிகிட்டே கொடுத்தேன்" என்றான் சிட்டிபாபு நிதானமாக.

சிட்டிபாபு வேண்டுமென்றே பொய் சொல்லுகிறான் என்று அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் எதற்காக அப்படிச் சொல்ல வேண்டும் என்று அவனுடைய முக பாவத்திலிருந்து அவளால் ஊகிக்க முடியவில்லை.

"நான் சொல்லுவது உனக்குச் சந்தேகமாக இருக்குது, இல்லையா! இந்தக் களவாணிப் பய சொல்லுவதை எப்படி நம்புவதுன்னு தானே நீ நினைக்கிறே!" என்றான் அவன்.

"ஆ, அந்தமாதிரி யெல்லாம் சொல்லாதீங்க."

"நான் களவாணிப் பயல்தான். ஒப்புக் கொள்றதிலே என்ன தப்பு, மூத்தம்மா! ஆனல், அது உன்னைப் பார்க்கிறதுக்கு முந்தி. மெய்யாச் சொல்றேன், மூத்தம்மா! எந்தப் பொம்பிளையும் என் மனசை இவ்வளவு தூரம் ஆட்டி வைச்சதில்லே. உங்கண்ணன் உன்னை அடிச்சானே, அன்றைக்கு நீ பேசின ஒவ்வொரு பேச்சும் என் மனசிலே ஆணி மாதிரிப் போய்ப் பாய்ந்திட்டது, போயேன்! அன்றைக்கே தீர்மானிச்சுட்டேன், இந்தத் தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டுடறதுன்னு. உன்னைக் கட்டிக்கிடணும்னு அதைத் தவிர வேறே வழியில்லேன்னு நீதான் சொல்லாமல் சொல்லி விட்டாயே! ஆனல் சந்தர்ப்பம்தான் வாட்டமா வரல்லே. இப்ப சங்கிலி என் பங்கைக் கொடுக்காம ஏமாத்தறதைப் பத்தி நான் கவலைப் படவே இல்லே. கேட்டிருந்தால், 'நீயே வைச்சுக்கடா' அப்படின்னு நானே கொடுத்திருப்பேன். நமக்கு எதுக்குத் திருட்டுச் சொத்து! உழைத்துச் சம்பாதித்தால்தான் ஒட்டும், மூத்தம்மா! நீதான் பித்தனையாகக் கிடந்த என்னைப் பொன்னுகச் செய்து விட்டாயே!" என்றான் சிட்டிபாபு, தன் கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

"ஆ, என் ராசாவை நான் பித்தளை யின்னு சொல்லுவேன்! உங்க முகத்தைப் பார்த்த போதே நீங்க தங்கம்னுதான் நான் தெரிஞ்சுக் கிட்டேனே!" என்றாள் மூத்தம்மா.

"சரி போவட்டும்! நீ சொல்கிற மாதிரி நான் பொன்னுலே இருந்திருந்தாலும் அப்ப மாத்துக் குறைவாத்தான் இருந்திருப்பேன்! அதைப் புடம் போட்டுச் சுத்த மாக்கினதாவது நீதான்னு இப்போ ஒப்புக் கொள்றியா!" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் சிட்டிபாபு.

"அட, போங்க! எனக்கு உங்களைப் போலப் பேசத் தெரியுதா!" என்று கொஞ்சலாக மொழிந்த மூத்தம்மா நாணத்துடன் தன் தலையைக் கீழே தாழ்த்திக் கொண்டாள்.

அட்டைப் பட விளக்கம்

எது பெரியது?

வீர மறக் குலத்தில் தோன்றியவன் அவன். நாட்டில் போர் என்று வந்து விட்டால், நாட்டின் மானத்தைக் காப்பாற்ற முன்னணியில் நின்று, வீரப் போர் புரியும் இயல்பு படைத்தவன். இப்படிப் பல முறை தன் ஆருயிர்க் காதலியைப் பிரிந்து, போர்க்களத்துக்கு ஏகி, வெற்றி வாகை அணிந்து திரும்பி யிருக்கிறான். இப்பொழுதும் அத்தகையதோர் சம்பவம் நேரிட்டிருக்கிறது. அவன் போர் வயின் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான். தன் இன்னுயிர்க் காதலியினிடம் விடை பெற்றுக் கொள்ளுகிறான்.

இந்த நிலையில் அவனுக்குப் பழைய அனுபவம் ஞாபகத்துக்கு வருகிறது. அதன் பயனாக அவனுக்கு ஒருவித திகைப்பும் நேர்கிறது.

"அன்பே, உன்னை விட்டு வெகு தூரம் பிரிந்து செல்கிறேனாயினும், என்னால் உன்னை மறக்க முடிவதே இல்லை; உன் இனிய பேச்சு, மலர்ந்த முகம், அன்புப் பணிகள் யாவும் நினைவுக்கு வரும். இவை கூடப் பரவாயில்லை, ஆனல் ஒவ்வொரு சமயம், நீ என்னைப் பார்க்கும் அந்தக் காதலும் கள்ளமும் கலந்து வரும் பார்வை நினைவுக்கு வந்து விடும். அப்பொழுது அந்தப் பார்வை என்னை என்னவெல்லாம் செய்யும் தெரியுமா!

உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகால்,என்
உள்ளம் முழுதும் உடன் பருகும் — ஒள்ளிழையின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோ.அகல்வேன்
உள்ளம் பெரிதோ உரை! — பழம் பாடல்

"அழகியே! உன் அகன்ற விழி பெரிதோ, அல்லது என் உள்ளந்தான் பெரிதோ என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அதை நீ எனக்குத் தெரியச் சொல்வாயா!" என்று அந்த வீரன் கேட்கிறான். இதற்கு யாரால் பதில் சொல்ல முடியும்!

வீரம் பொங்கும் இடத்திலே, அளவு கடந்த காதல் பொங்கும் அரியதோர் உள்ளப் பண்பை, பழம் தமிழ்ப் புலவர் அற்புதமான சொல்லோவியமாகப் புனைந்து சென்றிருக்கிறார். ரசிகமணி டி.கே.சி. அவர்கள் கூறி வந்ததுபோல் பல முறை பாடலைப் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டியதோர் பாடல்.

'கள்ளம் பெருகும் விழி'படைத்தவளை நமது ஓவியர் சந்திரா அற்புதமாகத் தீட்டி யிருக்கிறார்.

மறக்க முடியாது!

விதியைப் போல் கொடுமை யானது வேறொன்றுமில்லை. யமனைப் போல் இரக்கமற்ற பாவி வேறு யாருமில்லை. தமிழ் நாட்டுக்கு, காங்கிரஸ் மகா சபைக்கு அரிய தொண்டு செய்து வந்த விலை உயர்ந்த மனித உயிர் ஒன்றைச் சென்ற வாரத்தில் காலன் கொண்டு போய் விட்டான். பட்டுக் கோட்டை ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை எம். எல். ஏ. அக்டோபர் 26ல் மரணமடைந்த செய்தி தமிழ்நாட்டு மக்களை, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்து மக்களைத் திடுக்கிட்டுக் கண்ணீர் விடும்படி செய்தது.

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை 1900 ஆண்டு பிறந்தார். 1954ம் ஆண்டு மறைந்தார். ஐம்பத்து நாலு வயது நிரம்பிய தமிழகத்தின் சிறந்த தேச பக்தரான ஒருவரைத் தமிழகம் இழந்து விட்டது. ஸ்ரீ பிள்ளையின் தேச பக்தியை எண்ணி யாரும் வியக்காமல் இருக்க முடியாது. தஞ்சை ஜில்லாவில் காங்கிரஸ் மகாசபைக்கு உயிரளித்த செல்வர் ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை. தஞ்சை ஜில்லாவில் உள்ள பெரு நிலம் படைத்த பண்ணையார்கள் எல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் முதன் முதலில் காங்கிரஸில் சேர்ந்து தேச விடுதலைத் தீயில் குதித்து வழிகாட்டிய தேசபக்த தீரர்.

காங்கிரஸ் மகாசபை ஆரம்பித்து நடத்திய எல்லா இயக்கங்களுக்கும் ஆதரவளித்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட உத்தமர்.

1940-ம் ஆண்டு காந்தி மகான் ஆரம்பித்த தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகி.

தஞ்சை ஜில்லாவில் காங்கிரஸைக் கட்டி வளர்க்கப் பாடுபட்டு உழைத்து வந்ததுடன் வேறு பல துறைகளிலும் ஈடுபட்டு உழைத்துப் புகழ் பெற்ற பிரமுகர் அவர்.

பட்டுக்கோட்டை தாலூக்கா போர்டு தலைவராக எட்டு ஆண்டுகள் இருந்து அந்தத் தாலூக்காவுக்கு எத்தனையோ வகையில் தொண்டாற்றியுள்ளார். பல கிராமங்களிலும் ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் பள்ளிக்கூடங்களையும் ஆரம்பித்து வைத்துள்ளார்.

நாகை கோயில் கமிட்டி அங்கத்தினராகவும், தஞ்சை கோயில் கமிட்டி அங்கத்தினராகவும் சுமார் பத்தாண்டுகள் இருந்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றினர்.

1930-ம் ஆண்டு சென்னை சட்டசபைக்கும் சுயேச்சை தேசியவாதியாக வந்தார். 1936-ம் ஆண்டு தஞ்சை ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது கிராம சீரமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து இதர ஜில்லாவுக்கு வழி காட்டியாகத் திறமையுடன் நடத்திக் காட்டினர்.

தஞ்சைக் கூட்டுறவு மத்திய பாங்கின் தலைவராக இருந்து மேற்படி பாங்கின் வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றினர்.

இந்தோ சீனு, கம்போடியா, சயாம் முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து அந்த நாட்டில் உள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களை எல்லாம் பார்வையிட்டு வந்தார். அந்த அனுபவத்தைக் கொண்டு தஞ்சை கூட்டுறவு மத்திய பாங்கியில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

தம்முடைய பாட்டனரின் பெயரால் ஏழைகள் அன்னதானக் கட்டளை நடத்தி வந்தார். நூற்றுக் கணக்கான ஏழை எளிய குடும்பத்தில் பிறந்த மாணவர்களுக்கு நன்கொடைகளும் உபகாரச் சம்பளமும் வழங்கி வந்தார்.



ஸ்ரீ பிள்ளை அவர்களின் இறுதி யாத்திரை

கஸ்தூரிபா காந்தி நிதிக்குப் பணம் திரட்டுவதில் முன்னின்று உழைத்து இதர ஜில்லாக்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். தஞ்சை ஜில்லாவில் க்ஷயரோக ஆஸ்பத்திரி ஏற்படுத்த அரும்பாடு பட்டார். செங்கிப்பட்டி க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குத் தாராளமாக நிதி வழங்கினர்.

பூதான இயக்கத்துக்குத் தம்முடைய வளமுள்ள நிலங்களில் ஐம்பது ஏக்கர் பூமியை வழங்கி அதற்கும் வழி காட்டியாகத் திகழ்ந்தார்.

சென்ற பொதுத் தேர்தலில் சட்ட சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்த சில நாட்களுக்குள்ளாகவே அவர் நோய்வாய்ப்பட்டார். நோய்வாய்ப்பட்டு, எழுந்து நடமாட முடியாமல் இருந்த நிலையிலும் சட்டசபையின் முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்டு தம்முடைய வோட்டை அளித்துத் தாம் மேற் கொண்ட பணியைப் பொறுப்புடன் ஆற்றி வந்தார்.

ஸ்ரீ பிள்ளை அவர்கள் காங்கிரஸில் சேர்ந்த அன்று முதல் நேற்று வரையில் காந்தி பக்தராய் விளங்கிக் கதர் உடுத்திக் காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றப் பெருதவி புரிந்தார். "தேச பக்தர்" என்றும் "தர்மப் பிரபு" என்றும் மங்காப் புகழ் பெற்றார்.

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை அவர்களுடன் பழகியவர்கள் அவரை மறக்க முடியாது. என்றென்றைக்கும் மறக்க முடியாது!

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை காலமான செய்தி கேட்டுத் தஞ்சை ஜில்லாவில் உள்ள ஆயிரமாயிரம் மக்கள் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தப் பட்டுக்கோட்டைக்குச் சென்றார்கள். பட்டுக்கோட்டை வியாபாரிகள் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்தார்கள். பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் விடுமுறை விடப்பட்டது.

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளையின் சடலம் நன்கு அலங்கரிக்கப்பட்ட புஷ்ப விமானத்தில் வைத்திருந்தது. கடைசியில் சுமார் அறுபது பேர் அந்த விமானத்தைத் தூக்கிக் கொண்டு சென்றனர். அந்த இறுதி ஊர்வலத்தில் தஞ்சை ஜில்லா பிரமுகர்கள் அத்தனைபேரும் கலந்து கொண்டு மரியாதை செய்தனர். "நாடிமுத்துப் பிள்ளையின் நாமம் வாழ்க!" என்று மக்கள் கோஷித்தனர்.

ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளை அடிமை நாட்டில் பிறந்தார். தம் வாழ்நாளிலேயே தேசம் சுதந்திரம் அடைந்ததைக் கண்டு மகிழ்ந்தார்; சுதந்திர நாட்டில் மறைந்தார். மறு உலகில் தேச பக்தர்களின் புனித ஆவி சென்றுள்ள இடத்துக்கு ஸ்ரீ பிள்ளையின் ஆவியும் சென்றிருக்குமென்று நம்புகிறோம்.

EMPIRE'S

REPORT OF PROGRESS

in 1953

NEW BUSINESS	... ...	3,22,06,250
TOTAL ASSETS	... ...	11,97,50,963
TOTAL CLAIMS PAID	...	13,99,78,843

Points from the Administrator's Report:

★ Nearly 70 per cent of total Assets invested in Government Securities

★ Good prospects of handsome Bonus in the Valuation as at 31st December '54

THE EMPIRE OF INDIA

LIFE ASSURANCE COMPANY LIMITED

(ESTD. 1897)

Head Office: EMPIRE HOUSE, D. NAOROJI ROAD, BOMBAY

BRANCHES ALL OVER INDIA



அவனுக்கு ஆனந்தம் அளிப்பதற்கு
கையோடு ஒரு புட்டி வைத்திருங்கள்

குழந்தைக்கு வயிற்றுக் கோளாறு இல்லாதிருப்பதால் அவன் சந்தோஷமாயிருக்கிறான். குழந்தை சந்தோஷமாயிருப்பதால் தாயாரும் சந்தோஷமாயிருக்கிறாள்.



I.T.L. **கிரைப் ஸிரப்**

தயாரிப்பாளர்:

ஸ்ரீ மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்

ஸேல்ஸ் டிப்போ: 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

தில்லையில் பொன் விழா

வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்

சைவமும் தமிழும் செழித் தோங்கத் தேவாரப் பாடல்கள் கருவூலமா யிலங்கி வந்திருக்கின்றன. அவற்றில் ததும்பி நிற்கும் பக்திச் சுவை தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் பரவிப் பெருகி யிருக்கிறது. அத்தகைய தேவாரப் பாடல்களை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நற்பணியை மேற்கொண்டு சிதம்பரம், பழனியப்ப முதலியார் தேவார பாடசாலை நீண்ட காலமாக மிகவும் சிறப்புடன் நடந்து வருகிறது.

மேற்படி பாடசாலையை நிறுவியவர் சைவப் பற்று மிக்க சி. பழனியப்ப முதலியராவார். அவர் சோழவள நாட்டில், திருக்கழிப்பாலை என்னும் பதியில் பிறந்தவர்; இளமை தொட்டே சிவபக்தியில் ஊறி நின்று, தில்லையில் நடைபெற்று வரும் ஆனி, மார்கழித் திருவிழாக் காலங்களில் தம் தந்தையாருடன் சிதம்பரம் போந்து நடராஜப் பெருமானை வணங்குவதுண்டு. தில்லையம்பதி தேவஸ்தானத்துப் பிரமுகர்கள் விழாக் காலங்களில் தேவார பாராயணத்துக்காகத் திருவிடைமருதூர் நாகலிங்கம் பிள்ளை முதலிய பேரறிஞர்களை அழைத்துத் திரு வீதிகளில் பாராயணம் செய்விப்பது வழக்கம்.

அத்தகைய நிகழ்ச்சிகளில் பழனியப்ப முதலியார் கலந்து கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்ததோடு அந் நிகழ்ச்சிகள் என்றும் நிலை பெற வேண்டும் என்று பெரிதும் விழைந்து, திருவருள் துணை கொண்டு 1903ம் ஆண்டு, தேவாரப் பாடசாலையைச் சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் தெருவில், துவங்கினர். தேவாரப் பாடல்களை உள்ளம் உருக, ஊன் உருகப் பாடும் ஸ்ரீ நடராஜ ஓதுவா மூர்த்தி அவர்களை ஆசிரியராக நியமித்தார். முதலில் பன்னிரண்டு மாணவர்கள் சேர்ந்தனர். அவர்கள் கல்வி பயிலும் காலம் ஐந்து ஆண்டு காலம் என எல்லை வகுத்துத் தேவாரத்தோடு, தமிழ் இலக்கிய இலக் கணங்களையும் கணிதத்தையும் கற்பிக்க வேண்டும் என்று ஸ்ரீ பழனியப்ப முதலியார் ஏற்பாடு செய்தார்.

மேற்படி பள்ளியில் தேவாரம் பயிலும் மாணவர்கள் தினந் தோறும் நடராஜப் பெருமான் ஆலயத்தில் தேவாரபாராயணம் நிகழ்த்த வேண்டும்; பிரதோஷகாலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் திருவீதிகளிலும் தேவார பாராயணம் செய்து வர வேண்டும் என்றும் வகுக்கப்பட்டது. ஸ்ரீ பழனியப்ப முதலியார் தம் வாழ்நாள் முழுவதும் தேவார பாடசாலையைக் கண்ணே போல் பாதுகாத்து வந்தார்; பாடசாலைக் கட்டிடத்தைச் செவ்வனே கட்டி முடித்து, தம் காலத்துக்குப் பின்னரும் பாடசாலை செழித்தோங்குமாறு சில நிவந்தங்களையும் குறைவறச் செய்து வைத்தார்.

அம்பலக்கூத்தன் ஆனந்தத் தாண்டவம் புரியும் அற்புதச் சிற்சபை அமைந்தது சிதம்பரம் என்னும் திவ்ய ஸ்தலம்; திருமுறை கண்டெடுக்கப் பெற்றது தில்லையம்பதி, சேக்கிழார் பெருந்தகை பெரிய புராணம் பாடி அரங்கேற்றியது தில்லையம்பதி; இத்துணைச் சிறப்புடைய இப்பதியில் திரு பழனியப்ப முதலியார் தேவார பாடசாலையை நிறுவி ஏனையோர்க்கும் வழிகாட்டியா யிருந்த இச் செயல் பாராட்டுக்குரியது.

திரு பழனியப்ப முதலியார் பேரார்வத்தோடு துவங்கி நடத்தி வந்த மேற்படி பாடசாலை இன்று ஐம்பதாண்டு நிறைவை எய்தி யிருக்கிறது. அண்மையில் அப் பாடசாலையின் பொன் விழா மிகவும் சிறப்பாகச் சிதம்பரத்தில் நடந்தேறியது. பொன் விழாத் துவக்க தினத்தில் அதிகாலையில் திருப்பள்ளி யெழுச்சி பாடப் பெற்றது. அதற்குப் பிறகு, ஐம்பத்தெட்டு பேர்கள் பாடசாலையில் சிவபூஜை செய்து திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட்ட காட்சி உருக்கம் தருவதாக இருந்தது.

அன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு மகேசுவர பூஜை நிகழ்த்தப்பட்டது. அன்று மாலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் சைவத் திரு ஏ. ராமநாதம் பிள்ளை எம். ஏ., அவர்கள் தலைமையில், சீர்காழி பெருநிலக் கிழார் திரு வி. ராமநாத முதலியார் சிவபூஜை விழாவைத் துவக்கி வைத்து, அரியதோர் விரிவுரையும் நிகழ்த்தினர்.



ஸ்தாபகர் பழனியப்ப முதலியார்

அதன் பின்னர், தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத் தலைவர் வித்துவான் திரு முத்து சு. மாணிக்க வாசக முதலியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு தண்டபாணி தேசிகர், தாவர நூல் ஆசிரியர் சீனிவாசன் ஆகியோர் அரிய சொற்பொழிவு செய்தனர். மேற்படி சொற்பொழிவுகள் பக்திச் சுவை ததும்பும் மாண்பு மிக்க நிலையில் விளங்கின.

பொன் விழாவின் இரண்டாம் நாள் உயர் திரு

பி. டி. ராஜன் எம். எல். ஏ., அவர்களின் சீரிய தலைமையில் துவங்கியது. தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு எஸ். ராமலிங்க ஓதுவார், பாடசாலையின் ஐம்பதாண்டு அறிக்கையை வாசித்தார்.

தெய்வ நெறியில் மனம் பற்றி இடையறாது சைவ சமயத் தொண்டைச் சார்ந்திருக்கும் உள்ளத்துடன் பேரார்வங் கொண்டு தம் பாட்டனார் திரு பழனியப்ப முதலியார் நிறுவிய தேவார பாடசாலையை நிர்வகித்து நன்கு புரந்து வரும் உயர் திரு சிவசங்கர சின்னையா முதலியார், தலைவரையும் ஏராளமாகக் குழுமி யிருந்த அன்பர்களையும் வரவேற்கும் முகத்தால் அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார். பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் தலைவர் உயர்திரு ஸ்ரீ. சுப்ரமணியப் பிள்ளை எம். ஏ.பி. எல்., பொன்விழாப் பிரசங்கத்தை அமோகமாக நிகழ்த்தினார்.

பிற்பகலில் திரு பி. டி. ராஜன் தலைமையில் எஸ். தருமலிங்க முதலியார், தேவாரப் பாடசாலையை நிறுவிய திரு பழனியப்ப முதலியாரின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தார். சிதம்பரம் அட்வொகேட் உயர்



சிவசங்கர சின்னையா முதலியார்

வைணவத் திரு சி. வி. சீனிவாசாச்சாரியார், திரு ப. ராஜரத்தினவேல் முதலியார் அவர்களின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

பிறகு, முன்னாள் கல்வி அதிகாரி உயர் சைவத் திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மெய் கண்டார் நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். அன்று இரவு வீரவ நல்லூர் சுந்தர ஓதுவா மூர்த்தி "திரு நீலகண்டர்" என்னும் பொருள் பற்றிக் கதா காலட்சேபம் நிகழ்த்தினார்.

தேவார பாடசாலையின் பொன் விழா வைபவத்தின் இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும் பக்தி உணர்ச்சியும் கலை ஆர்வமுங் கொண்ட தமிழ்ப் பெரு மக்கள் பெருந் திரளாகக் கூடிச் சிரத்தையோடு ரசித்தது மிகவும் பாராட்டத் தக்கதாயிருந்தது. சைவநன்னெறியில் பற்றுக் கொண்ட மக்களின் தோற்றம் மேற்படி விழாவுக்கே களையூட்டுவதா யிருந்தது.

மூன்றாம் நாள் விழாவன்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் சொல்லின் செல்வருமான உயர் திரு ரா. பி. சேதுப் பிள்ளை தலைமை தாங்கினார். தேவார ஆசிரியர் மகா நாடும், திரு முறை விழாவும் துவங்கின. விவசாய மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர், திரு எஸ். பி. கே. ஆர். ராமநாதம் செட்டியார் அவர்களும், திரு ராமலிங்கம் அவர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

தலைமை வகித்த திரு ரா. பி. சேதுப்பிள்ளையின் இலக்கிய வளமும் பக்தி மணமும் வீசும் இணையற்ற சொற் பொழிவு பொன் விழா வைபவத்தைப் பொங்கிப் பொலியச்செய்தது.

அன்று மாலை திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, திரு வெள்ளை வாரணம், திரு என். சிவப்பிரகாச தேசிகர் முதலியோர் சீரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அன்று இரவு சென்னை, தருமபுர ஆதீனம் சமயப் பிரசார நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள், தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் திரு ஏ. உத்தண்டராமன் தலைமையில் "ஞான சம்பந்தர்" என்னும் நாடகத்தைச் சுவையுற நடத்திக் காட்டினார்கள்.

மேற்படி நாடகம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயமைந்து ரஸிகப் பெருமக்களின் பாராட்டைப் பெற்றது.

முடிவில், தேவாரப் பாடசாலையை மிக்க ஊக்கத்துடன் புரந்து வரும் அன்பர் சிவசங்கர சின்னையா முதலியார் அவர்கள் நன்றி கூறப் பொன் விழா இனிது முடிவுற்றது.

டாக்டர் வி நடேசன் (அஸிஸ்டெண்ட் சர்ஜன் சிடைபர்ட், திருக்கோவிலூர்) அவர்கள் "ஹாரஸ்கோப் எக்ஸ்சேஞ்" சேவையைப் பாராட்டி எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டபடி குறிப்பிட்டுள்ளார்கள்:

"..........'ஹாரஸ்கோப் எக்ஸ்சேஞ்ச' ஓர் ஒப்பற்ற ஸ்தாபனம். இந்தப் பரோபகாரமான தொண்டைச் செய்ய முன் வந்தவர்களை மனமாரப் பாராட்ட விரும்புகிறேன். வெகு சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் இந்த ஸ்தாபனம் பலருக்கு உபகாரம் செய்வதில் வெகு வேகமாய் முன்னேறி வருகிறது. இந்த ஸ்தாபனத்துக்கு எல்லாவித உற்சாகமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது மிக அவசியமாகும்......."


இப்படிப் பலபேர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது "ஹாரஸ்கோப் எக்ஸ்சேஞ்". தென் இந்திய ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்வ பெற்றோர்கள் கலியாண வயது வந்த தங்கள்பெண் அல்லது பிள்ளை ஜாதகங்களை முழு விவரங்களுடன் கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள். சொற்ப செலவில் உங்களுக்குத் தகுந்த பெண் அல்லது பிள்ளையின் ஜாதகத்தை அனுப்பி வைக்கப்படும்.

★

JAYA

HOROSCOPE EXCHANGE

Post Box No. 1834, MADRAS-1



சிவசங்கரன் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும், பம்பாயை விட்டுக் கிளம்பித் தமிழ் நாட்டின் கிராமத்துக்கு வருவதற்கு அவ்வளவாக விரும்பவில்லை. அவருடைய பிள்ளைகள் இருவரும் பம்பாயிலேயே நல்ல உத்தியோகங்களில் இருந்தார்கள். கல்யாண வயதை அடைந்திருந்த அவர் பெண் கௌசல்யாவையும், பம்பாயிலே தெரிந்த குடும்பத்தில் உள்ள யாராவது ஒரு பையனுக்குக் கொடுத்து விட்டுத் தாமும் பம்பாயிலேயே தங்கி விடலாம் என்றே அவர் நினைத்திருந்தார். அவர் இட்டத்துக்குத் தலையை ஆட்டிக் கொண்டிருந்த அவர் மனைவியும் பெண்ணும் கடைசி நிமிஷத்தில் மனம் மாறி, கொஞ்ச நாட்களாவது காவேரிக் கரையில் வசிக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தனர். ஆகவே சிவசங்கரன் குடும்ப சகிதமாகக் கிராமத்துக்கு வந்து, பழைய வீடு ஒன்றை வாங்கிப் புதுப்பித்துக் குடி புகுந்தார்.

சிவசங்கரனுக்கு அந்த ஊர்தான் பிறந்த ஊர். அங்கே அவருடைய சகோதரியும், சகோதரியின் புருஷனும் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரே பிள்ளை, ஒரே பெண். பிள்ளை நன்றாகப் படித்து விட்டு ஊரோடு வந்து விட்டான். வேண்டிய ஆஸ்தி இருந்தது.

ராஜாராமன் இந்த உலகத்தில் இரண்டே இரண்டு விஷயங்களுக்காக உயிர் வாழ்ந்தான். ஒன்று, அவனை ஆட்கொண்டிருந்த சித்திரக் கலை. மற்றொன்று அவன் தங்கை பானு. தகப்பனுக்கு ஒரே பிள்ளையாதலாலும், வேண்டிய அளவு சொத்து இருந்ததாலும், படித்த படிப்பை அடிமை வேலைக்கு உபயோகப்படுத்திக் கொண்டு தன் கலை உணர்ச்சியையும் பாழ்படுத்திக் கொள்ளாமல் கிராமத்திலேயே இருந்து கொண்டு கண்ணில் பட்டதை எல்லாம் சித்திரமாக வரைந்து கொண்டிருந்தான். அவன் வரைந்த கிராமக் காட்சிச் சித்திரங்கள், பத்திரிகைகளின் ஆண்டு மலர்களில் வெளியாயின.

அவன் தங்கை பானு, அவர்கள் குடும்பத்துக்குத் தீராத ஏக்கம் கொடுக்கப் பிறந்தவள். அவள் பிறவிக் குருடு. பெண் குழந்தை வேண்டும், பெண் குழந்தை வேண்டும் என்று தவம் இருந்தவர்களுக்கு, ராஜாராமன் பிறந்த எட்டு வருஷங்களுக்குப் பிறகு பானு பிறந்தாள். ஆனால் அவள் பிறந்ததும், அவளைப் பார்த்த பெற்றோருக்கு நரம்பு தளர்விட்டது. பானு குருடு.

ஒரே தங்கை, வெகுநாள் கழித்துப் பிறந்தவள் என்பதுடன் கண் இல்லாதவள் என்பதனால் ராஜாராமனுக்குப் பானுவின் மேல் இயற்கைக்கே அதீதமான ஒரு அன்பு. அவன் எங்கேயாவது வயல் வெளிகளிலே நின்று கொண்டிருப்பான். 'பானு தூணில் முட்டிக் கொண்டு அழுகிறாள்' என்று யாராவது சொல்வார்கள். அவ்வளவுதான்; ராஜாராமனுக்கு உடம்பு முழுவதும் பதறும். "ம்...ம்...மா...!" என்று வயிற்றை இறுக்கிக் கொண்டு, வாலைத் தூக்கியபடியே நாலு கால் பாய்ச்சலில் கன்றை நோக்கிப் பாய்ந்து ஓடி வரும் பசு மாதிரி வீட்டுக்கு ஓடி வந்து பானுவைத் தூக்கி வைத்துக் கொண்டு அவளைச் சமாதானம் செய்வான். படித்திருந்தும் அவன் உத்தியோகத்துக்குப் போகாமல் ஊரோடு நிலைத்ததற்குப் பானுவும் ஒரு காரணம்.

கிராமத்துக்கு வந்து தங்கிய கௌசல்யாவுக்கும் ராஜாராமனுக்கும் ஒருவரை ஒருவர் பிடித்தது. அவர்களுக் கிடையே அன்பு வளர்ந்தது. அது வரை கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படாத ராஜாராமன், கௌசல்யாவை மனப்பூர்வமாக விரும்பினான். கௌசல்யாவோ, ராஜாராமனையும் அவனுடைய சித்திரக் கலையையும் சேர்த்து காதலித்தாள். அவர்களுடைய கல்யாணம் அடுத்த தை மாதம் நடைபெற இருந்தது.

கௌசல்யா, ஒவ்வொரு நாளும் தன்னைப்போல ஒரு சித்திரம் வரையுமாறு கேட்டுக்கொண்டிருந்தாள். ராஜாராமனும் ஆகட்டும் என்று நாட்களைக் கடத்தி வந்தான்.

ஒருநாள் சாயங்காலம் ஐந்து மணி இருக்கும். மொட்டை மாடியில் மாலை வெய்யிலில் ராஜா

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா

சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்திலுல் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○●○

14 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌண்டர் & கோ.

41, பந்தர் தெரு - சென்னை

ராமன் பானுவை நிற்கச் சொல்லி, எதிரில் இருந்த திரைச் சீலையில் அவளைப் படமாக வரைந்து கொண்டிருந்தான். அப்பொழுது கௌசல்யா அவனைத் தேடிக்கொண்டு அங்கே வந்தாள். வரும்போது 'இன்று எப்படியாவது அத்தானிடம் கெஞ்சித் தன்னைப்போல ஒரு படம் எழுதும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டு வந்தாள். அப்போது ராஜா ராமன் பானுவைப் படமாக எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவள் பெண் உள்ளம் சிலிர்த்து எழுந்தது.

ராஜாராமனுக்கு எதிரில் வந்து நின்றுகொண்ட கௌசல்யா, "என்னைப் படமாக வரையுங்கள் என்றால் மாத்திரம் உங்களுக்கு அவகாசம் இருக்காது" என்றாள் சற்று மனஸ்தாபத்துடன்.

வேலையில் ஆழ்ந்து போயிருந்த ராஜாராமன் "சரி, இப்பொழுது தொந்தரவு செய்யாதே, கௌசல்யா. நாளைக்குக் கட்டாயம் உன்னை வரைந்து விட்டு மறு வேலை பார்க்கிறேன்" என்றான் பணிவாக, அவளைப் பார்க்காமலேயே.

கௌசல்யாவின் குரலைக் கேட்ட பானு "அம்மங்கா!" என்று அழைத்தாள்.

"பானு! அம்மங்கா, அத்தங்கா எல்லாரையும் அப்புறம் பார்த்துக்கலாம். சற்று அசங்காமல் இரு!" என்றான் ராஜாராமன், கண்டிப்புடன். அவன் எவ்வளவோ சரளமான சுபாவம் உடையவன்தான் என்றாலும், சித்திரம் எழுதும் வேலையில் ஆழ்ந்திருக்கும்போது யார் வந்து தொந்தரவு செய்தாலும் எரிந்து விழுவான்—பானு உள்பட. அப்பொழுது அவன் மனிதனாகவே காட்சி அளிக்க மாட்டான்.

"பானுவையா எழுதுகிறீர்கள்!" என்று கேட்டாள் கௌசல்யா.

"ஆமாம். சற்று நேரம் பேசாமல் இரேன்" என்றான் ராஜாராமன்.

"யார் பார்த்து மகிழ்வதற்கு!" என்று கேலியாகக் கேட்டாள், கௌசல்யா.

பானுவுக்குச் சுரீர் என்றது. முகத்தைச் சுளித்துக் கொண்டாள். ராஜாராமன் தலை நிமிர்ந்து கௌசல்யாவைப் பார்த்து, "கௌசல்யா, இங்கிருந்து போய் விடு. போய் விடு, உடனே. நான் வேலையாக இருக்கிறேன்" என்றான்.

"நான் போயிடறேன்; என்னை என்றைக்கு வரையப் போகிறீர்கள் என்று சொல்லிவிடுங்கள்" என்று கேட்டாள் கௌசல்யா.

"நாளைக்கு. சொன்னால் கேட்கணும். இப்பொழுது தொந்தரவு செய்யாதே!" என்றான் ராஜாராமன், பொறுமை இழந்து.

"நாளைக்கு, நாளைக்கு என்று நாலு மாசமாகச் சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். எருமை மாட்டையும் எரிந்து போயிருக்கும் பனைமரத்தையும் வரையத்தான் உங்களுக்கு நேரம் இருக்கு!"

"கௌசல்யா!" என்று ராஜாராமன் கத்தினான்.

"பானுவை வரைந்து எந்த எக்ஸிபிஷனுக்கு அனுப்பப் போகிறீர்கள்!" என்று கௌசல்யா கேலியாகக் கேட்டாள்.

இதே கேள்வியை வேறு யாராவது கேட்டிருந்தால் அந்த ஆளை அதே இடத்தில் ராஜாராமன் தீர்த்துக் கட்டி யிருப்பான். கௌசல்யாவாக இருந்ததனால் கடைசி நிமிஷத்திலும் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முயன்றான்.

இயற்கை, தன் கொடூரமான கைகளினால் பானுவின் கண்களை எடுத்துக்கொண்டு விட்டாலும் அவளுக்கு, நடக்கப் போகும் விஷயத்தை முன்பாகவே அறிந்து கொள்ளக்கூடிய அதீதமான

சக்தியைக் கொடுத்திருந்தது. அதனால் அவள் "அம்மங்கா!" என்று அழைத்து நிறுத்தினாள்.

அன்றைக்கு என்னவோ கௌசல்யாவின் நாவில் சனியன் இருந்தது. இல்லாவிட்டால், எப்பொழுதும் இரக்க சுபாவமும், பானுவிடம் ராஜாராமன் வைத்திருந்தது மாதிரிப் பரிவும் உடைய அவள் அன்று ஏன் அப்படிப் பேசியிருக்க வேண்டும்! ஒரே வார்த்தைதான்.

"ஆமாம், உங்களுக்குக் குருடையும் ஊமையையும் வரைவதற்குத்தான் நேரம் இருக்கிறது. என்னை வரைவதற்கு.........."

அந்த க்ஷணத்தில் ராஜாராமனின் முகத்தைப் பார்த்த கௌசல்யா, அதில் உருவாகிக் கொண்டிருந்த குரூரத்தைக் கவனித்து, வார்த்தையை அப்படியே நிறுத்தி விட்டாள். ஆனால் அதற்குள் ராஜாராமன் மூண்டுக் கொண்டு விட்டான். கையில் வைத்துக் கொண்டிருந்த தூரிகையைக் கௌசல்யாவின் முகத்தை நோக்கி விட்டெறிந்து விட்டு எழுந்திருந்து "என்ன சொன்னாய்! என் தங்கை குருடியா!" என்று சொல்லிக்கொண்டே ராக்ஷஸ பலத்துடன் பளார் என்று கௌசல்யாவின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து விட்டான். தன்னை மீறி எழுந்த ஆத்திரத்தில் அவன் உடலெல்லாம் படபடத்தது.

சற்றும் எதிர்பாராதவாறு விழுந்து விட்ட அறையின் வேகத்தினால் கௌசல்யா நிலை கலங்கிப் போய் விட்டாள். இடது காதினுள் 'ஙொய்...' என்று ரீங்காரம் எழுந்தது. அகங்காரத்தினாலும், ஆத்திரத்தினாலும், அவமானத்தினாலும் துடித்துப் போய் விட்ட அவள் "நான் சொல்கிறது என்ன! ஊர் சொல்கிறது; உலகமே சொல்கிறது! பின்னே உங்கள் தங்கை என்ன, சர்வ லக்ஷணங்களும் பொருந்திய ரத்தினமோ!" என்று கண்களில் கண்ணீர் பொங்க, உதடு துடிக்க, வலது கையினால் அறை விழுந்த இடது கன்னத்தைப் பிடித்துக் கொண்டே சொன்னாள்.

அவ்வளவுதான்; விண் என்றிருந்த கையை உதறி விட்டுக் கொண்டிருந்த ராஜாராமன் திரும்பிக் கொண்டு "ஊர் சொல்கிறதா! உலகம் சொல்கிறதா! வாங்கிக் கொள் நீயே, ஊருக்கும் உலகத்துக்கும் சேர்த்து!" என்று சொல்லிக் கொண்டே, அவளுடைய இடது கன்னத்தில் தன் வலது கையைத் திருப்பிக் கொண்டு புறங்கையினால் பளார் பளார் என்று அறைந்து "வெளியே போ!" என்று வெட்டித் தள்ளினான்.

கௌசல்யா போகாமல் திரும்பி நின்றுகொண்டு "என்னை அறைவதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது! என்னைத் தொடுவதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது" என்று சீறிக் கொண்டே கேட்டாள்.

"யோக்கியதையா! என் தங்கையைக் குருடு என்று யார் என் காது கேட்கச் சொன்னாலும் அவர்களுக்கு இதுதான் கிடைக்கும்!"

ஒரே நிமிஷத்துக்குள் நடந்து விட்ட இந்த நிகழ்ச்சியைக் கண்களால் பார்க்க முடியா விட்டாலும் பானு உணர்ந்து கொண்டு, கண்களில் கண்ணீர் வழிய "அம்மங்கா! அம்மங்கா! நீ அகத்துக்குப் போயேன்!" என்று கெஞ்சினாள்.

ஆனால் கௌசல்யா நகரவில்லை.

"வெட்கமாக இல்லையா, உங்களுக்கு, இந்த மாதிரி ஒரு பெண்ணைக் கைநீட்டி அடிக்க! தூ!" என்று துப்பினாள் கௌசல்யா.

"உன்னைப்போல வாய் நீளம் உள்ள பெண்களின் நாக்கைக் கல்யாணத்துக்கு முன்னாடியே கத்திரித்து வைத்துவிட வேண்டும்!"



"இங்கே ஒருத்தரும் கழுத்தை நீட்டிக்கொண்டு காத்துக் கொண்டிருக்க வில்லை, நீங்கள் மாலை யிடுவதற்கு!" என்றாள் கௌசல்யா.

"மாலையைக் கையில் வைத்துக் கொண்டு உனக்குப் போடக் காத்துக் கொண்டிருக்கவில்லை, இங்கே யாரும்!" என்றான் ராஜாராமன்.

"அண்ணா, நிறுத்தேன்! அம்மங்கா!" என்று பானு துடித்தாள். ஆனால் அவளை இருவரும் லட்சியம் செய்யவில்லை.

"நான் போகிறேன்! இனிமேல்......இனி மேல்......"

கௌசல்யா போய் விட்டாள்.

ஆத்திரத்துடன் ஓடி வந்த கௌசல்யாவை, அவள் வீட்டு வாசல் திண்ணையில் அவள் தகப்பனார் தடுத்து நிறுத்தினார். கௌசல்யா தன் முகத்தைத் தகப்பனாருக்குக் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டு நின்றாள். "கௌசல்யா! உன் அண்ணா கடிதம் எழுதி யிருக்கிறான் பார்த்தாயோ! உன்னை ராஜாராமனுக்குக் கொடுப்பதில் அவனுக்கு இஷ்டம் இல்லையாம். அங்கேயே வேலை பார்க்கும் ஒரு பையனைப் பார்த்திருக்கிறானும். அந்தப் பிள்ளையை அழைத்துக் கொண்டு அடுத்த வெள்ளிக்கிழமை வரானும். உன் சம்மதம் தெரியணும் அம்மா!" என்றார்.

"சரி, அப்பா! அவர்களை வரச்சொல்லி எழுதி விடுங்கள்!" என்று சொல்லிவிட்டுக் கௌசல்யா உள்ளே ஓடித் தன் அறைக்குள் புகுந்து, கட்டிலில் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

பாதி முடிந்திருந்த பானுவின் படம் பாழாகி விட்டது. ஆத்திரத்தில் அறைந்துவிட்ட ராஜாராமனும் கை ஓய்ந்துபோய் அப்படியே உட்கார்ந்து விட்டான். பானுவும் தன்னுடைய அண்ணாவின் மன நிலைமையை அறிந்து பேசாமல் ஒதுங்கிக் கொண்டு விட்டாள்.

அன்று இரவு ரயிலில் ராஜாராமன் கிளம்பி மறுநாள் நடக்கவிருந்த சிநேகிதனின் கல்யாணத்துக்குப் போக இருந்தான். அதனால் பிரயாணத்துக்குத் துணிமணிகளை எடுத்துவைக்க அவன் உடனே எழுந்திருந்தான்.

ஆறு நாட்கள் ஆயின. ராஜாராமன் ஊருக்குத் திரும்பினான்.

கல்யாண வீட்டில் இருந்த மூன்று நாட்களும் அவனுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. புது மணம் ஆன அவன் சிநேகிதனும் அவன் மனைவியும் சிரித்து விளையாடி, சினிமாவுக்கும் நாடகத்துக்கும் போய் வந்தார்கள். கல்யாணத்துக்கு வந்திருந்த பெரியோர்கள் கூடப் புது மணத் தம்பதிகளைக் கேலி செய்து ஆனந்தம் அடைந்தார்கள். ஆனால் ராஜாராமனின் மனம் துடித்தது. கல்யாணம் ஆன மூன்றாவது நாள் அவன் அங்கிருந்து கிளம்பி விட்டான். குற்றாலத்துக்குப் போய் இரண்டு நாட்கள் தங்கினான். ஆகா! இந்த இடத்துக்கு, கல்யாணம் ஆன பிறகு, கௌசல்யாவும் அவனும் வந்து தங்க வேண்டும் என்று எவ்வளவு ஆவலுடன் திட்டம் போட்டிருந்தான்! எல்லாம் பாழ்! க்ஷண நேரக் கோபத்தினால் எல்லாமே பாழாகி விட்டது!

ராஜாராமன் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். சாயங்காலம் ஐந்து மணிக்கு வந்த ரயிலில் ஸ்டேஷனை விட்டு இறங்கி, வண்டியில் ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது எதிர்ப் பக்கத்தி லிருந்து வேகமாக வந்த கார் ஒன்று ராஜாராமனின் வண்டியைத் தாண்டிக் கொண்டு புழுதியில் மறைந்தது.

"யார் அது, காரில் ஊருக்கு வந்து விட்டுப் போனது!" என்று அவன் வண்டிக்காரனை ஆவலுடன் விசாரித்தான்.

வண்டி ஓட்டியவன் ராஜாராமனுக்குப் பிரியமான வேலையாள். ராஜாராமனின் அபிலாஷைகள் அவனுக்குத் தெரியும். கௌசல்யாவை அவன் அந்தரங்கமாக நேசித்ததும், பின்பு ஏனோ அந்தக் கல்யாணம் நின்று விட்டதும் அவனுக்குத் தெரியும். அதனால் தயக்கத்துடன்தான் "நம்ம பம்பாய் ஐயா ஊட்டுப் பொண்ணைப் பார்க்கிறதுக்காகப் பம்பாயிலிருந்து ஒரு பிள்ளை வந்துவிட்டுப் போறாரு" என்றான்.

ராஜாராமனின் இதயம் திடீரென்று அவன் உடலிலிருந்து பிரிந்து, தண்ணீருக்குள் மூழுகுவதைப் போல அவன் உணர்ந்தான். "அதற்குள்ளேயா!" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே நினைத்தான். கௌசல்யாவின் முகம் ஒரு கணம் அவன் கண் முன்னால் வந்து அவன் இதயத்தில் வேதனை மூட்டியது.

அன்று நடந்த சம்பவத்தைப் பற்றி ஒருவரும் ராஜாராமனின் தாயாரிடம் சொல்லவில்லை. பானுவையும் சொல்லக் கூடாது என்று ராஜாராமன் எச்சரித்திருந்தான். அதனால் ராஜாராமனின் தாயார், கௌசல்யாவுக்கு வேறு இடத்தில் வரன் பார்க்கிறார்கள் என்று தெரிந்ததும், தமையனிடம் போய்ச் சண்டை பிடித்தாள். ஆனால் அவள் குரலை யாரும் லட்சியம் செய்யவில்லை. கௌசல்யா கூட அத்தையிடம் சரியாகப் பேசவில்லை.

ராஜாராமன் ஊருக்குத் திரும்பி வந்து இரண்டு மூன்று நாட்கள் ஆயின. அவன் உள்ளம் கௌசல்யாவைப் பார்க்க நிமிஷத்துக்கு நிமிஷம் துடித்துக் கொண்டிருந்தது. அவளை ஒரு முறை பார்த்து அன்று தான் அவளை அறைந்தது தவறு என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அவள் எங்கே இருந்தாலும் சௌக்கியமாக இருந்தால் அதுவே அவனுக்குப் போதும் என்றும் அதற்காக அவன் கடவுளை வேண்டிக் கொள்வதாகவும் சொல்வதற்கு அவன் துடித்தான். ஆனால் அவள் வீட்டுக்குப் போக அவன் கால்கள் எழும்பவில்லை.

அவனுக்கு எதிரே திரைச் சீலையும், தூரிகையும், வர்ணத்தாம்பாளமும் இருந்தன. மொட்டை மாடியில் தனிமையில் அவன் உட்கார்ந்திருந்தான். வர்ணங்களைச் சரியாக வைத்துக் கொண்டு தூரிகையினால் திரைச் சீலையில் கோடு இழுக்க ஆரம்பித்தான். அப்படி ஆரம்பிக்கும்போது இதை எழுத வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு ஆரம்பிக்க வில்லை. துடிக்கும் உள்ளத்தைச் சமனப் படுத்திக் கொள்வதற்காகக் கைகளுக்கு வேலை கொடுக்க நினைத்தான். கை தாமாகவே வேலை செய்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் கௌசல்யாவின் உருவமே அவனையும் அறியாமல் திரைச் சீலையில் உருவெடுத்தது. அவன் மெய்ம் மறந்து போய் அந்தப் படத்தை எழுதுவதில் ஈடுபட்டிருந்தான்.

அப்பொழுது பின் பக்கத்திலிருந்து காலடிச் சத்தம் கேட்டது. பானுவாக இருக்கும் என்ற நினைவில் அவன் திரும்பிப் பார்க்க வில்லை. ஆனால் வந்தது பானு இல்லை; கௌசல்யா! திரைச் சீலையில் தன் உருவமே எழுவதைப் பார்த்த அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். அதைப் பார்த்ததும் அவள் உள்ளம் கனிந்தது. தழுதழுத்த குரலில் "அத்தான்!" என்று அழைத்தாள்.

ராஜாராமன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கௌசல்யாவைப் பார்த்ததும் எழுந்து திரைச் சீலையை மறைத்துக் கொண்டு நின்றான்.

இருவரும் ஒருவரை ஒருவர் ஒரு கணம் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டனர். அந்தக் கணத்தில் இருவர் மனமும் துடிதுடித்தது.

ராஜாராமன் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, "கௌசல்யா, நீ எங்கேயாவது சௌக்கியமாக இருந்தால் சரி. நான் அதைத்தான் வேண்டிக் கொள்கிறேன். அன்றைக்கு நான் உன்னை அறைந்தது மிகவும் தவறு. அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

"அத்தான்! நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். அன்றைக்கு ஆத்திரத்தில் மரியாதை கூட இல்லாமல் என்னென்னவோ பேசிவிட்டேன். என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்று கௌசல்யா கெஞ்சினாள்.

"நான் மன்னிப்பதோடு மாத்திரம் இல்லை, கௌசல்யா! நீ யாரோ ஒருவன் வீட்டுக்குப் போக வேண்டியவள். உன்னை மனப் பூர்வமாக ஆசீர்வதித்து அனுப்புகிறேன். அன்றைக்கு உன்னை வந்து பார்த்தவரை உனக்குப் பிடித்திருக்கிறது, அல்லவா! எங்கேயாவது நீ சுகமாக இருக்க வேண்டும் அவ்வளவுதான். என் தங்கை குருடி. அவளுக்குக் கல்யாணம் செய்வதைக் காணுவதற்கு நான் பாக்கியம் செய்யாதவன் போலிருக்கிறது. என் தங்கைமாதிரி இருக்கும் உன் கல்யாணத்தையாவது......"

"அத்தான்......!"

"என் கௌசல்யா!"

கௌசல்யா இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

இருவரும் மெய்ம்மறந்து நின்ற சமயம் "அம்மங்கா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். பானு இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிய அருகில் நின்றாள். பானுவின் கன்னங்களிலும் வழிந்த கண்ணீரைப் பார்த்ததும் கௌசல்யா பதறிப்போய் "பானு!" என்றபடியே அவளை அணைத்துக் கொண்டாள்.

"அம்மங்கா! என்னால்தானே உனக்கும் அண்ணாவுக்கும் நடக்க இருந்த கல்யாணம் நின்று போய் விட்டது......! நான் குருடி, அம்மங்கா! நான் ஆசைப்பட்டாலும், எவ்வளவுதான் என் மனம் விரும்பினாலும் எனக்கு இந்த ஜன்மத்தில் கல்யாணம் நடக்காது. எனக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் இல்லை என்றால், பிறத்தியாருக்கு நடக்க இருக்கும் கல்யாணமும் என்னால் தடைப் படணுமா! அண்ணா உன்னை மூர்க்கத்தனமாக அடித்தது தவறு. எல்லாம் என்னால்தானே! அம்மங்கா! உன்னை ஆயிரம் தடவை நமஸ்காரம் பண்ணுகிறேன். என் அண்ணாவை மன்னித்து அவரையே கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிக்க மாட்டாயா!"

கௌசல்யா பானுவைக் கட்டிக் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள்.

"அன்றைக்கு நீ என்னைக் குருடி என்று சொன்னதனால் எனக்குக் கோபம் இல்லை. ஏன் தெரியுமா! உனக்கு என்னிடம், அண்ணாவுக்கு என்மீது இருக்கிறது மாதிரியே, உள்ளூற அன்பு இருக்கிறது. எனக்கு அது தெரியும்......இதை எல்லாம் ஒரு க்ஷணத்தில் மறந்துவிட்டு, நீ வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொண்டு விட்டால் அப்புறம் அண்ணாவுக்கு வரும் மன்னி என்னை எப்படி நடத்துவாளோ!... அம்மங்கா! நீதான்..." என்று விம்மினாள் பானு.

கௌசல்யாவின் பிடியிலிருந்த பானுவை இப்பொழுது ராஜாராமன் இழுத்து அணைத்துக் கொண்டு "எனக்குக் கல்யாணம் வேண்டாம்,

'பிராங்கைடிஸினால் என் சுவாசப்பைகள் நெருப்பைப்போல் தகித்தன'

ஆனால் **பெப்ஸ்**

அடைப்பைப்போக்கி, எரிச்சலையும் உடனே தணித்தது.





பெப்ஸ் தொண்டை மற்றும் மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமன மூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி, உங்கள் சுவாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைகளுக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும், உலக பிரசித்தி பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்புளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

PEPS

FPY-28-TAM

மதராஸிற்கு லோகல் ஏஜென்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்



சென்னை தியாகராயநகர் ''சத் சங்கத்' தின் சார்பில் ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் பதின்மூன்று தினங்கள் நவராத்திரித் திருவிழாவைச் சிறப்பாக நடத்தினார். 'கல்கி' ஆசிரியர் அவர்கள் தலைமையில் நீதிமந்திரி கனம் சுப்பிரமணியம் முதல் நாள் விழாவைத் துவக்கி வைத்தார். விழா நிறைவு நாளான விஜயதசமியன்று ஸ்ரீ ராஜாஜி அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார். அப்பொழுது பித்துக்குளி முருகதாஸ் காந்திமண்டப நிதிக்கு 108 ரூபாயை ஸ்ரீ ராஜாஜி அவர்களிடம் வழங்கினார். அன்று காலையில் சுமார் இரண்டாயிரம் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

விழா நடந்த பதின்மூன்று தினங்களும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீமான்கள் அலெக்ஸாண்டர் மார்க்கே, கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார், குன்றக்குடி அடிகளார், மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை, அ. சீனிவாச ராகவன், ம. பொ. சிவஞான கிராமணியார், கி. வா. ஜகந்நாதன், டாக்டர் திருமலை ராவ், டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், வி. பாஷ்யமய்யங்கார் முதலியோரின் சொற்பொழிவுகளும், ஸ்ரீ எஸ். பாலசந்தரின் வீணைக் கச்சேரியும், சுக்காயி ஸ்ரீ டி. என். ஆர். நடராஜசுந்தரம், திருவெண்காடு ஸ்ரீ சுப்பிமணியம் நாதஸ்வரக் கச்சேரியும், சிக்கல் பேபி நீலா சகோதரிகளின் புல்லாங்குழல் கச்சேரியும், ஸ்ரீமதி அலமேலு பட்டாபிராமன், ஸ்ரீ எஸ். கலியாணராமன், ஸ்ரீ !வி. வி. சடகோபன், ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர், கும்பகோணம் சகோதரர்கள் முதலியோரின் சங்கீதக் கச்சேரிகளும் நடந்தன.

விழா சிறப்பாக நடைபெறுவதற்கு உழைத்த ஸ்ரீமான்கள் ஆக்கூர் அனந்தாச்சாரியார், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான், ஆடிட்டர் நாராயணய்யர், ஆடிட்டர் பி. கலியாணசுந்தரம் அய்யர், செங்கோட்டை ஸ்ரீ கங்காதரன், ஸ்ரீ வேங்கடராமன் முதலியவர்களைப் பாராட்டுகிறோம்.

பானு. எனக்கு எல்லாம் நீதான்! உனக்காகவே நான் வாழ்வேன்!'' என்றான்.

''நானும்!'' என்று கௌசல்யா சன ஸ்வரத்துடன் சொன்னாள்.

பானு இரு கைகளையும் நீட்டி இருவரையும் பிடித்துக் கொண்டு சிரித்தான். ஒளியில்லாத அவன் கண்களின் இமைகள் மூடி மூடித் திறந்தன.

அப்பொழுது உள்ளே நுழைந்த கௌசல்யாவின் தகப்பனார் பானுவின் இரண்டு கைப் பிடியிலும் இருந்த அவர்களைப் பார்த்து ஒரு க்ஷணம் ஸ்தம்பித்து விட்டார். பிறகு ''கௌசல்யா! நீ ராஜாராமனைக் கல்யாணம் செய்து கொள்வது தான் எனக்குத் திருப்தி. உன்னைப் பார்த்து விட்டுப் போன அந்தப் பம்பாய் அயோக்கியன் என்ன எழுதியிருக்கிறான் பார்!'' என்று சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

அந்தக் கடிதத்தில், கௌசல்யாவுக்கு ஒரு அத்தான் இருப்பதாகவும் அவனுக்கும் கௌசல்யாவுக்கும் சிநேகம் என்றும், சிவசங்கரன் பெண்ணைச் சரியாக வளர்க்கத் தெரியாதவர் என்றும், ஆகவே அவர் சம்பந்தம் தனக்குத் தேவையில்லை என்றும் எழுதியிருந்தது.

அந்தக் கடிதத்தின் வாசகம் கௌசல்யாவுக்கும், ராஜாராமனுக்கும் இன்பமாக இருந்தது.

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!
✓ ஒளிவீசும் பற்கள்!
✓ சொத்தை குறையும்!



வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள் :

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

பெரிய சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துக

கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

TPG/14

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!



32. பரதனுக்குச் செய்தி

கௌசல்யா தேவி இறந்து போன அரசனைக் கட்டிக் கொண்டு, "இன்றே நானும் அரசனோடு கட்டை ஏறுவேன். புத்திரனில்லாமலும் புருஷனில்லாமலும் அனாதையாக என்னால் ஜீவித்திருக்க முடியாது" என்று அழுது கொண்டேயிருந்தாள். அரண்மனையில் கூடிய பெரியோர்களும் உத்தியோகஸ்தர்களும் கஷ்டப்பட்டு அவளை மெதுவாக விலக்கி அழைத்துச் சென்றார்கள்.

பிறகு உத்தர கிரியைகளைப் பற்றி யோசித்தார்கள். அரசனுடைய புதல்வர்கள் யாருமே பக்கத்திலில்லை; ராம லக்ஷ்மணர்கள் வனம் சென்று விட்டார்கள்; பரதனும் சத்ருக்னனும் மாமன் வீட்டில் வெகு தூரத்திலிருந்தார்கள். என்ன செய்வதென்று யோசித்து முடிவில் பரதனுக்குச் சொல்லியனுப்புவது என்று தீர்மானித்தார்கள். அவன் வந்து சேரும் வரையில் தேகம் கெடாமலிருக்க ஏற்பாடுகள் செய்தார்கள்.

உலகமெல்லாம் புகழ் பரவிப் பல்லாண்டு அரசு புரிந்த மகாராஜாவினுடைய உடலானது எண்ணெய்க் கொப்பரையில் கிடந்தது! அயோத்தியா நகரம் தன் பிரபாவத்தை இழந்து இருளில் ஆழ்ந்தது. எங்கும் அழுகுரலும் கண்ணீருமாக இருந்தது. ஜனங்கள் ஆண்களும் பெண்களும் கூடிக் கூடிக் கைகேயியை நிந்தித்துப் பேசினார்கள். ஊர் முழுதும் பெருங் கவலையில் மூழ்கிற்று. இளவரசனாக வேண்டியவன் காடு சென்றான். பரதன் நகரத்தில் இல்லை. ராஜ்யத்துக்குப் பெரும் ஆபத்து வரும் என்று திகிலடைந்தார்கள். அரசனில்லாமல் ஒரு மக்கட் கூட்டம் இருக்க முடியும் என்பதை அந்த நாளில் யாரும் கண்டதில்லை.

அன்றிரவு எப்படியோ கழிந்தது. மறுநாள் காலை மந்திரிகளும் காரியஸ்தர்களும் பெரியோர்களும் சபா மண்டபத்தில் கூடினார்கள். மார்க்கண்டேயர், மௌத்கல்யர், வாமதேவர், காசியபர், காத்தியாயனர், கௌதமர், ஜாபாலி இன்னும் பல வேதியர்களும் சுமந்திரன் முதலிய மந்திரிகளும் வசிஷ்டரை வணங்கி, "சுவாமி, ஒரு ராத்திரி ஒரு நூற்றாண்டாக இருந்தது. மகாராஜா சுவர்க்கம் சென்றார். ராமனும் லக்ஷ்மணனும் வனம் சென்று விட்டார்கள். பரதனும் சத்ருக்னனும் கேகய நாட்டில் பாட்டன் வீட்டில் வெகு தூரத்தில் இருக்கிறார்கள். தேசம் அராஜக நிலையிலிருக்கிறது. உடனே யாரையாவது ராஜ்யப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். அரசன் இல்லாத தேசம் பாழாகப் போகும் அல்லவா?

ராஜாஜி

அரசன் இல்லாத நாட்டில் நியமம் இருக்காது. தகப்பன் சொற்படி மகன் கேட்க மாட்டான். மனைவி புருஷனுக்குக் கட்டுப்பட

மாட்டாள். மழை கூடப் பெய்யாது. நாடெல்லாம் திருட்டும் கொள்ளையுமாக இருக்கும். ஜனங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பும் இருக்காது. பயிர்த் தொழில், வியாபாரம் எதுவுமே சரிவர நடக்காது. அரசனுடைய காப்பின்றி எப்படிப் போக்குவரவு, வியாபாரம், அல்லது பயிர்த் தொழில் நடக்கும்? செல்வம் குன்றிப் போகும், தான தருமங்கள் நின்று போகும், தேவாலயங்களில் திருவிழாக்களும் பூஜைகளும் சரியாக நடைபெறாமல் நாட்டில் மக்களுடைய வாழ்க்கை எல்லாம் கெட்டுப் போகும். இதிகாசங்களையும் புண்ணிய கதைகளையும் சொல்லுவோரும் இருக்க மாட்டார்கள், கேட்பாரும் இருக்க மாட்டார்கள். கதவைத் திறந்து வைத்துத் தூங்க முடியாது. நாகரிகம் என்பது தேய்ந்து தேய்ந்து ஒழிந்தே போகும். தவம், விரதம், ஆனந்தம் ஏதுமே இருக்காது. சாஸ்திரம் படிப்போர் இருக்க மாட்டார்கள். அரசன் ஒருவன் இருந்து நாட்டின் அமைதியைக் காத்தால் அல்லவோ இவை யாவும் நடைபெறும்? அரசனில்லாவிடில் பெண்களுடைய இயற்கை அழகும் அலங்காரமுங்கூட ஒழிந்துபோகும். தன் பொருள், தனது என்கிற உறுதி யில்லாமல் போகும். மீன்களைப் போல் ஒருவரை யொருவர் தின்று சாவார்கள். கொடுமையும் துன்பமும் வளர்ந்து கொண்டு போய் நாடு பாழாகப் போகும். நாட்டில் நிலைத்து நிற்க வேண்டிய எல்லாவித நன்மைகளுக்கும் ஒரு அரசன் வேண்டும்.

இவ்வாறெல்லாம் அந்தச் சபையில் கூடிய பெரியோர் அராஜகத்தின் அபாயங்களைப் பற்றிப் பேசியதாக வால்மீகி அழகாக வர்ணித்திருக்கிறார். "நாடெல்லாம் இருள் சூழ்ந்துவிட்டாற் போலாகி விட்டது. தருமம் அழிந்தே போகும் போலிருக்கிறது. உடனே அரசனை அமைத்துக் கொள்ள வேண்டும்" என்றார்கள்.

சாமர்த்தியமான தூதர்களை அழைத்து வசிஷ்டர், "உடனே புறப்படுங்கள். நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். எங்கும் நிற்காமல் அதிவேகமாகப் போய்க் கேகய தேசம் சேர வேண்டும். உங்கள் முகங்களிலாவது நடவடிக்கைகளிலாவது துக்கக் குறிகள் ஏதும் இருக்கக் கூடாது. பரதன் தாங்க மாட்டான். அரசன் இறந்துபோன விஷயத்தை வெளியிடாமலிருக்க வேண்டும். 'குலத்தின் குருவும் மந்திரிகளும் உங்களை உடனே அயோத்தியைக்கு வரும்படியாகச் சொல்ல எங்களை அனுப்பி யிருக்கிறார்கள்' என்று மட்டும் பரதனுக்குச் சொல்லுங்கள். உடனே புறப்பட்டு வரச் சொல்லி அழைத்து வரவேண்டும். ராமனும் சீதையும் வனம் போன விஷயமாவது, அரசன் துக்கப்பட்டு மரணமடைந்ததைப் பற்றியாவது ஒன்றும் சொல்ல வேண்டாம். துக்கக் குறிப்பு இல்லாமலிருப்பதற்காக ஆபரணங்களும் ஆடைகளும் எடுத்துக் கொண்டு போய்க் கேகய ராஜனுக்கு வழக்கம் போல் தந்து மரியாதை செய்யுங்கள்" என்றார்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

என்று குறளாசிரியர் சொல்லி யிருப்பதின் பொருள் இதனின்று அறியலாம்.

தூதர்களும் உடனே தாமதமின்றிப் பிரயாணத்துக்கு வேண்டிய உணவு, உடை யெல்லாம் கட்டிக் கொண்டு மரியாதைப் பரிசுகளும் எடுத்துக் கொண்டு வேகமாகச் செல்லும் குதிரைகளில் ஏறிக் குறுக்கு வழியாகக் காடும் மலையும் ஆறுகளும் கடந்து சென்றார்கள்.

கேகய தேசம், அயோத்தியையிலிருந்து வெகு தூரத்தி லிருந்தது. அது தற்காலத்து பஞ்சாப் தேசமும் அதற்கும் மேற்கிலிருக்கும் பிரதேசமுமாக வைத்துக் கொள்ளலாம். மலைகளும் ஆறுகளும் தாண்டிக் குதிரைகள் மிகவும் களைத்



றுப் போய்த் தூதர்கள் கேகயராஜாவின் பிரதான நகரமான ராஜக்கிரகம் போய்ச் சேர்ந்தார்கள். மறு நாள் காலை பரதனைப் பார்க்க ஏற்பாடு செய்தார்கள்.

தூதர்கள் போய்ச் சேர்ந்த அன்று, இரவில் பரதன் பயங்கரமான கனவுகளைக் கண்டு, அதனால் காலை எழுந்த போது கவலை கொண்டு, முகம் வாடி எழுந்தான். அவனுடைய சிநேகிதர்கள் இதைக் கண்டு நர்த்தனமும் ஹாஸ்யமும் செய்து இன்னும் பலவிதத்தில் அவன் கவலையைப் போக்கி வாடிய முகத்தை மலரச் செய்ய முயன்றார்கள். ஆயினும் அவன் கவலைப்பட்ட நிலையிலேயே இருந்தான்.

அன்பின் ரகசிய வேகங்களை நாம் இன்னும் முற்றிலும் காணவில்லை. தசரதனுடைய மனோவேதனையும் மரண சங்கடமும் வெகு தூரத்திலிருந்த பரதனுடைய உள்ளத்தை யடைந்து தாக்கிக் கனவை உண்டாக்கியதாகக் கருதலாம்.

"என் பிரிய சகோதரனான ராமனோ, அல்லது லக்ஷ்மணனோ அல்லது நானோ மரணம் அடையப்போவதாகத் தோன்றுகிறது. அதிகாலையில் கண்ட கனவு வீண் போகாது என்று சொல்லுவார்கள். பயங்கரமான ஸ்வப்பனத்தைக் கண்டேன். என் மனம் விவரிக்க முடியாத கலவர நிலையிலிருக்கிறது. ரொம்பவும் திகிலாக இருக்கிறது. என்னசெய்வேன்?" என்று சொல்லிக் கொண்டே யிருந்தான். அச்சமயம் தூதர்கள் தாங்கள் வந்திருப்பதைத் தெரிவித்து, சந்நிதானத்துக்கு வர அனுமதி கேட்டார்கள்.

கேகய ராஜனும் அவனுடைய குமாரன் யுதாஜித்தும் தூதர்களை வெகு மரியாதையுடன் வரவேற்றார்கள். அவர்களும் செலுத்த வேண்டிய வணக்கங்களை முறைப்படி செலுத்திய பிறகு பரதனை நோக்கிச் சொன்னார்கள்:

"புரோகிதர்களும் மந்திரிகளும் தங்களுக்கு மங்கள வாழ்த்துக்கள் சொல்லி, உடனே அயோத்தியா நகரத்துக்கு அழைத்து வர எங்களை அனுப்பி யிருக்கிறார்கள். மிக அவசரமான காரியம் என்று சொல்லியனுப்பி யிருக்கிறார்கள். இந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் தாங்கள் தொட்டு அரசனுக்கும் மாமனுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்" என்று அவர்கள் கொண்டு வந்த ஆடையாபரணப் பொருள்களைப் பரதன் முன் வைத்தார்கள்.

அவனும் அவற்றைப் பெற்றுக் கொண்டு, "தந்தை தசரதன் க்ஷேமமா? ராமனும் லக்ஷ்மணனும் சுகமா? அனைவரும் நோயொன்று மில்லாமல் சுகமாக இருக்கிறார்களா?" என்று விசாரித்தான்,

"அனைவரும் நோயின்றி இருக்கிறார்கள் ராஜகுமாரனே! உன் மங்களத்தை எல்லாரும் கோருகிறார்கள். அதற்காகவே சீக்கிரம் வரச் சொன்னார்கள்" என்றார்கள்.

உண்மையை மறைத்துப் பேசினார்கள். ஆயினும் அவர்களுடைய பேச்சு பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடக்க வேண்டும் என்பதைத் தொனிக்கச் செய்தது.

தூதர்களுடைய விருப்பப் படியே அயோத்தியை போக ராஜ குமாரன் தன்னுடைய பாட்டனார், மாமன் முதலியவர்களுடைய அனுமதியைக் கேட்டுப் பெற்றான். பரதன் அயோத்தியைக்கு உடனே போவதற்கான ஏற்பாடுகளைக் கேகய ராஜனும் யுதாஜித்தும் செய்தார்கள். அயோத்தியையில் தசரத மகாராஜாவுக்கும் ராமனுக்கும் மற்றவர்களுக்கும் தருவதற் கென்று கேகய ராஜ்யத்தில் கிடைக்கக் கூடிய மிக விலை உயர்ந்த சன்மானப் பொருள்களைத் திரட்டித் தேர்களில் வைத்து, பரதனையும் சத்ருக்னனையும் பெரும் பரிவாரத்துடன் அனுப்பி வைத்தார்கள். தேர்கள் வேகமாக அயோத்தியை நோக்கிச் சென்றன.

33. களங்கமற்ற உள்ளம்

பரதனும் பரிவாரமும் வெகு துரிதமாகவே புறப்பட்டு, வேகமாகப் பிரயாணம் செய்தார்கள். குதிரைகளுக்கு ஆங்காங்கு குளிப்பாட்டித் தீனி போட்டு இரவில் சில இடங்களில் தங்கி அயோத்தியா நகரம் எட்டாவது தினம் அதிகாலையில் வந்து சேர்ந்தார்கள்.

"இதென்ன சாரதியே, நகரம், நான் ஊரை விட்டபோது இருந்த மாதிரி இல்லை. எப்போதும் கலகல வென்று சந்தோஷமாக இருக்குமே? இன்று அப்படி இல்லை. காலையில் நகரத்திலிருந்து ஜனங்கள் வெளியே வருவதும் உள்ளே புகுவது மாக எப்போதுமுள்ள காட்சி இன்று காண வில்லையே?"

இவ்வாறு பரதன் சந்தேகப் பட்டுச் சாரதியுடன் பேசிக் கொண்டே போனான்.

"ஊருக்கு வெளியே தோட்டங்களில் சந்தோஷ முகங்களுடன் இருக்க வேண்

டிய மகளிரும் புவர்களும் இன்று ஏன் துக்கக் குறிப்புகளோடு காணப் படுகிறார்கள்? எல்லாம் ஏதோ துயர நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது" என்றான்.

"மங்கள வாத்தியங்கள் ஏதும் முழங்கவில்லை; புஷ்பம் அணிந்து, சந்தனம் பூசி உல்லாசமாக இருக்கும் நகரவாசிகள் யாரையும் காண வில்லை. ஊரில் வழக்கமாகக் கேட்கும் பேரிகை மிருதங்க ஒலி காதில் விழ வில்லை. இது என்ன ஆச்சரியம்! பல கெட்ட சகுனங்கள் காணப்படுகின்றனவே! என் கவலையை அடக்க முடிய வில்லை" என்றான்.

வைஜயந்தம் என்ற கோட்டை வாயில் வழியாகப் பரதனுடைய ரதம் நகரத்துக்குள் பிரவேசித்தது. கடைத் தெருவுகளும் மாளிகைகளும் கோயில்களும் எவ்வித அலங்காரமுமில்லாமல் சரியாக மெழுகிக் கோலமிடாமலும் இருந்ததைப் பார்த்தான். ஜனங்கள் பட்டினி கிடந்த முகங்களோடு காணப் பட்டார்கள். கெட்ட நிமித்தங்களே மேலும் மேலும் காணப் பட்டன. எல்லாவற்றையும் பார்த்து பரதன், ஏதோ பெரும் விபத்து நடந்து விட்டிருக்கிறது என்று நிச்சயித்துக் கொண்டான். அதற்காகத்தான் இவ்வளவு அவசரமாக உடனே வர வேண்டும் என்று சொல்லி யனுப்பினார்கள் என்றும் கண்டான்.

தசரதனுடைய மாளிகைக்குள் பிரவேசித்தான். அங்கே தந்தையைக்காண வில்லை. கவலை இன்னும் அதிகரித்தது. உடனே தாய் கைகேயியைப் பார்க்கலாம் என்று அவளுடைய மாளிகைக்குள் புகுந்தான். ஊரிலிருந்து திரும்பி வந்த தன் மகனைப் பார்த்ததும் கைகேயி அவனைக் கட்டி யணைத்துக் கொள்ளத் தன் தங்க ஆசனத்தை விட்டுக் குதித்து இறங்கினாள்.

அவனும் அவள் கால்களைத் தொட்டு வணங்கினான். மகனை அணைத்து உச்சி மோந்து, "வந்தாயே, அப்பனே! மகாராஜனாக இருப்பாய்! பிரயாணம் சுகமாக இருந்ததா? மாமன் முதலானோர் க்ஷேமமா? அங்குள்ளவர்கள் எல்லோரையும் பற்றிச் சொல்!" என்று மடியின் மீது உட்கார வைத்துக் கொண்டு மிக்க பரிவுடன் கேட்டாள்.

"நான் வந்து சேர ஏழு நாள் ஆயிற்று. அங்கே எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். பாட்டனார், மாமன் யுதாஜித் எல்லோரும் உன் சுகத்தை விசாரித்ததாகச் சொல்லச் சொன்னார்கள். நிறையச் சன்மானங்கள் கொடுத்தனுப்பி யிருக்கிறார்கள். எல்லாம் பின்னால் வரும். நான் அவசரமாக முன் ரதத்தில் வேகமாக வந்தேன். மிக முக்கியமான காரியம், உடனே வரவேண்டுமென்று இங்கிருந்து வந்த தூதர்கள் என்னை மட்டும் வேகமாக முன்னால் அழைத்து வந்தார்கள். இதற்கென்ன காரணம், அம்மா? மகாராஜாவைப் பார்த்து வணங்க அவருடைய மனைக்குச் சென்றேன். அவர் அங்கே இல்லை. இங்கேயும் அவருடைய ஆசனம் காலியாக இருக்கிறது. இங்கேதானே வழக்கமாகப் படுத்திருப்பார். ஒரு வேளை பெரிய தாயார் மனைக்குப் போயிருக்கிறாரோ? நான் உடனே அவரைத் தரிசித்து வணக்கம் செலுத்த வேண்டும்" என்றான்.

நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றும் அறியாத தன் மகனுடைய இந்தக்கேள்விக்கு ராஜ்யாதிகார ஆசையால் மதியிழந்து போன கைகேயி பதில் சொல்லுகிறாள்:

"குழந்தாய்! உன் தகப்பனார் உலகத்தில் பிறந்தவர்கள் அடைய வேண்டிய சுக போகங்களை யெல்லாம் அடைந்தார். அரசர் மகா பாக்கியவான். பெரும் புகழ் பெற்றவர். செய்ய வேண்டிய பெரிய வேள்விகளை யெல்லாம் செய்துதீர்த்தார். நல் வழியில் நின்றவர்களுக்குப் புகலிடமா யிருந்தார். அவர் அடைய வேண்டிய பரம பதத்தை அடைந்து விட்டார்!" என்றாள்.

இதைக் கேட்டதும் பரதன், "ஐயோ நான் செத்தேன்" என்று கதறி, அழகிய நீண்ட கைகளை விரித்துக் கொண்டு கீழே விழுந்தான்.

பின்னர் எழுந்து, அரசனுடைய படுக்கையைப் பார்த்து, "இந்தப் படுக்கை சூனியமாகப் போயிற்றே!" என்று அங்கவஸ்திரத்தால் முகத்தை மூடிக் கொண்டு கண்ணீர் தாரை தாரையாகப் பெருக, அரசகுமாரன் ஒரு ஏழை அநாதையைப் போல் அழுதான். இளம் யானையைப் போன்ற தேகமும், சந்திரனைப் போன்ற முகமும் கொண்ட வீரன் பூமியில் விழுந்து புரண்டு அழுதான். காட்டில் கோடாலியால் வெட்டித் தள்ளப்பட்ட பெரிய ஆச்சா மரம் போல் தரையில் கிடந்த மகனைப் பார்த்து கைகேயி, "எழுந்து நில், அரசனே! எழுந்து நில்! தரையில் ஏன்

இடக்கிறாய்? இது அரசனுக்குத் தகாது. பெரியோர்களுடைய பெரு மதிப்பும் நல்ல கீர்த்தியும் பெற்றிருக்கிறாய். சனாதன வேத வழியில் நின்று தருமமும் வேள்வியும் செய்யும் பதவியை அடைந்திருக்கிறாய். உன் மதி ஜோதிமய சூரியனைப் போல் பிரகாசிக்கிறது. உனக்கு ஒரு குறையுமில்லை. மனக் கலக்கத்தை யொழித்து, தைரியம் பூண்டு எழுந்து நில்!'' என்றாள்.

களங்க மென்பது துளிக்கூட இல்லாத உள்ளத்தைப் பெற்ற மகான் பரதன். வெகு நேரம் அழுது புரண்டு அலறிய பின் எழுந்து தாயைப் பார்த்து, ''அரசன் ராமனுக்கு யுவராஜ்ய அபிஷேகம் வெகு விமரிசையாகச் செய்வான்; திரும்பி வந்து அதை யெல்லாம் பார்க்கலாம் என்கிற ஆசையோடல்லவா நான் மாமன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனேன். இப்போது இப்படியாகி விட்டதே. ஐயோ! என்னால் பொறுக்க முடிய வில்லையே! தந்தையின் பிரிய முகத்தைக் காண வில்லையே! என்ன வியாதி, எப்படி வந்து விட்டது? நான் பக்கத்தில் இல்லாமல் போய்விட்டேனே, என் அம்மா! ராமனும் மற்றவர்களும் அல்லவோ புண்ணியம் செய்தவர்கள். தந்தையை உபசரித்து நோயின் உபத்திரவத்தைத் தணித்து வந்தார்கள், அவர்கள் பாக்கியசாலிகள். எனக்கு அந்த பாக்கியம் இல்லாமற் போய் விட்டதே! என் உடம்பில் பட்ட மண்ணைத் தன் கையால் பிரியமாகத் துடைப்பாரே. அவர் கைகள் என் உடலில் படும்போது அந்த ஸ்பரிசம் சொல்ல முடியாத ஆனந்தத்தைத் தந்ததே! நான் அவருக்குக் கொஞ்சமும் உதவாமல் போய் விட்டேனே! அம்மா! அண்ணன் ராமன் எங்கே? அவனே இனி எனக்குப் பிதாவும் குருவும். உடனே அவனைக் கண்டு அவன் பாதத்தில் விழ வேண்டும். இனி அவனே அல்லவோ எனக்குக் கதி? அம்மா, கடைசியாகத் தந்தை எனக்காக என்ன சொல்லி விட்டுப் போனார்? அவருடைய கடைசிச் சொற்கள் என்ன வென்று அவர் சொன்ன மொழிகளாகவே நான் கேட்க விரும்புகிறேன்'' என்று இவ்வாறு அழுது கொண்டு பரதன் கேட்டான்.

உண்மைக்கு மாறாக ஏதுமில்லாமல் தன் எண்ணத்தை நிறைவேற்றும் கருத்தாகவே கைகேயி பதில் சொன்னாள். பண்பாட்டின் தடை ஒருபுறம், ஆசை வேகம் ஒரு புறம் இவற்றின் இடையில் பேசினாள். பரதனுக்காக அரசன் அந்திக் காலத்தில் ஏதும் சொல்ல வில்லை என்கிற பொருள் படவும் இன்னும் சொல்லித் தீரவேண்டிய கொடிய நிகழ்ச்சிகளைச் சொல்வதற்கு வசதி ஏற்படவும் பேசினாள்:

''உன் பிதா, 'ஹா, ராம! ஹா, லக்ஷ்மண! ஹா, ஜானகி!' என்று கதறிக் கொண்டு பிராணனை விட்டார். உன் பிதாவானவர் அந்திய காலத்தில் சொன்னது இவ்வளவே. 'ராமனும் லக்ஷ்மணனும் சீதையும் திரும்பி வருவதை நான் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை. பார்ப்பவர்கள் பாக்கியம் பெற்றவர்கள்' என்று சொல்லி அரசர் இறந்தார்'' என்றாள்.

இதைக் கேட்டதும், ''ஐயோ, பக்கத்தில் ராம லக்ஷ்மணர்களும் இருக்க வில்லையா?'' என்று பரதனுடைய துக்கம் இரு மடங்காயிற்று.

''அவர்கள் எங்கே, என்ன காரியமாகப் பக்கத்தில் இல்லாமல் போய் விட்டார்கள்?'' என்று பரதன் கைகேயியைக் கேட்டான்.

அதன் மேல் எல்லா வற்றையும் சொல்லி அவனைச் சமாதானப் படுத்தலாம் என்று எண்ணி, ''அப்பா, உன் அண்ணன் ராமன் லக்ஷ்மணனையும் சீதையையும் அழைத்துக் கொண்டு தண்டகாரணிய வனத்துக்குத் தவ வேஷம் பூண்டு சென்று விட்டான்'' என்றாள்.

அதைக்கேட்ட பரதன் வியப்படைந்து, ''இது என்ன எனக்கு ஒன்றும் விளங்க வில்லை? ராமன் என்ன குற்றம் செய்து இந்தத் தவம் செய்யச் சென்றான்? எந்தப் பிராமணன் சொத்தை அபகரித்தான்? அவன் எந்த நிரபராதியை இம்சித்தான்? அவன் எந்த அந்நிய ஸ்திரீயை விரும்பிப் பிழை செய்தான்? எதற்காக ராமன் தண்டகாரண்ய வனம் போக வேண்டியதாயிற்று? யார் இந்தப்பிராயச் சித்தம் விதித்தது?'' என்று கேட்டான்.

அந்தக் காலத்தில் வனம் போகும் தண்டனை இவ்வித பெருங் குற்றங்களுக்குத் தான் விதிப்பது முறையாக இருந்தது. இதன் மேல் கைகேயி விஷயங்கள் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லத் தைரியங் கொண்டு ஆரம்பித்தாள்:

''ராமன் எந்தத் தவறான காரியமும் செய்ய வில்லை. யாருடைய பொருளும் அபகரிக்க வில்லை; யாரையும் இம்சிக்க வில்லை. எந்த அந்நிய ஸ்திரீ முகத்தைக்

கண்ணெடுத்துப் பார்த்ததுமில்லை. ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடத்துவதாக ஏற்பாடுகள் செய்வதை யறிந்து நான் உனக்காக உன் தந்தையை வரம் கேட்டுப் பெற்றேன். உனக்கு ராஜ்யாதிகாரம் தந்து விட்டு ராமன் ஊரை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உனக்காக நான் கேட்டேன். சத்தியத்துக்கு உட்பட்டு முன் கொடுத்த தன் வாக்கை நிறைவேற்றித் தன் தருமத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மகாராஜா நான் சொன்னதுக்கு ஒப்புக்கொண்டார். சீதையையும் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு ராமன் வனம் சென்று விட்டான். அந்தப் பிரிவைப் பொறுக்க முடியாமல் தந்தை உயிர் நீத்தார். நீ இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிப்பாய். தருமம் தெரிந்தவனாக இருக்கிறாய். ராஜ்ய பாரத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். உனக்காகவே இதை யெல்லாம் செய்தேன். துக்கப் படாதே. மனத்தை நிலையில் நிறுத்திக் கொள். இந்த நகரமும் ராஜ்யமும் உன் ஆதீனத்துக்குச் சுகமாக வந்திருக்கின்றன. கிரமப்படி வசிஷ்டர் முதலிய பிராமண உத்தமர்களைக் கொண்டு தந்தையாரின் உத்தரக் கிரியைகளைத் தாமதமின்றிச் செய்து முடித்து ராஜ்யாபிஷேகம் செய்து கொள்ளுவாய். நீ க்ஷத்திரிய வீரன், தந்தை கையிலிருந்து ராஜ்யம் பெற்ற அரச குமாரன், உன் கடமையைச் செய் '' என்றாள்.

தொண்டுக்கு வெள்ளி விழா

பன்மொழிப் புலவர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களைத் தமிழ் நாட்டுக்குப் புதிதாக அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை.

இன்று சென்னை இராஜதானிக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கும் இப் பெரியார் பல மொழிகளில் வல்லவர் ; சிறந்த எழுத்தாளர் ; வன்மை மிக்க பேச்சாளர். எளிமையும் இனிமையும் ஒருங்கே திரண்ட வடிவினர். ஒழுக்கம் நிறைந்த தேசத் தொண்டர் ; பழுத்த சமய சீலர். யாவருடனும் தம் தகுதியை மறந்து எளிதாகப் பழகும் ஒப்புயர்வற்ற பண்பாட்டை உடையவர்.




வாய்ப்பேச்சு மிகுதியும் இல்லாமல் தொண்டு செய்யும் இயல்பு சிலருக்கே வாய்க்கும். எழுத்தறிவித்தலின் இன்றியமையாமையை நம் காலத்துக் கவிஞர் மிகவும் ஆணித்தரமாகப் பாடிச் சென்றார். அக் கவிஞர்பிரான் கட்டளையை நடைமுறையில் செய்து காட்டும் பெருமை தெ. பொ. மீ. போன்ற சிலருக்கே வாய்த்தது. அப் பெரியாரின் தளரா முயற்சியால் சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் தொடக்க நிலைப் பள்ளிகள் நான்கும் ஆக ஆறு பள்ளிகள் நடைபெறுகின்றன. இந்தப் பள்ளிகளில் இன்று 35000 மாணவ — மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். சென்னைப் பகுதியில் மிகுதியும் கூட்டம் நிறைந்துள்ள இடமாதலின் அந்தப் பகுதிக்கு இத் தொண்டு மிக மிக இன்றியமையாததாக அமைந்து விட்டது. திரு தெ. பொ. மீ. ஒருவரே சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக 'இத்தனை பள்ளிகளையும் இயக்கும் குழுவின் அமைச்சராக இருந்து தொண்டாற்றி யுள்ளார். அவருடைய முயற்சியால் தான் இன்று இப் பள்ளிகள் இவ்வளவு உயரிய நிலையை அடைந்துள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

தன்னலம் கருதாது அப் பெரியார் சென்ற கால் நூற்றாண்டாக நடத்திய தொண்டினைப் பாராட்ட வேண்டியது அவசியம் அல்லவா ! சமீபத்தில் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனாருக்குப் பாராட்டு விழா நடைபெறஇருக்கிறது. தொண்டர்கள் பாராட்டை ஏற்பதில்லை என்பது தெரிந்திருந்தும் அத் தொண்டினைப் பாராட்டுவதின் மூலம் நாம் நமக்கே ஊக்கம் ஊட்டிக் கொள்ளுகிறோம்.

இத்தகைய பெரியாருக்குப் பாராட்டு எடுத்தலின் மூலம் நன்கு கல்வி பயிலும் மாணாக்கர் சிலருக்கு இலவசப் பள்ளிச் சம்பளம் தர ஒரு நிதி திரட்டுகிறோம். அந்தப் புனித நிதிக்கு நிதி மிகுந்தவர் பொற்குவையும், நிதி குறைந்தவர் காசுகளும் தருமாறு வேண்டுகிறோம்.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் வெள்ளி விழாக் குழுவினர்.


கூந்தல் பாதுகாப்புடன் தளிர்ச்சி, குதூகலம், நறுமணம் பெற
TSR
• சந்தனாதித் தைலம்
• அரைக் கீரை விதைத் தைலம்
• பிருங்காமலக தைலம்
• கோதல் ஹேர் ஆயில்
டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம், தென்னிந்தியா
EP
சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: கராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு
கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்


ரம்மியமான
நறுமணமுள்ளது
சிறியோருக்கும்
முதியோருக்கும்
ஒருங்கே ஒப்பற்றது
'ZEPHROL'
TRADE MARK
BRAND,
COUGH SYRUP
சக்தி, விரைவாக வேலை செய்யும் திறன், சாப்பிடுவதற்கு ருசி ஆகிய எல்லாம் சேர்ந்து "ஜெப்ராலு"க்கு நாடு முழுவதிலும் நல்ல பிரசித்தியை அளிக்கிறது.
M&B
manufactured by
MAY & BAKER LTD
distributed by: MAY & BAKER (INDIA) LTD
BOMBAY-CALCUTTA-MADRAS
NEW DELHI-GAUHATI

தங்க மாம்பழம்

ராஜி



6. அரசனின் வியப்பு!

பரபரப்புடன் அரண்மனைக்குள் நுழைந்த வீரப்பதேவனைக் கண்ட அரசன் வியப்புடன், "என்ன, தேவரே! என்ன சமாசாரம்? ஏன் உடனே திரும்பி விட்டீர்கள்?" என்று கேட்டான்.

பாவம், வீரப்ப தேவனால் அரசனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சற்று நேரம் மௌனமா யிருந்தான்.

"வீரப்ப தேவரே, ஏன் மௌனம் சாதிக்கிறீர்? என்ன நடந்தது?" என்று அரசன் கொஞ்சம் கடுமையாகக் கேட்டான்.

"அரசே, நடந்ததைச் சொல்ல எனக்கு வெட்கமா யிருக்கிறது. உமாவும் பிரபாகரனும் இரும்புக் கூண்டிலிருந்து தப்பி விட்டார்கள்......" என்று தயங்கியபடி சொன்னான் வீரப்பதேவன்.

"என்ன! தப்பி விட்டார்களா? இரும்புக் கூண்டிலிருந்து எப்படித் தப்பினார்கள்? இதை யார் உங்களுக்குச் சொன்னது?" என்றான் அரசன்.

"அரசே, குன்றிமணித் தோட்டத்திலிருந்து வந்த சேவகர்கள்தான் இந்தச் செய்தியை எனக்குச் சொன்னார்கள். அவர்களை........." என்று இழுத்தான் வீரப்பதேவன்.

"...உடனே இங்கே அழைத்து வரச் சொல்லுங்கள்!" என்று அரசன் பரபரப்புடன் கூறினான். உடனே வீரப்பதேவன் வெளியே போய் அந்த வீரர்களை உள்ளே அழைத்து வந்தான்.

வீரர்கள் உள்ளே வந்ததும் அரசன் அவர்களைப் பார்த்து, "வீரர்களே! இரும்புக் கூண்டில் காவலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் தப்பி விட்டார்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"நாங்கள் வீரப்பதேவரின் உத்தரவுப்படி குன்றிமணித் தோட்டத்துக்குச் சென்று இரும்புக் கூண்டை நெருங்கினோம். அதில் ஒருவரும் இல்லை. நாங்கள் கூண்டின் அருகில் சென்றோம். கூண்டு சரியாகத்தான் இருந்தது. எங்களால் இதை நம்பவே முடியவில்லை. கூண்டில் பூட்டப்பட்டிருந்த பூட்டு திறக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தோம். கூண்டு பூட்டினபடியே யிருந்தது. பிறகு கூண்டைச் சுற்றி வந்து பார்த்தோம். கிழக்குப் பக்கத்தில் பொருத்தி யிருந்த மூன்று கம்பிகளைக் காணவில்லை. இரண்டு கம்பிகள் இரண்டாக உடைக்கப்பட்டுக் கீழே கிடந்தன. மூன்றாவது கம்பி நான்கு துண்டுகளாகத் துண்டிக்கப் பட்டுக் கீழே கிடந்தது" என்று விவரமாக எடுத்துச் சொன்னார்கள் அந்த வீரர்கள்.

"என்ன ஆச்சரியம்! அதெப்படி முடியும்? கூண்டில் மிகவும் மெல்லிய கம்பிகளாகப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருந்தாலும் எப்படி உடைக்க முடியும்?" என்றான் அரசன் வியப்புடன்.

"அரசே, அவர்கள் உடைத்த கம்பிகளையும் கொண்டு வந்திருக்கிறார்கள்!" என்றான் வீரப்பதேவன்.

அரசன் 'கொண்டு வா' என்று சொல்வதற்குள் ஒரு வீரன் உடைந்த கம்பிகளை அரசன் எதிரில் வைத்தான்.

ஒவ்வொரு கம்பியும் சுமார் இரண்டு அங்குலம் பருமன் உள்ளதா யிருந்தது. "அதெப்படி அவர்களால் கம்பிகளை உடைக்க முடிந்தது? இந்தக் கம்பிகளில் ஏதோ சூது இருக்க வேண்டும். நான் இப்போதே அதைக் கண்டு பிடிக்கிறேன். எங்கே நம் அரண்மனையின் பயில்வான் ஒருவனை அழைத்து வா!" என்று உத்தரவிட்டான் அரசன்.

அரண்மனையில் பயில்வான்களுக்கா கேட்க வேண்டும்? யானையைப் போல உருவம் படைத்த ஒருவன் அரசன் எதிரில் வந்து நின்றான். முகத்தில் நீண்ட அடர்த்தியான மீசை, வழுக்கைத் தலை. இடுப்பில் ஒரு லங்கோடு, இந்த அலங்காரங்களோடு அவன் காட்சி அளித்தான்.

"எங்கே, இந்தக் கம்பிகளில் ஏதாவது ஒரு கம்பியை இரண்டாக உடைத்து விடு, பார்க்கலாம்" என்றான் அரசன்.

"உடைக்கவா, அல்லது வளைக்கவா?" என்றான் பயில்வான்.

"முதலில் உடைத்துப் பார். இல்லாவிட்டால் வளைத்துப் பார்."

பயில்வான் தன் முழு பலத்துடன் கம்பியை வளைக்கப் பார்த்தான். ரொம்பவும் சிரமப்பட்டதினால் ஒரு கம்பியைச் சற்று வளைக்க முடிந்தது.

"ஒரு பயில்வானால் முடியாத காரியம் எப்படிச் சாதாரண வாலிபனால் செய்ய முடியும்?" என்று வெகு பரபரப்புடன் கம்பிகளைப் பரிசோதித்தான் அரசன்.

"ஆமாம், ஆமாம். கம்பிகளைக் கையால் உடைத்துத்தான் இருக்கிறான். வேறு ஆயுதங்களை உபயோகித்ததாகத் தெரியவில்லை. சாதாரண மூங்கில்கள் உடைபட்டது போல் அல்லவா கம்பிகள் உடைபட்டிருக்கின்றன!" என்றான் அரசன்.

பிறகு வீரசிம்மன் குன்றிமணித் தோட்டத்துக்குச் சென்றிருந்த இரண்டு சேவகர்களைக் கூப்பிட்டான்.

"அந்த இரும்புக் கூண்டில் அடைபட்டுக் கிடந்தவர்களைப் பார்த்திருக்கிறீர்களா நீங்கள்?"

"அரசே, பார்த்திருக்கிறோம், நாங்கள்தானே அவர்களைக் கூண்டில் வைத்துப் பூட்டி விட்டு வந்தோம்!"

"அப்படியானால் கூண்டிலிருந்து தப்பி விட்டார்கள் என்று தெரிந்தவுடன் நீங்கள் அவர்களைக் கண்டு பிடிக்க முயற்சி செய்தீர்களா?"


"ஆகா, செய்தோம், எங்கள் குதிரையின்மீது ஏறிக் கொண்டு நாலா பக்கமும் பார்த்தோம். அகப்படவில்லை."

"சரி, இது விஷயம் வெளியில் தெரிய வேண்டாம். தெரிந்தால் உங்களுக்குத்தான் ஆபத்து. சரி, நீங்கள் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டான் அரசன்.

"வீரப்பதேவரே, இனிமேல்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பிரபாகரனையும் உமாவையும் பற்றி ஊரிலுள்ள ஜனங்கள் தெரிந்து கொள்ளக் கூடாது. அவர்கள் இறந்து விட்டார்கள் என்றுதான் ஊரில் வதந்தி உலாவிக் கொண்டிருக்கிறது. ஒருவருக்கும் தெரியாதபடியும் யாவரும் சந்தேகம் கொள்ளாமலும் நாம் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். முடிந்தால் நாம் அவர்களை மறுபடியும் பாதுகாப்பிலேயே வைக்க முயலுவோம். இல்லாவிட்டால் கிழவியின் உதவியைக் கொண்டு கல்லறைத் தீவின் உண்மையை அவர்கள் கண்டு பிடிக்காதபடி தடைகள் செய்ய வேண்டும். அதற்குப் பிரபாகரனிடத்தில் உள்ள தங்க மாம்பழத்தை எப்படியாவது அபகரிக்க வேண்டும். அதற்குக் கிழவியின் உதவிதான் தேவை!"

"நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படியே செய்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றான் வீரப்பதேவன்.

"நீ கிழவியிடம் இப்பொழுதே போ. அவளிடம் மஞ்சள் நிறக் கல் பதித்த மோதிரம் ஒன்று இருக்கிறது. அதை எந்த ஆண் மகன் அணிந்து கொள்ளுகிறானோ அவன் தன்னையே மறந்து ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் ஓடிய



அலுப்பு மனிதனை வெல்கிறது



தேநீர்

அ லு ப் பை
வெல்கிறது

PSTB 126

தேயிலை போர்டு வெளியிட்டது

வண்ணமாக இருப்பான். கிழவியை எந்த ரூபத்திலாவது போய், எப்படியாவது பிரபாகரனையும், உமாவையும் சந்தித்து அந்த மோதிரத்தைப் பிரபாகரனிடம் கொடுத்து அவனை அணிந்து கொள்ளும் படி செய்யச் சொல். உடனே பிரபாகரன் தன்னையும் உமாவையும் மறந்து ஓடுவான். அப் பொழுது அவனிட முள்ள தங்க மாம்பழத்தை எப்படியாவது எடுத்துக் கொண்டு வரச் சொல். அந்தச் சந்தர்ப்பத்தையே உபயோகித்துப் பிரபாகரனையும் உமாவையும் பிரித்துவைக்கும்படி ஏற்பாடு செய்யச் சொல். பிறகு பார்த்துக் கொள்ளலாம். போ, சீக்கிரம்!'' என்றான் வீரசிம்மன்.

"அரசே, நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் எப்படியாவது அந்தத் தங்க மாம்பழத்தை உங்களிடம் கட்டாயம் சேர்க்கிறேன்'' என்று சொல்லி வீரப்ப தேவன் அங்கிருந்து புறப்பட்டான்.

* * *

சீற்கண்டும் குடிக்க நீரும் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டுச் சென்ற துறவி திரும்பவே இல்லை. பிரபாகரனும், உமாவும் கூண்டில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். பொழுது புலர்வதற்குச் சற்று நேரம்தான் இருந்தது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த உமா, "அண்ணா, எழுந்திரு, எழுந்திரு! என் உடம்பெல்லாம் எறும்புகள் ஊறுகின்றன!'' என்று அலறிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

உடனே பிரபாகரனும் எழுந்து உட்கார்ந்தான். "ஆமாம், உமா! இதோ பார், கம்பிகளெல்லாம் எறும்புகள்! இன்னும் நிறைய வந்து கொண்டே இருக்கின்றன, சாரி சாரியாகவும், கூட்டம் கூட்டமாகவும் அல்லவா வந்துகொண்டிருக்கின்றன!'' என்று பிரபாகரன் சொன்னான்.

அப்பொழுது ஜில் என்று சற்று வேகமாகக் குளிர்ந்த காற்று வீசிற்று. காற்றில் பக்கத்திலுள்ள மரக்கிளைகள் அசைவு கொடுத்தன. சந்திரனின் வெளிச்சம் பளிச் பளிச் என்று கூண்டின்மீது அடித்தது. அப்பொழுது உமா, "அண்ணா, இதைப் பார்த்தாயா, கருப்பாக இருந்த கூண்டு வெள்ளையாக அல்லவா இருக்கிறது!'' என்றாள் ஆச்சரியத்துடன்.

"நீ ரொம்பக் கெட்டிக்காரி. நீ சொல்லுவது உண்மையே. இப்பொழுதுதான் நான் பார்த்தேன். கம்பிகளெல்லாம் கூட ஒரே வெள்ளையாக இருக்கின்றன!'' என்று கூறி விட்டு, திடீரென்று எறும்புகள் மொய்ப்பதற்கு என்ன காரணம் என்று கம்பியின் அருகில் சென்று உற்றுக் கவனித்தான். "உமா, உமா, இந்தக் கம்பிகளெல்லாம் கற்கண்டைப் போல அல்லவா தோற்றமளிக்கின்றன!'' என்றான் பிரபாகரன்.

உமா, "அண்ணா, நீ சொல்லுவது சரிதான். கம்பிகளெல்லாம் கற்கண்டுகளாகவே மாறி யிருக்கின்றன!'' என்று தன் நாக்கினால் ஒரு கம்பியை ருசி பார்த்து விட்டுச் சொன்னாள் உமா.

"கம்பிகள் என்ன, இந்தக் கூண்டே கற்கண்டுக் கூண்டாக ஆகிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டே ஒரு கம்பியைத் தன் முழு பலத்துடன் ஆட்டினான் பிரபாகரன்.

உமாவும் பிரபாகரனும் ஆச்சரியப்படும்படி கம்பி நடுவில் இரு துண்டாக உடைந்தது. "உமா, அந்தத் துறவிதான் நமக்குத் தெரியாமல் இந்தக் கூண்டைக் கற்கண்டுக் கூண்டாக மாற்றி யிருக்கிறார் போலிருக்கிறது. நாம் தப்பித்துக் கொள்ளுவதற்கு இதுதான் சமயம். அவருடைய மந்திர சக்தி மூன்றே முக்கால் நாழிகை தான் இருக்கும் என்று சொன்னாரே, உனக்கு ஞாபகம் இருக்கிறதா? நாம் இந்தச் சந்தர்ப்பத்தை இப்பொழுது பயன் படுத்திக் கொண்டால்தான் உயிர் தப்பலாம்'' என்று சொல்லி விட்டுப் பிரபாகரன் மற்றொரு கம்பியைத் தன் முழு பலத்துடன் ஆட்டினான். உமாவும் பிரபாகரனுக்கு உதவி செய்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் கம்பியின் முக்கால் பாகம் உடைந்து கீழே விழுந்தது. கைகொட்டிச் சந்தோஷத்தினால் குதித்தாள் உமா.

"உமா, சீக்கிரம் வா! சேவகர்கள் வந்து விடப் போகிறார்கள்!'' என்று கூறி உமாவின் கையைப் பிடித்துக் கொண்டு கூண்டினின்று வெளியே வந்தான் பிரபாகரன்.

ஒரு மண் கூஜா அங்கு வைக்கப்பட்டிருந்தது. "இது ஏது இந்தக்கூஜா? இங்கு எப்படி வந்தது?'' என்றான் பிரபாகரன்.

"அண்ணா, இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. இந்தக் கூண்டைக் கற்கண்டுக் கூண்டாக மாற்றியது அந்தத் துறவிதான். அவரேதான் கூஜா நிறையத் தண்ணீர் கொண்டு வந்து வைத்திருக்கிறார்!'' என்றாள்.

"உமா, இந்தக் கூஜாவையும் நம்முடன் எடுத்துச் செல்லலாம். சமயத்தில் உதவியாக இருக்கும்'' என்றான் பிரபாகரன்.

"அண்ணா, சரி, இந்தக் கூஜாவை நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்'' என்று உமா கூஜாவைப் பிரபாகரனின் கையிலிருந்து வாங்கிக் கொண்டாள்.

"உமா, நாம் சாலை வழியாகப் போக வேண்டாம். போனால் குதிரைச் சேவகர்கள் எப்படியாவது நம்மைக் கண்டு பிடித்து விடுவார்கள். ஆகையினால் குறுக்குப் பாதையில் இந்த வாய்க்கால் வழியாகத் தண்ணீரில் இறங்கி எங்கேயாவது போகலாம். குதிரைச் சேவகர்களால் இந்தப் பெரிய வாய்க்காலைக் கடக்க முடியாது'' என்றான் பிரபாகரன். (தொடரும்)

உங்கள் வதனத்தை மென்மையாக, புதுமை எழிலோங்க வைத்திருப்பது மிகச் சுலபமே!

உங்கள் சருமத்திற்கு பாண்ட்ஸ் சௌந்தரிய பராமரிப்பு அளித்து வந்தால் போதும்

பிரசித்தி பெற்ற பாண்ட்ஸ் க்ரீம்கள் உங்கள் சருமத்திற்கு மிகச் சிறந்தவை; சீதோஷ்ணச் சூழ்நிலையின் கெட்ட விளைவுகளைத் தடுத்து சருமத்தைப் பாதுகாக்கும். உலக முழுவதிலுமுள்ள அழகு நங்கையரைப் பின்பற்றி நீங்களும் உங்கள் வதனத்திற்கு இந்தக் க்ரீம்களின் சௌமியமான பராமரிப்பு அளித்து, அதை மிருதுவாகவும் புதுமலர் சோபையுடனும் வைத்திருக்கக்கூடும்.





வரண்ட சீதோஷ்ண நிலை உங்கள் முகப் பொலிவைப் பாழ்படுத்தினால் நீங்கள் உபயோகிக்கவேண்டியது பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம். அதிலுள்ள செழிப்பான எண்ணெய்கள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரண்ட காற்றினால் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



உங்கள் சருமம் இயற்கையாகவே எண்ணெய்ப் பசையுடையதானால் அல்லது உஷ்ணமும் ஈசசப்பும் மிகுந்த சூழ்நிலையில் பிசுக்கடையும் பட்சத்தில், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகிக்கவும். இக்குளுமையான மெல்லிய க்ரீம் சருமத்துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்த ஜீவாணுக்களையும் அகற்றி உங்கள் முகத்திற்கு சௌமிய பாதுகாப்பளிக்கிறது.

உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்

பாண்ட்ஸ் க்ரீம்களை பிரதி தினமும் உபயோகித்து சருமத்தில் ஏற்படும் வித்தியாசத்தை கவனியுங்கள். சொற்ப நாட்களில் உங்கள் வதனம் அதிக தெளிவுடனும் மென்மையுடனும் விளங்குவதைக் காண்பீர்கள்—உணரவும் செய்வீர்கள்!

பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்
வானிஷிங் க்ரீம்





பக்ஷபாதமற்ற மனப்பான்மை..

கடந்த சில ஆண்டுகளில் எஸ்ட்ரெலா பாட்டரிகள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கின்றன என்பதை அவைகளை உபயோகித்து அறியலாம். நீங்கள் அவைகளை உபயோகித்துப் பாருங்கள். அவைகளின் குறைந்த விலைக்கு அவைகள் இரு பங்கு சக்தியையும், இரு பங்கு ஒளியையும், இரு பங்கு நீடித்த உழைப்பையும் பெற்றிருக்கின்றன என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள்.



எஸ்ட்ரெலா பாட்டரீஸ்


எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிட்., பம்பாய்-மதராஸ்-டெல்லி-நாக்பூர்-கான்பூர்-கல்கத்தா.

229

ஜாம்-பெக்கினுல் அந்த எக்ஸிமா, மண்டை சருமநோய், மற்றும் சிறங்கை ஒழித்து விடுங்கள்



Zam-Buk



ஜாம்-பெக் உலகிலேயே மகோன்னதமான சருமக்களிம்பு. ஜாம்-பெக் புண்ணை ஆற்றி அரிப்பை நிறுத்தும். ஜாம்-பெக் சருமத்தினுள் புகுந்து, நோயுற்ற தசைநார்களை சுத்தம் செய்து விரைவில் சருமத்திற்கு அழகும் தசைக்கு ஆரோக்கியமும் ஊட்டும். விஷகாயங்கள், கொப்புளங்கள் சீப்பிடித்த புண்கள் முதலியவற்றை குணப்படுத்துவதிலும், பூச்சிக்கடிகளை பரிசுத்தமாக்குவதிலும், காய்வலி மற்றும் ரணங்களை ஆற்றி சமனமூட்டுவதிலும், ஜாம்-பெக்கின் சக்தி அற்புதமானது. அநேக மதிப்பு வாய்ந்த ஔஷதப் பொருள்களடங்கிய ஜாம்-பெக்கின் க்ளோரோபில்லும் சேர்ந்திருப்பதால் அதன் சமன குணமும் தசைநார் புஷ்டி மற்றும் இதர பயன்களும் கிடைக்கின்றன.

மிருகக் கொழுப்பு சேரவில்லை என்பதற்கு உத்திரவாதம்.

ஜாம்-பெக்கினுல் குணம் பெறுவீர்கள்,

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FZY-35 TAM.

மதராஸிலிருந்து ஹோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

தெய்வப் பெண்

எஸ். பத்மா



கட்டிலில் படுத்திருந்த சீதாவின் காதுகளில், வெளியில் யாரோ "ஸார் இருக்கிறாரா?" என்று கேட்டது விழுந்தது. அவள் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தாள்.

"என்ன வேணும்?" என்று வினவினாள், பக்கத்தில் உட்கார்ந்திருந்த நர்ஸ்.

"ஒன்றுமில்லை..." என்று அவள் பதில் அளித்தாள்.

சீதாவின் இதயத்தின் ஆழத்திலிருந்து கிளம்பிய பெருமூச்சு அவள் வார்த்தைகளைத் தடை செய்தது. அவள் திரும்பவும் கண்களை மூடிக் கொண்டாள்.

* * *

அவர்கள் முதல் சந்திப்பும் அப்படித்தான் நேர்ந்தது. அன்று சீதா முன் ஹாலில் உட்கார்ந்து கொண்டு ஆசிரியர் ஹார்டியின் 'டெஸ் ஆப் தி டி அர்பர்வில்ஸ்' (Tess of the D' Urberviles) என்ற நாவலை வாசித்துக் கொண்டிருந்தாள்.

"புரொபஸர் இருக்கிறாரா?" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் ஒரு வெளி நாட்டு இளைஞன் அடக்கத்துடன் நின்று கொண்டிருந்தான்.

காலையில்தான் அவள் தந்தை சொல்லிக் கொண்டிருந்தார்: "நாம் இக்காலத்தில் கடவுள் இருக்கிறாரா என்று சந்தேகப்படும் நிலைக்கு வந்திருக்கிறோம். ஆனால் வெளி நாட்டவர்கள் இப்பொழுதுதான் நம் பெருமையை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஸம்ஸ்கிருதமும் இந்திய வேதாந்தமும் படிக்க ஆசைப் படுகிறார்கள். இப்பொழுதுகூட இங்கிலாந்திலிருந்து ஸம்ஸ்கிருதம் படிப்பதற்காக ஒரு பையன் இவ்வூருக்கு வந்திருக்கிறான். நம் வீட்டுக்குக் கூட வருவதாகச் சொன்னான்."

சீதா தன்னைச் சமாளித்துக் கொண்டு, "வந்தனம். நீங்கள் தயவுசெய்து சிறிது உட்கார்ந்து கொள்ளுங்கள். என் தந்தை இப்பொழுது வந்து விடுவார்" என்றாள்.

பிறகு அவனுக்கு ஏதாவது பானம் கொண்டு வருவதற்காக உள்ளே சென்றாள். அவள் 'டீ'யுடன் திரும்பிய பொழுது, அவ்விளைஞன் அவள் வைத்து விட்டுப் போன புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு ஹார்டியின் நாவல்கள் பிடிக்கின்றனவா? அவை உணர்ச்சி வசப்படுத்துவனவாக இருக்கின்றன என்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்!" என்று இனிமையாகக் கூறினான்.

அதற்குச் சீதா, "ஆம்! டெஸ்ஸிற்காக நான் பரிதாபப் படுகிறேன். ஒருவனின் மிருகக் குணத்துக்குப் பலியாகி அவள் ஆயுள் பரியந்தம் துக்கம் அநுபவித்ததைப் பற்றி நினைக்கும் பொழுது எவ்வளவு வேதனையாக இருக்கிறது" என்றாள்.

"நான் இந்த நாட்டவர்களுடன் நன்றாகப் பழகி, இங்கு உள்ளவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன். உங்கள் தந்தை எனக்கு

நான் வாசிக்க வேண்டிய சில புத்தகங்களைப் பற்றிச் சொல்வதாகக் கூறி யிருந்தார். பாரத நாட்டின் பண்டைய இலக்கியமெல்லாம் ஸம்ஸ்கிருதத்தில்தான் இருக்கிறது என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். எனக்கு ஸம்ஸ்கிருதம் மிகவும் பிடித்திருக்கிறது!'' என்று அந்த வாலிபன் சொன்னான்.

இதைக் கேட்ட சீதாவுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. சிறிது நேரம் பொறுத்து, சீதாவின் தந்தையை மற்றொரு நாள் வந்து சந்திப்பதாகச் சொல்லி விட்டு அந்த இளைஞன் புறப்பட ஆயத்தமானான்.

"என் பெயரை நான் சொல்ல வில்லையே. என் பெயர் ஜான் ஸ்மித். உங்கள் பெயரை நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று வினயத்துடன் கேட்டான்.

"என் பெயர் சீதா'' என்ற பதிலைக் கேட்டவுடன் ஸ்மித், "ராமாயணத்தின் கதா நாயகியா?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

அவன் சென்றவுடன் சீதாவின் தாய், "அந்தப் பையனுக்குத்தான் எவ்வளவு மரியாதையாக நடந்து கொள்ளத் தெரிந்து இருக்கிறது!'' என்று ஆச்சரியப் பட்டாள்.

பிறகு ஸ்மித் சீதாவின் வீட்டுக்கு அடிக்கடி வர ஆரம்பித்தான். சீதாவின் சாந்தமான குணம் ஸ்மித்தை மிகவும் கவர்ந்தது. அவன் சீதாவிடம் எப்பொழுதும் "நீங்கள் எவ்வளவு படித்தாலும் உங்கள் பழைய வழக்கங்களை விடாமல் இருக்கிறீர்களே!'' என்பான். பாரத நாகரிகங்களைப் புகழ்வான்.

ஆனால் அதற்குச் சீதாவின் அடக்கமான பதில் இதுதான். "பழைய காலத்தில் இந்தியாவில் இருந்த முனிவர்களின் குமாரிகளையும் மனைவிகளையும் கண்டால் நீங்கள் என்னதான் சொல்லுவீர்களோ! சகல கலா வல்லிகளா யிருந்தும் அகம்பாவ மில்லாமல் குடும்பத்தை எவ்வளவு அழகாக நடத்தி வந்தார்கள் தெரியுமா?''

இந்த வார்த்தைகளைக் கேட்கும்பொழுதெல்லாம் ஸ்மித்திற்கு இந்தியத் தாயை, ஏன், சீதாவையும்தான் கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்று தோன்றும்.

"அதோடு முடிந்திருந்தால்......'' சீதா முணுமுணுத்தாள்.

"என்னம்மா வேணும்?'' என்று நர்ஸ் மறுபடியும் கேட்டாள்.

* * *

ஒரு நாள் சீதா தன் சிநேகிதி வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தாள். பொழுது சாய்ந்து விட்டது. தனியாகப் போகிறோமே என்ற எண்ணம் அவள் நடையைத் துரிதப்படுத்தியது. தெருவில் யாருமே இருக்கவில்லை. தெருக் கோடியில் வெங்கிட்டுவைக் கண்டதும் அவள் உயிரெல்லாம் வாய்க்கு வந்து விட்டது போல் தோன்றியது.



வெங்கிட்டு என்ற வெங்கடராமன் ஒருபெயர் பெற்ற 'ரௌடி'. பெரிய வீட்டுப் பிள்ளை யாதலால் கேட்பவர் யாரும் கிடையாது. அவனுக்குச் சீதாவை அடைய வேண்டுமென்ற ஆசை நெடு நாட்களாக உண்டு. ஆனால் சீதா அவன் கண்ணில் கூடப் பட்டதில்லை.

"எங்கே அவசரமாகப் போகிறாய்? நான் உனக்குத் துணை வரட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டே அவளை நெருங்கினான் வெங்கிட்டு.

அவன் கண்களில் தாண்டவமாடிய வெறியைக் கண்டு சீதா பதறிப் போனாள். இந்த மூர்க்கனின் வெறியைச் சகோதர தர்மத்தைப் பற்றிச் சொல்லி அணைக்க முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. தன் பலத்தைக் கொண்டு அவன் ஆண்மையுடன் போராடுவதிலும் தோல்வி தான் கிடைக்கும் என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரியும்.

அவள் மனம் திரௌபதியைக் காத்த கண்ணனைக் கூவி அழைத்தது. அடுத்த கணம் அங்கு ஒரு 'சைக்கிள்' வேகமாக வந்ததைக் கண்டாள். சைக்கிளின் மேலிருந்த

ஸ்மித்தைக் கண்டவுடன் வெங்கிட்டு பதறிப் போய் ஓடி விட்டான். அவனிடம் தைரியத்தை எப்படி எதிர் பார்க்க முடியும்?

சீதா நன்றியுடன் ஸ்மித்தைப் பார்த்தாள். "தெய்வம்தான் உங்களை என் உதவிக்கு அனுப்பி யிருக்கிறது. நான் 'டெஸ்'ஸிற்கு என் பரிதாபப் பட்டேன் என்று தெரிகிறதா? பெண்களின் மேல் எவ்வளவு பெரிய பொறுப்பைச் சுமத்தி யிருக்கிறார் கடவுள் பாருங்கள்!" என்றாள் சீதா.

உணர்ச்சியினால் அவளுடைய குரல் தழுதழுத்தது.

"நான் உங்களை வீடு வரையில் கொண்டு விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஸ்மித் கூட வந்தான். சீதாவுக்கு அன்று ஸ்மித்தைப் பார்ப்பதற்குக் கூட அவமான மாக இருந்தது.

வெங்கிட்டுவின் செய்கைக்குச் சமாதானம் கூறும் தோரணையில் அவள், "பீஷ்மரைப் போன்ற பிரம்மச்சாரிகள் அவதரித்த நாடு இது. இன்றைய நாகரிகத்தின் பலனாக வெங்கிட்டுவைப் போன்றவர்களும் தோன்றி யிருக்கிறார்கள். என்ன செய்வது?" என்றாள்.



அதற்கு ஸ்மித் ஒன்றும் பதில் பேச வில்லை. எப்பொழுதும் உற்சாகத்துடன் பேசும் அவன் அன்று மௌனம் சாதித்ததைக் கண்ட சீதாவுக்கு மிகவும் ஆச்சரிய மாக இருந்தது.

சிறிது பொறுத்து ஸ்மித், "மிஸ் சீதா, நான் என் மனத்தை உங்களிடம் திறந்து காண்பித்துத்தான் ஆக வேண்டும். நான் எங்கள் நாட்டிலும், இந்தியாவிலும் எத்தனையோ பெண்களுடன் பழகியிருக்கிறேன். இதுவரை பணமோ, அழகோ என் மன உறுதியை அசைத்ததில்லை. ஆனால் உங்கள் சாந்தமும், கம்பீரமும் என்னைத் தலை குனிய வைத்து விட்டன இன்று. உங்களை மட்டும் நான் அடைய முடியுமானால்...... உங்களுடன் சேர்ந்து சாகுந்தலம் முதலிய காவியங்கள் வாசிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? எவ்வளவோ லட்சியங்கள் பேசும் நீங்கள் நமக்கிடையில் இருக்கும் சாதி வித்தியாசங்களைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

சீதாவுக்கு இது ஒரு புதிய அநுபவமாக இருந்தது. அவள் முகம் வெளிறியது. தாழ்ந்த குரலில் அவள், "என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். என்னை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் உங்கள் சகோதரி. உங்கள் உயர்ந்த லட்சியங்களுக்கு நான் மரியாதை செலுத்துகிறேன், என் மனத்துக்குப் பிடித்த ஒரு லட்சிய புருஷன் எங்கள் தேசத்தில் கிடைக்க மாட்டான் என்று நினைப்பது, நான் என் நாட்டையே அவமதிப்பது போல் ஆகும். நீங்கள் என்னை மறந்து விடுங்கள்!" என்றாள்.

ஸ்மித்தின் முகம் வாடியது. "நான் ஆசைப்பட்டது தவறுதான். ஆனால் ஒரு வரம் எனக்கு அளிக்க வேண்டும். எனக்கு ஒரு சகோதரியை அளித்த அந்த நாள் என் வாழ்க்கையில் ஒரு விசேஷ தினம். நான் உங்களுக்குச் சகோதரன் என்ற முறையில் கடிதம்..." என்று சொல்லிக் கொண்டே போனவனைத் தடுத்துச் சீதா, "எங்கள் சமூகத்தை நீங்கள் இன்னும் நன்கு அறிய வில்லை. நீங்கள் எனக்குக் கடிதம் எழுதுவதை அது வித்தியாசமாக எடுத்துக் கொள்ளும்" என்று சொன்னாள்.

அவன் மறுபடியும், "நான் வருடம் ஒரு முறையாவது என் ஞாபகார்த்தமாக உங்களுக்கு ஏதாவது அனுப்புவேன். எனக்கு ஒரு லட்சிய சகோதரி யிருக்கிறாள் என்ற எண்ணம் என் மனத்தைத் தூயதாக வைத்துக் கொள்ள உதவி செய்யும். நான் இனி கூடிய சீக்கிரம் இவ்விடம்விட்டுப் போய் விடுவேன்" என்று கேட்டுக் கொண்டான்.

சீதா திகைத்தாள். அவளுக்கு அது விபரீதமாக முடியுமோ என்ற பயம் இருந்தது. ஆனால் ஸ்மித்தின் மனத்தை அவள் புண்படுத்த விரும்ப வில்லை. "உலகம் நான் உங்கள் பரிசை ஏற்றுக் கொள்வதைத் தப்பாக நினைத்தாலும் உங்களுடைய பரி

சுத்தமான அன்புக்குப் பிரதியாக அதை எதிர்த்துப் போராடுவேன்."

அவன் குரலில் தொனித்த உறுதி அவள் தேகத்தைப் புல்லரிக்கச் செய்தது.

"நீ ஒரு பெண்ணல்ல; தேவி" என்றான் ஸ்மித் உணர்ச்சியுடன்.

மறு நாள் ஜான் ஸ்மித் இந்தியாவிலிருந்து புறப்பட்டுத் தன் நாட்டை நோக்கிச் சென்று விட்டான்.

* * *

"பெண்ணா, தேவியா?" என்று சொல்லிக் கொண்டே ஒரு வறண்ட சிரிப்பு சிரித்தாள் சீதா. நர்ஸ் அவளை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தாள். சீதா புரண்டு படுத்துக் கொண்டாள்.

* * *

சீதாவுக்கும், பிரபல எழுத்தாளரான ராகவனுக்கும் விமரிசையாக விவாகம் நடந்தது. ராகவன் உன்னதக் கொள்கைகள் உள்ளவனாக இருந்தான். சீதாவின் தூய்மையான உள்ளத்தைப் பற்றிப் பெருமை கொண்டான். அயோத்தியா ராமனைப் போலவே அவனும் சீதாவைத் தவிர வேறு ஒருவரைப் பற்றியும் கனவில் எண்ணிப் பார்ப்பது கூடப் பாபம் என்று கருதினான்.

அவர்கள் வாழ்க்கைத் தோணி ஆடி அசைந்து கொண்டே தடங்கலில்லாமல் சென்று கொண்டிருந்தது. அந்த இணையைக் கண்டு எல்லோரும் மனமார ஆசீர்வதித்தார்கள். ஆனால் வெங்கிட்டுவின் உள்ளமோ ஏமாற்றத்தால் வெதும்பிக் கொண்டிருந்தது. அவன் மனத்தில் பொறாமையும், பழிவாங்கும் உணர்ச்சியும் போட்டி போட்டுக் கொண்டு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன.

சில நாட்கள் சென்று சீதாவுக்கு ஒரு பரிசு ஸ்மித்திடமிருந்து வந்தது. ஒரு அழகான முத்து மோதிரம். அதன் கூட இரண்டு வரிகள் அடங்கிய ஒரு கடிதமும் இருந்தது.

"என் அன்புள்ள சீதாவுக்கு, உன் சகோதரனின் காணிக்கை" என்று ஸ்மித் எழுதியிருந்தான்.

ராகவன் இதைப் பார்த்தவுடன் வியப்படைந்தான். "இது யார் சீதா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

சீதா ஸ்மித்தைப் பற்றின விவரங்களைக் கூறினாள். ராகவனால் இந்தப் புதிய உறவு முறையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் மனத்தில் ஸ்மித்தின் கடிதம் ஒரு விஷ வித்தை ஊன்றி விட்டது.

"சீதாவின் வார்த்தைகளைத்தானே நம்ப வேண்டும்!" இதுவே அவனுக்குப் பெரிய கவலையாக இருந்தது.

இரண்டு நாட்கள் சென்றன. அன்று மாலை கடற்கரையில் ராகவன் வெங்கிட்டுவைச் சந்தித்தான். வெங்கிட்டு சீதாவின் தந்தையின் மாணவன் என்பது அவனுக்குத் தெரியும். சீதாவுக்கு வெங்கிட்டுவின் மேல் உள்ள அளவற்ற வெறுப்புதான் அவனை வெங்கிட்டுவுடன் நெருங்கிப் பழகாமல் இருக்கச் செய்தது.

'தன் மனைவியின் ரகசியத்தை இவன் மூலம் தெரிந்து கொண்டால் என்ன?' என்ற ஓர் குரூரமான எண்ணம் ராகவன் மனத்தில் தோன்றியது. வெங்கிட்டுவிடம் அவன் போக்கில் "என் மாமனாரின் மாணவர்களில் ஸ்மித் என்று யாராவது இருந்தார்களா? உனக்குத் தெரியுமா?" என்று வினவினான்.

வெங்கிட்டுவுக்குத் தான் ஒரு தடவை ஏமாந்தது நினைவுக்கு வந்தது. அவன் பழி வாங்கத் தீர்மானித்து விட்டான். "தெரியாமல் என்ன, சரியான சோதா. சீதாவுக்கு மிகவும் வேண்டியவன் அவன்" என்றான் அலட்சியமாக.

ராகவனுக்குத் 'திக்'கென்றது. வெங்கிட்டு ராகவனுக்குக் காத்திருக்காமல் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தான். முடிவு என்ன? ராகவனின் மனசு சேறால் நிறைந்தது. சீதா வெங்கிட்டுவை வெறுத்ததற்குக் காரணமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

ராகவனுக்குத் தன் லட்சியங்களெல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன என்று தோன்றியது. தன் லட்சியப் பாதையிலிருந்து அவனை யாரோ கீழே தள்ளி விட்டாற்போல் இருந்தது அவனுக்கு. 'இன்று எவ்வளவு நல்லவளாக நடித்தாலும், அவள் வாழ்க்கையில் ஒரு தடவை ஏற்பட்ட அந்தச் சிநேகிதத்தை எப்படி மறப்பது? அவன் கற்பனையில் கண்ட பத்தினிப் பெண் எங்கே, இந்தச் சீதா எங்கே?' என்றெல்லாம் அவன் மனம் எண்ணியது. தன் உடைந்த உள்ளத்

கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்


★

		ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா, இலங்கை	ரூ.	13–0–0	6–8–0
பர்மா, மலேயா, வெளிநாடு	ரூ.	16–4–0	8–2–0

குறிப்பு :—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை



பார்க்கர் க்வின்க்

உபயோகியுங்கள்

பாதுகாப்பளிக்கும்

ஸால்வ்-X

அடங்கிய மை இது ஒன்றே



திராவகம் மிகுந்த மைகளால் பேனா ஒழுகுதல் மற்றும் இதர கோளாறுகள் ஏற்படுகின்றன


பார்க்கர் க்வின்க் உபயோகித்து இவ்விதக் கோளாறுகளைத் தவிருங்கள். ஸால்வ்-X அடங்கிய மை இது ஒன்றே. இந்தப் பொருள் கசண்டுகளைக் கரைத்து விடுகிறது. அரிப்பையும் அடைப்பையும் தடுக்கிறது. க்வின்க் அழியா வர்ணங்களிலோ, கழுவி அழித்து விடக்கூடிய நிறங்களிலோ விரும்பியபடி வாங்கலாம்.

விலை ரூ. 1/-

பார்க்கர் பென் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
த. பெ. 51, மதராஸ்

ஏக விக்ரேயகஸ்தர்கள் : பாரி அண்டு கம்பெனி லிமிடெட்
டேர் ஹவுஸ், மதராஸ்-1

சோர்வைப் போக்கி சுறுசுறுப்பை அளிப்பது



மைதீன் புகையிலை

காரம் · மணம் நிறைந்தது...

E. S. மைதீன் & கோ.
கும்பகோணம்.

போன்: 41 தந்தி: "MYDEENCO"

வெளிவருகிறது!

உதயம்

தமிழ் மாத இதழ்

கண் கவர் அட்டைப்படம்!
சிறந்த தமிழ் கதைகள்!
கட்டுரைகள்! கவிதைகள்!
நல்ல தொடர் நாவல்கள்!
சினிமா, நாடக பகுதிகள்!
இவைகளுடன் டிசம்பர் முதல்
வாரத்தில் உதயமாகிறது..
விலை 8 அணா
ஏஜண்டுகள் தேவை

தமிழ் நாடு புத்தக சர்வீஸ்
322, லிங்கி செட்டி தெரு...சென்னை..1.

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரையில் சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சுரோலஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறுநீரும் குறைகிறது. 3வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்கு மேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0
(பாக்கிங், தபால் செலவு இனாம்)

•

Venus Research Laboratory (K.M.)
POST BOX No. 587, CALCUTTA

தின் வேதனையை அவன் பிரயாணம் என்ற போதையில் மறக்க நிச்சயித்தான். சீதாவிடம்கூடச் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பி விட்டான், மனச் சாந்தியைத் தேடி.

* * *

சீதாவுக்கு ராகவனின் இந்த மாறுதல் பேரிடிபோல் இருந்தது. தன் பெற்றோர்களுடன் போய் இருக்க அவள் விரும்பவில்லை. முடிவில் இளம் குழந்தைகளின் மழலையில் அமைதியை நாடி ஒரு பள்ளிக் கூடத்தில் போய்ச் சேர்ந்தாள். வெங்கிட்டுவின் உள்ளம் குளிர்ந்தது. மிகவும் வெற்றியுடன் சீதாவுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தான் அவன்.

சில நாட்கள் சென்ற பின் சீதாவின் பெயருக்கு ஒரு இன்ஷூர் கவர் வந்தது. அதைப் பிரித்ததும் சீதா திடுக்கிட்டாள். அது ஸ்மித்தின் மரணச் செய்தியை அவளுக்கு அறிவித்தது. அவன் உயிலும், அவன் ஒரு மாதத்துக்கு முன்பே எழுதியிருந்த அவனுடைய கடிதமும் கூட இருந்தன. ஸ்மித் எழுதியிருந்தான்:

"சகோதரி, இது தான் என் கடைசிக் கடிதம். எனக்குப் புற்று நோய் என்று டாக்டர் நேற்று கூறினார். அவருக்கு என்ன தெரியும்? மரணத்துக்கு அஞ்சவில்லை. நான் இந்த உலகில் இருந்து ஆக வேண்டியதுதான் என்ன? எனக்கு உற்றார் ஒருவரும் கிடையாது. என் சொத்தைப் பணமாக்கி என் வக்கீல் உனக்கு அனுப்புவார். உன் குழந்தைகளுக்கு இந்த மாமாவின் பரிசாக அதை ஏற்றுக் கொள். அடுத்த பிறவியிலாவது உன்னுடன் பிறந்து சகோதரனாக இருக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை."

சீதாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. அவள் மனம் ஸ்மித்தையும் வெங்கிட்டுவையும் மாறிமாறி எடை போட்டது. ஸ்மித் அனுப்பியிருந்த சொத்தைப் பற்றிக் கேட்டவுடன் ஊரிலிருந்தவர்கள் வாய் கூசாமல் சீதாவைப் பற்றிப் பலபடியாகப் பேச ஆரம்பித்தார்கள். அதே ஏக்கத்தில் அவள் தந்தையும் இறந்தார்.

சீதாவுக்கு ராகவனை மறந்து வாழ்வது அசாத்தியமாகத்தான் இருந்தது. தன் கடந்து போன இன்ப மயமான வாழ்க்கையை நினைத்துப் பெருமூச்சு விடுவதைத் தவிர அவளால் வேறு என்ன செய்ய முடியும்? வெங்கிட்டுவின் மனத்திலும் ஸ்மித்தின் உள்ளத்திலும் ஆசை அலைகளை எழுப்பியது தன் குற்றம்தான் என்று அவள் தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

"ஒருவன் தன்னிடம் குணத்தைக் கண்டதாகக் கூறினான். மற்றொருவன் தன் பெண்மையை அபகரிக்க ஆசைப்பட்டான். தான் ஸ்மித்திடம் மரியாதையாக நடந்து கொண்டதோ, பெண்ணாய்ப் பிறந்ததோ குற்றம் என்று சொல்ல முடியுமா?"

இந்த ஏக்கம் சதா அவள் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. அவள் ஒரு நோயாளியாகி அண்ணனுக்கும் மன்னிக்கும் பாரமாகி வீடு வந்து சேர்ந்தாள். இரண்டு நாட்களுக்கு முன்புதான் டாக்டர் அவள் சகோதரனிடம் 'இனி அவளுக்கு இந்த உலக வாழ்வு சில நாட்களுக்குத்தான்' என்று சொல்லி விட்டார். ஆம்! மனநோய்க்கு மருந்து அவர் எப்படிக் கொடுப்பார்? பாரத நாட்டுப் பெண்களைப் போல் அவளும் ராகவனின் காலடியில் பிராணனை விடவேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவள் சகோதரன் பத்திரிகைகளிலெல்லாம் ராகவனைத் திரும்பி வரும்படி வேண்டிக் கொண்டிருந்தான்.

* * *

"'டென், டென்' என்று என்னமோ உளறுகிறாரே அம்மா இவர்" என்று நர்ஸ் சீதாவின் மன்னியிடம் கேட்டுக் கொண்டிருந்தாள். மன்னி என்ன பதில் சொல்லப் போகிறாள் என்பதைக் கண்களை மூடிய படியே சீதா கவனித்தாள்.

"அது என்ன மாயமோ, யார் கண்டது? எவ்வளவோ ஆசையாக இருந்தவர்தான்



புதுடில்லி தென்னிந்திய கிளப் அங்கத்தினர்கள் நவராத்திரி விழாவைக் குதூகலமாகக் கொண்டாடினர். விழாவை யொட்டி, நடராஜா நாட்டிய நிகேதனத்தைச் சேர்ந்த மாணவிகளின் நாட்டிய நாடகம் வெகு சிறப்பாக நடந்தது.



வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் சார்பிலுள்ள தொழிற்சாலைப் புதுக் கட்டிடங்கள் திறப்பு விழாவுக்கு, விவசாய மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம், கிராம வளர்ச்சித்துறை டைரக்டர் ஸ்ரீ. வெங்கடாசலபதி நாயுடு, கம்யூனிட்டி பிராஜக்ட் டைரக்டர் என். எஸ். ராகவாச்சாரியார் ஐ. ஸி. எஸ். ஹரிஜன் வளர்ச்சித் துறை டைரக்டர் ஸ்ரீ. ச. முத்திருளாண்டி ஐ. ஏ. எஸ். முதலானவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் கைத்தொழில் செய்வதை விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்கள் பார்வையிடுவதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

இவள் புருஷன். இப்பொழுதுதான் இப்படி நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு இவளிடம் பாராமுகமாக இருக்கிறார்" என்று பதிலளித்தாள் சீதாவின் மன்னி.

சீதாவினால் பேசாமல் இருக்க முடியவில்லை. "அவரை ஏன் குற்றம் சொல்கிறாய்? அந்தக் காவிய புருஷனைப் போல இவரும் ஊர் அபவாதத்திற்காக என்னைத் துறந்திருக்கிறார். என்னிடம் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ள அவருக்கு உரிமையில்லையா?" என்றாள் மெல்லிய குரலில்.

சீதா படுத்த படியே தன் தேவனைத் தியானித்துக் கொண்டிருந்தாள். வாசலில் திடீரென்று பேச்சரவம் கேட்டது. அவளுக்கு மிகவும் பழக்கமான அந்தக் குரல். சீதாவின் அண்ணா 'அவரிடம்' சொல்லிக் கொண்டிருந்தான். "இந்த உலகத்தை எதிர்க்க அவளால் எவ்வளவு நாள் முடியும்? வீணாக அபவாதத்தைச் சுமத்திப் பேசுகிறார்கள்" என்றான்.

சீதாவின் இதயத்தைக் கீறிக்கொண்டு ஒரு பெருமூச்சு எழுந்தது.

ராகவன் மௌனமாகச் சீதாவின் அறைக்குள் நுழைந்தான். தன் கடைசி ஆசை நிறைவேறுவதைக் கண்ட சீதாவுக்குத் தன் இன்ப உணர்ச்சிகளெல்லாம் ஒரு பந்தாக மார்பில் வந்து அடைத்துக் கொள்வது போலத் தோன்றியது. அவள் திணறினாள்.

ராகவன் "என்னை மன்னித்து விடு, சீதா. நான் சிறிது நிதானத்துடன் நடந்து கொண்டிருந்தால் உனக்கு இந்தக் கதி வந்திருக்காது" என்றான் தடுமாற்றத்துடன்.

"இன்று தான் எனக்கு உங்களைப் பற்றி மிகவும் பெருமையாக இருக்கிறது. உங்கள் புனிதமான உள்ளம் மனைவி கற்பில் சிறந்தவளாக இருக்க வேண்டும் என்று ஆசைப் பட்டதில் என்ன வியப்பு! நான்தான் என் பெயருக்குக் களங்கம் ஒருவரும் சொல்ல முடியாதபடி ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். எப்படியானாலும் சீதையை மறுபடியும் ஏற்றுக்கொள்ள ராமன் வந்து விட்டார். இனி பூமா தேவியின் மடியைச் சேர வேண்டியது தானே பாக்கி" என்றாள் சீதா, மிகவும் கஷ்டத்தோடு.

"நான் தேவனாக இருக்க ஆசைப்பட்டேன். ஒரு மனிதனாகவாவது இருந்திருக்கலாம்" என்று ஏதேதோ ராகவன் அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

சீதா ஒன்றையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அந்தக் குரல் அவள் காதில் இனிமையான ஒரு ராகத்தைப் போல் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளைத் தாலாட்டித் தூங்கச் செய்வது போல் இருந்தது. சீதாவின் கண்கள் திடீரென்று வெறித்துப் பார்க்கத் தொடங்கின.

"ஸ்மித் என் சகோதரன்" என்று தன் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு ஒரு முறை அவள் கதறினாள். பின் அவள் ஆத்மா உலகாளும் அன்னையைத் தேடிக் கொண்டு சென்று விட்டது.

உலகத்தின் வாயை மூட அவளால் முடியவில்லை. ஸ்மித்துக்கு வாக்குக் கொடுத்தபடியே சீதா உலக அபவாதத்துடன் போராடி வீர சுவர்க்கம் அடைந்தாள். டெஸ்ஸிற்கு உலகம் நியாயம் என்ற போர்வைக்குள்ளிருந்து மரண தண்டனையை அளித்தது. சீதாவையோ பழி என்ற கூரிய வாளால் கொன்று விட்டது. டெஸ்ஸோ தன்னைக் கற்பழித்தவனைக் கொன்று பழிக்குப் பழி வாங்கி விட்டாள். ஆனால் அஹிம்ஸா முறையை உலகுக்குப் போதித்த இந்தியாவின் தவப்புதல்வியல்லவா சீதா? வெங்கிட்டுவினால் இவ்வளவு கஷ்டம் அநுபவித்திருந்தும் கூட அவள் தன் வாயால் அவனை ஒன்றுமே குறை சொல்லவில்லையே! அப்பப்பா, அவள் பொறுமை! அவள் தெய்வப் பெண்தான் என்று ஆச்சரியப்பட்டான் ராகவன்.

டால்மியா

இன்ஸுலேட்டர்களும்
ஆவிட் ஜாடிகளும்

உயர்ந்த ரகத்துக்கும்
சிறந்த உழைப்புக்கும்

•


டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
டால்மியாபுரம் - (திருச்சிராப்பள்ளி)



2 மாத்திரைகள்
கொண்ட பாக்கெட்டு
களிலும் 32மாத்திரை
கள் கொண்ட பெட்டி
களிலும் கிடைக்கும்.

நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்
இவற்றினின்று துரிதமாக நிவர்த்திபெற

B. 2.



·SANFORIZED·
REGD TO MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப்
பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
–எத்தனை முறை
சலவை செய்தாலும்
முக்கிய கவனிப்பு
உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள் :
"இது 'சான்பொரைஸ்ட்' துணி
–உடை தைப்பதற்குமுன்
நனைக்க வேண்டாம்"



25. விருந்து முடிந்தது!

கண் விழித்திருக்கும்போதே கனவு காண்கிறோமோ என்ற பிரமை ரமேஷுக்கு உண்டாயிற்று. இருந்தாலும் கற்பனை அவன் உள்ளத்தில் உயர்ந்தோங்கி விரியத் தொடங்கி விட்டது. அதற்கு அவ்வளவு தூரம் இடங் கொடுக்கக் கூடாது என்று அணை கோலி விட்டு அவன் தனக்கு அளிக்கப் பட்டிருந்த அலுவல்களைக் கவனிப்பதில் மூழ்கினான். எதுவும் குஸுமாவின் இஷ்டப்படியே நடக்கட்டும் என்று ஸர் பிஹாரிலாலும் சம்மதம் தெரிவித்து விடவே, அவன் குஸுமா சொன்ன பிரகாரம் அழைப்பிதழ்கள் தயாரித்தான். குறிப்பிட்ட நபர்களுக்கெல்லாம் அழைப்பிதழ் அனுப்பி முடிந்ததும் ஜகதீஷைப் போய்ப் பார்த்து வரலாம் என்று எண்ணிப் புறப்பட்டான்.

வெகு நாட்களாக அவன் ஜகதீஷையோ கோகிலாவையோ போய்ப் பார்க்க வில்லை. ஜகதீஷ் நோய் வாய்ப்பட்டிருந்த பொழுது இரண்டொரு தடவை அவனைப் பார்த்து வரப் போயிருக்கிறான். ஆனால் அப்பொழுதெல்லாம் அவனால் அவனோடு தனியாக அளவளாவிப் பேச முடியவில்லை. ஜகதீஷின் நிலை ரமேஷுக்குத் தெரியாததல்லவே! எனவே, அவனுக்கு எவ்வகையிலாவது உதவி புரிய வேண்டுமென்று அவன் அவா கொண்டிருந்தான். இரண்டொரு முறை அவனுக்குப் பொருளுதவி செய்யவும் முயன்றான். ஆனால் ஜகதீஷும் கோகிலாவும் அவனுடைய அந்த உதவியை ஏற்கச் சம்மதிக்க வில்லை.

"நீ ஒன்றும் பணம் சேர்த்து வைக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அதோடு உனக்கு இப்பொழுது வேறு எங்கிருந்தும் வருமானம் கிடையாது என்பதையும் நான் அறிவேன். அப்படியிருக்கும் பொழுது நான் அளிக்கும் இச்சிறு தொகையை ஏற்க உனக்கு என்ன ஆட்சேபணை?" என்று ஒரு நாள் ஜகதீஷை ரமேஷ் கேட்டான்.

"இதோ பார், ரமேஷ்! பணம் சம்பாதிப்பதற்கான பல வழிகளை நான் இன்னும் கையாண்டு பார்க்கவில்லை. எல்லா வழிகளையும் கையாண்டு பார்த்துப் பின்னரும் எனக்குப் பணம் கிடைக்க வில்லையென்றால் நான் உன் உதவியை நாடுகிறேன். அப்பொழுது நீ தட்டாமல் பணம் கொடுத்து உதவினால் அதுவே எனக்குப் போதும்!" என்று ஜகதீஷ் பதில் சொன்னான்.

"அதுதான் நியாயம். நம் ரமேஷை நாம் கடைசிச் சாதனமாகத்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கு நமக்கு வேறு வழி வகையே தெரியாவிட்டால் நாம் ரமேஷின் வீட்டுக்கே போய் விடலாம். என்ன, நான் சொல்வது?" என்று ஜகதீஷின் சொற்களை ஆமோதித்து அதற்கு அநுசரணையாகப் பேசினாள் கோகிலா.

தன்மான உணர்ச்சியுள்ள இந்தத் தம்பதிகள் நம்மிடம் பண உதவி பெற ஒரு நாளும் முன்வர மாட்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பின்தான் ரமேஷ் அன்று நம்பிக்கை இழந்து வீடு திரும்பினான். இது போன்ற அநுபவங்கள் ஜகதீஷின் விஷயத்தில் ரமேஷுக்கு எத்தனையோ தடவைகள் ஏற்பட்டு விட்டன. இருந்தாலும் அவனுக்கு ஜகதீஷிடம் உள்ள அன்பும் அநுதாபமும் எள்ளளவும் குறையவில்லை.

ஸர் பிஹாரிலாலைக் கொண்டு ஒரு புதுப் பத்திரிகை ஆரம்பிக்கச் செய்து அதில் ஜகதீஷுக்கு ஒரு நல்ல இடம் பிடித்துக் கொடுத்து விட வேண்டும் என்பது ரமேஷின் அந்தரங்க ஆசை. அவனுடைய அந்த ஆசைக்கேற்றாற்போல் ஸர் பிஹாரிலால் நல்ல வேளையாகத் தாமாகவே ஜகதீஷின் பேச்சை எடுத்தார்; குஸுமாவும் அவனுக்கு அழைப்பிதழ் அனுப்பி வைத்தாள். அதனால் ஜகதீஷையும் ஸர் பிஹாரிலாலையும் அறிமுகப் படுத்தி வைத்துக் கிடைத்துள்ள அந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி விடவேண்டும் என்று ரமேஷ் திட்டமிட்டான். ஆனால் விசித்திர சுபாவம் படைத்த ஜகதீஷ் அழைப்பிதழ் கிடைத்து விட்டதே என்பதற்காக வந்து விடுவானா? இந்தச் சந்தேகம் எழவே, அவனை வற்புறுத்தி அழைத்து வருவதற்காக ரமேஷ் அவன் வீடு தேடிச் சென்றான்.

ஜகதீஷும் ரமேஷும் மிகவும் ஆப்த நண்பர்கள். ரமேஷைக் காட்டிலும் ஜகதீஷ் வயதில் பெரியவன். இருவரும் அன்னியோன்னியமான அண்ணன் தம்பிகளைப்


போல் அன்புடன் பழகி வந்தார்கள். ரமேஷ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஜகதீசைக் காட்டிலும் இரண்டு வருஷம் கீழே படித்துக் கொண்டிருந்தான். அக்காலத்தில் ரமேஷின் பொருளாதார நிலை மிகவும் கேவலமா யிருந்தது. ஜகதீஷ்தான் சமய சந்தர்ப்பங்களில் அவனுக்கு உதவி புரிந்து கைதூக்கி விட்டிருக்கிறான்.

ரமேஷுக்கு முன்னால் ஸர் பிஹாரிலாலுக்குக் காரியதரிசியாக இருந்தவன் ஜகதீஷுக்கு மிகவும் வேண்டியவன். அவனுக்கு அடுத்த படியாக ரமேஷுக்கு அந்த ஸ்தானத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று பாடு பட்டவனும் ஜகதீஷ்தான். ஜகதீஷின் முயற்சி மட்டும் இல்லாவிட்டால் ரமேஷுக்கு அந்த வேலை கிடைத்திராது.

இம்மாதிரி உதவிகள் புரிவதெல்லாம் சாதாரணம்தான் என்றாலும், ரமேஷ் ஜகதீசை மறக்கவில்லை; ஜகதீஷின் உதவியை மறக்கவில்லை. அதோடு ஜகதீஷிடம் இயல்பாகக் குடிகொண்டிருந்த குணங்கள்வேறு ரமேஷை அவனிடம் கவர்ச்சி கொள்ளச் செய்தன.

ஜகதீஷின் விசித்திர சுபாவம், தன்மானம் தோய்ந்த சுதந்திர உணர்ச்சி, சமூகத்தின் சட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கள தைரியமாக எதிர்த்துப் போராடும் ஆர்வம் ஆகியவை ரமேஷின் மனத்துக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டன. அவை யெல்லாவற்றுக்கும் மேலாகக் கோகிலாவும் ஜகதீஷும் கொண்டிருந்த அன்பும் நடத்திய குடும்ப வாழ்வும் அவனுக்கு இணையற்றவையாகத் தோற்றின; அவன் மனத்தை அவர்களிடம் அடிமை கொள்ளச் செய்தன. ஜகதீசைப் போல் தான் தோன்றித் தனமாகக் கட்டு திட்டங்களை யெல்லாம் மீறி நடக்க முயலும் வாலிபனைக் கோகிலா எப்படித் தன் அன்பு வலையில் கட்டிப் போட்டு விட்டாள்? அதைக் கண்டு அவன் கொண்ட மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் ஒரு எல்லையில்லை.

ஜகதீஷ் எத்தனையோ உத்தியோகங்களை உதறித் தள்ளி விட்டான். அவை யெல்லாம் ரமேஷுக்கு வியப்பை அளிக்கவில்லை. ஜகதீஷின் குணங்களை அறிந்திருந்த அவனுக்கு எதற்காக வியப்பு எழப்போகிறது? ஆனால் அதற்கு நேர்மாறாக எப்படியாவது உதவிபுரிந்து அவனை நல்ல அந்தஸ்துடன் வைக்க வேண்டும் என்ற ஆசைதான் ரமேஷுக்கு அலை அலையாக எழுந்தது. அதனால் தான்



நடுநிலைமையை ஆதரித்து நாலு பேருக்கு நல்லது செய்யும் பத்திரிகை ஒன்றுக்கு அவனுடைய உதவியை நாடவேண்டும் என்று அவன் ஆர்வம் கொண்டான். அந்த ஆர்வத்தை உடனே செயலாகவும் காட்டி விடத் தீர்மானித்து ஜகதீஷின் வீட்டை அடைந்தான். பிஹாரிலாலின் அழைப்பை ஏற்கு மாறு வேண்டினான். அவனது அந்த வேண்டுகோளைக் கேட்ட ஜகதீஷுக்குச் சொல்லொணாத வியப்பு ஏற்பட்டது.

"ரமேஷ்! நல்ல ஆள் அப்பா, நீ! எனக்கும் ஸர் பிஹாரிலாலுக்கும் என்ன அப்பா சம்பந்தம்? நான் எதற்காக அவருடைய அழைப்பை ஏற்க வேண்டும்? நீ அவரிடம் இருக்கிறாய். அதற்காக எனக்கு ஒரு அழைப்பிதழைக் கொண்டு வந்து தருகிறாய். நீயும் நானும் நண்பன் என்பதற்காக அவர் எதற்காக எனக்கு அழைப்பிதழ் அனுப்ப வேண்டும்? அப்படியே அவர் அனுப்பினாலும் நான் எதற்காக வரவேண்டும்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"அதெல்லாம் ஒன்றும் எனக்குத் தெரியாது. என்ன இருந்தாலும் நீ அங்கே வந்து தான் ஆகவேண்டும். ஸர் பிஹாரிலாலுக்கு


உன்னிடம் மிக முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது!'' என்றான் ரமேஷ்.

''என்னிடம் ஒருவருக்கு வேலை யிருக்கிறது என்று நீ சொன்னால் நான் எப்படி நம்புவது? எனக்குத் தெரியாதா, என்னிடம் யாருக்கும் வேலை யில்லை யென்று? வேலையில்லாமல் ஒருவர் வீட்டுக்கு வந்து நான் முட்டாள் பட்டம் வாங்கிக் கட்டிக் கொள்ளத் தயாரா யில்லை!'' என்றான் ஜகதீஷ்.

''முட்டாள் பட்டமே நீ வாங்கிக் கட்டிக் கொள்வதா யிருந்தாலும் நான் உன்னை அழைத்துப் போகத் தான் போகிறேன். அப்புறம் என்ன?''

''ஆமாம், ஸர் பிஹாரிலாலிடம் சொல்லி எனக்கு ஏதாவது வேலை கீலை வாங்கித் தரப் போகிறாயா, என்ன?'' என்று ஜகதீஷ் கேலியாகக் கேட்டான்.

''வேலை வாங்கிக் கொடுத்தாலும் உனக்கு வேலை செய்ய வர வேணுமே! உன் உடம்பு வணங்க வேணுமே!'' என்று சொல்லிக் கொண்டு வந்த ரமேஷ் சட்டென்று கோகிலாவின் பக்கம் திரும்பிப் பார்த்து, ''அண்ணி! நான் இவ்வளவு வற்புறுத்திக் கூப்பிட்ட பிறகும் ஜகதீஷ் பிடிவாதமாக வராமல் இருந்து விட்டால், அப்புறம் நான் உங்கள் வீட்டு வாசற்படி ஏற மாட்டேன்! இப்போதே சொல்லி விட்டேன்!'' என்றான். கோகிலாவின் உதவியை நாடினால் தன் காரியம் கட்டாயம் கைகூடி விடும் என்பது அவன் எண்ணம். அவனுடைய அந்த எண்ணம் பொய்யானதும் அல்ல.



''இத்தனை தூரம் ரமேஷ் வற்புறுத்திக் கூப்பிடும் பொழுது உங்களுக்குப் போய் வருவதற்கு ஏன் வலிக்கிறதாம்?'' என்று கேட்டாள் கோகிலா.

''வலிக்க வில்லை; கடுக்கிறது. இவன் எண்ணம் என்ன தெரியுமோ, இல்லையோ? எனக்கு ஒரு உத்தியோகம் பார்த்து வைத்து என்னை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்து வைக்கப் போகிறானும். இத்தனை நாட்கள் என்னோடு பழகியும் இந்த முட்டாளுக்கு நான் ஒரு நிலையற்ற மனுஷ்யன் என்பது தெரியவில்லையே! இவன் அசட்டுத் தனத்தை நான் யாரிடம் போய்ச் சொல்வது?'' என்றான் ஜகதீஷ்.

''ரமேஷுக்கு அப்படி ஒரு நல்ல நம்பிக்கை இருக்குமானால் அவர் இவ்விஷயத்தில் ஏன் முயற்சித்துப் பார்க்கக் கூடாது?'' என்று கேட்டாள் கோகிலா.


''இம்மாதிரி பெரிய மனிதர்களிடம் போய்த் தலை வணங்கி நிற்க எனக்குப் பிரிய மில்லை.''

''ஏன், அப்பா! உன்னைப் போய் யார் தலை வணங்கி நிற்கச் சொன்னார்கள்? உனக்கு ஆசையாக இருந்தால் ஸர் பிஹாரிலாலையே வேண்டுமானால் முதலில் தலை வணங்கி வணக்கம் தெரிவிக்கச் செய்கிறேன்! இதற்காகவா வர முடியாது என்று மறுக்கிறாய்?'' என்று கேட்டான் ரமேஷ்.

''இதோ, பாருங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள். நம் ரமேஷ் இப்பொழுது ஒரு பெரிய லக்ஷவான்தாரராகவே ஆகி விட்டார். இவரிடம் முடியாது என்று மறுப்பது நல்லதாக முடியாது!'' என்றாள் கோகிலா.

''ஆமப்பா, ரமேஷ்! பார்த்தாயா, பார்த்தாயா? கேட்கவே மறந்து விட்டேனே! இம்மாதிரி வேடிக்கை விளையாட்டுகளில் நீயும்] இறங்கி யிருக்கிறாயாமே! என்னிடம் ஜுகல்கிஷோரோ அல்லது வேறு யாரோ சொன்னார்கள். நீயும் ஸர் பிஹாரிலாலும் சேர்ந்து ஏதோ மிலம் எடுத் திருக்கிறீர்களாமே, உண்மைதானா?'' என்று கேட்டான் ஜகதீஷ்.

''உனக்கு இதெல்லாம் ஒரு வேடிக்கை விளையாட்டாகத் தோன்றலாம். ஆனால் நான் சம்பாதிக்க வேண்டும், சுகமாக இருக்க வேண்டும் என்று தான் நீ சொல்லும் இந்த விளையாட்டில் இறங்கி யிருக்கிறேன். வாழ்க்கையை வரன் முறையோடு வாழ வேண்டும் என்றால் ஏதாவது ஒரு தொழில் இறங்கித்தானே ஆக வேண்டும்? அதனால்தான்...'' என்றான் ரமேஷ்.





"ஆமாம், யார் இல்லையென்று சொன்னார்கள்? ஆனால் இதைப் பற்றி நீ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே!" என்றான் ஜகதீஷ்.

"உன்னிடம் எதற்குச் சொல்லவேண்டும்? அப்படியே சொன்னாலும் நீ மாவட்ட அதிகாரிக்கு மரியாதை செலுத்துவதற்காக என்ன செலவழித்தாய், தலைமைக் குமாஸ்தாவுக்கு எத்தனை ரூபாய் மதிப்புள்ள கைக் கடிகாரம் வாங்கிப் பரிசு அளித்தாய் என்றெல்லாம் அடிமடியில் கை வைத்துப் பல கேள்விகள் கேட்கத் தொடங்கி விடுவாய்! அதனால் தான்..." என்றான் ரமேஷ்.

"இல்லை, இல்லை! இனிமேல் அம்மாதிரியெல்லாம் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். உலகத்தில் பழகிவிட்ட இந்தப் பழக்கத்தைத் தவிர்க்க முடியாதது என்ற முறையில் ஏற்றுக் கொண்டே இனி நடக்க முயல்வேன். ஆமாம், இந்த விவசாயத் தொழிலில் உனக்கு ஆர்வமோ ஈடுபாடோ இருக்கிறதா என்று தான் கேட்கிறேன்!"

"இல்லாமல் என்ன? எனக்கு உதவி புரியப் பல நல்ல குடியானவர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஒரு துறவி கூட எங்களிடமிருந்து நிறைய நிலம் எடுத்துக் கொண்டிருக்கிறார்!" என்றான் ரமேஷ்.

"அண்ணி! அந்த நிலபுலன்களெல்லாம் எங்கே இருக்கின்றனவாம்?" என்று கேட்டான் ராதா. நாட்டுப்புறத்தைச் சேர்ந்த ராதா நிலபுலன்களைப் பற்றி நன்கு அறிந்தவன் அல்லவா? அதனால் நிலத்தின்பால் உள்ள ஆர்வம் அவனை அப்படிக் கேட்கத் தூண்டியது.

"இங்கிருந்து முப்பது முப்பத்தைந்து மைல் தூரத்தில் ஒரு பாழடைந்த கிராமம் இருக்கிறது. அங்கே தான் இந்த நிலம் இருக்கிறது!" என்று அவன் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளித்தான் ரமேஷ்.

"அது என்ன கிராமமோ?" — ராதா மேலும் அவனைத் தூண்டிக் கேட்டான்.

"ஜனங்கள் அதை 'ஓங்காரியா' என்று சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுது அங்கே ஜனங்கள் யாருமே குடியில்லை!" என்று பதில் அளித்தான் ரமேஷ்.

கடைசியில் எல்லோருடைய வற்புறுத்தலுக்கும் இணங்கி ஸர் பிஹாரிலாலின் அழைப்பை ஏற்று அவர் வீட்டுக்குப் போய் வரச் சம்மதித்தான் ஜகதீஷ். சொன்ன சொற்படி குஸுமாவின் பிறந்த நாள் அன்று இரண்டு இரண்டரை மணிக்கெல்லாம் ஸர் பிஹாரிலாலின் வீட்டை அடைந்தான். அப்பொழுது ஏறக்குறைய பத்துப் பேர் அழகாக அலங்கரிக்கப்பட்ட அறையொன்றில் உட்கார்ந்திருந்தார்கள். அங்கேயே ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த கிராமபோன் இயந்திரம் கீதம் இசைத்துக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில் இதுபோன்ற ஏற்பாடுகள் எல்லாம் அத்தியாவசியமானவை என்று கருதப்படுகின்றனவை யல்லவா? ஸர் பிஹாரி

லாவின் வீட்டில் இந்தக் குறை இருக்குமானால், அது சிறக்குமா?

கூடியிருந்தவர்களில் சிலர் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தனர்; சிலர் வாரப் பதிப்புகளும் மாதப் பத்திரிகைகளும் படித்துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் அங்கே அழகாகத் தொகுத்து வைக்கப்பட்டிருந்த சித்திரங்களைப் புரட்டிப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஜகதீஷின் வரவை எதிர் நோக்கிய வண்ணம் ரமேஷ் வாசற்புறம் நின்று கொண்டிருந்தான். ஜகதீஷ் வந்ததும் அவனை அன்புடன் வரவேற்று உள்ளே அழைத்து வந்தான்; ஸர் பிஹாரிலாலுக்கு அவனை அறிமுகம் செய்து வைத்தான். அவர் அவனைக் கைகுலுக்கி வரவேற்றார். தம் அழைப்பை ஏற்றுத் தம் இல்லம் தேடி வந்து தம்மைக் கௌரவிக்க முன் வந்ததற்காக நன்றியும் தெரிவித்தார். பிறகு பக்கத்தில் இருந்த நாற்காலி ஒன்றைச் சுட்டிக் காட்டி அதில் உட்காருமாறு சொன்னார். அதற்குப் பின் தமது வேறு அலுவல்களைக் கவனிப்பதற்காக அங்கிருந்து சென்று விட்டார்.

சுகபால், சாந்திப் பிரியன், மனோஹர் மூவரும் முன்கூட்டியே விஜயம் செய்தவர்கள். ஜகதீஷுக்கு ஸர் பிஹாரிலால் அளிக்கும் கௌரவத்தைக் கண்டு ஏக காலத்தில் மூவரும் வியந்தனர். தங்களுக்கு ஏற்பட்ட வியப்பைப் பரிமாறிக் கொள்வதற்காக ஒருவரையொருவர் விரிந்த விழிகளுடன் பார்க்கவும் பார்த்தனர். 'இவனுக்கு இவ்வளவு உபசாரமா?' என்ற ஏளன நோக்கு அவர்களுடைய விழிகளில் அப்பொழுது தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

"இவனுக்கும் குஸுமாவின் பிறந்த நாள் விழா அழைப்புப் போயிருக்கிறதோ?"

என்னதான் வேண்டாமென்று நினைத்தாலும் வக்கீல் சுகபாலினால் இந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. எனவே, இரண்டு பேர் காதுகளில் விழும்படியாகச் சற்று இரைந்தே மேற்படி கேள்வியைக் கேட்டு வைத்தான்.

"ஏன்? இவர் அழைப்பு அனுப்புவதற்குத் தகுதி வாய்ந்தவர் இல்லையோ? என்னைப் போல் இவரும் அழையாத வீட்டு விருந்தாளியாகத்தான் வந்திருக்கிறாரோ?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர். உண்மையில் அன்றைய விருந்துக்கு ஜுகல்கிஷோருக்கு அழைப்புப் போகவில்லை. தனக்கு அழைப்பு வராமல் இருந்த பொழுதிலும் அதைப் பாராட்டாமல் அவன் மனோஹருடன் அழையாத விருந்தாளியாகத்தான் வந்திருந்தான்.

"இவனுக்கு இருக்கும் அந்தஸ்து என்ன?" என்று கேட்டான் சாந்திப் பிரியன்.

"இதைத் தீர்மானிப்பதற்கு நீயும் நானும் யார்?" என்று வெகு அலட்சியமாக எல்லோருடைய காதிலும் படும்படியாகவே ஜுகல்கிஷோர் கேட்டான். சுகபாலும் சாந்திப் பிரியனும் மேலே பேச்சுக் கொடுக்க விரும்பாமல் மௌனம் சாதித்தனர்.

உங்கள் நரம்புகள் தளர்ந்தால் வாழ்வே கசந்து விடுகிறது

உடல் இளைக்கிறது
சக்தி குறைகிறது

○●○

- ★ துரதிருஷ்டம்
- ★ கவலை
- ★ அதிக வேலை
- ★ தீராத அஜீரணம்

இவைகள் நரம்பு பலவீனத்தின் பொதுவான காரணங்கள்

- ★ மறதி
- ★ பயந்த தோற்றம்
- ★ மனப் பிராந்தி
- ★ தற்கொலை எண்ணங்கள்
- ★ பிரமை

இவைகள் நரம்பு பலவீனத்தின் பயங்கர விளைவுகள்

○●○

வைரம், கெம்பு, முத்து, முதலிய நவரத்தினங்களின் சேர்க்கை கொண்டதும் உலகப்பிரசித்தி பெற்றதுமான

நவரத்ன கல்பம்

உட்கொண்டு நரம்பு பலவீனத்தை விரட்டுங்கள்.



கவிராஜ் பண்டிட்
துர்க்காதத்த சர்மா
வைத்திய வாசஸ்பதி
அவர்களால்
கண்டு பிடிக்கப் பட்டது

○●○

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

THE MANAGER:

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

Grams: 'NAVRATNA' Phone: 401



திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் உயர்தரப் பள்ளியின் புதிய ஹாஸ்டல் திறப்பு விழா அக்டோபர் மாதம் எட்டாந் தேதி வெகு சிறப்பாக நடந்தேறியது. பள்ளிக் கூட நிர்வாகக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் நல்வரவு கூறினார். தேருஜியின் அருமை மனைவி கமலா தேருவின் ஞாபகார்த்தமாக எழுந்துள்ள ஹாஸ்டலை டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் திறந்து வைத்தார். தேசிய பெண்கள் பள்ளியின் காரியதரிசி ஸ்ரீ என். கே. திருமலாச்சாரியார் கமலா தேரு ஹாஸ்டல் கட்டி முடித்த விதத்தை விளக்கிக் கூறினார். திறப்பு விழாவுக்குச் சென்னை கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். மேற்படி விழாக் காட்சிகள் சிலவற்றை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

அழைப்பு அனுப்பப்பட்டிருந்த விருந்தாளிகள் அனைவரும் வந்து சேர்ந்துவிடவே, குஸுமாவும் வந்து சேர்ந்தாள். எல்லோரும் அவளுக்குத் தங்கள் வாழ்த்துக்களைக் கூறினர். ரமேஷும் ஜகதீஷும் சற்றுத் தூரத்தில் தனியாக உட்கார்ந்திருந்தனர். வேலைக்காரர்கள் வந்து ஒவ்வொருவருக்கும் எதிரே ஒவ்வொரு சிறிய மேஜையை வைத்தனர். பிறகு இனிப்பு, காரம், பழம் முதலிய தின்பண்டங்கள் வைத்திருந்த தட்டுக்களை ஒவ்வொரு மேஜையின் மீதும் கொண்டு வந்து வைத்தனர்.

குஸுமா எழுந்து ரமேஷும் ஜகதீஷும் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்றாள். அவர்களுக்கு அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து தனித் தனி ஜாடிகளில் இருந்த பாலையும் தேநீரையும் கலந்து தன் கையாலேயே தேநீர் தயாரித்தாள். பிறகு தயாரித்த தேநீரைக் கோப்பைகளில் ஊற்றிய வாறே ரமேஷைப் பார்த்து, "ஏன், ரமேஷ்! இவர்தான் உங்கள் நண்பர் ஜகதீஷோ?" என்று ஆவல் ததும்பக் கேட்டாள்.

"ஆமாம்!" என்று சுருக்கமாகப் பதில் அளித்தான் ரமேஷ்.

"அம்மா! என் வாழ்த்துக்களைத் தங்களுக்குத் தெரிவிக்க இதுவரை எனக்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. அதனால் இப்பொழுது பிரத்தியேகமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்ளவும்!" என்று வெகு நாகரிகமாகத் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தான் ஜகதீஷ்.

"உங்களையும் உங்கள் மனைவியையும் பற்றிப் புகழத் தொடங்கி விட்டால் எங்கள் ரமேஷுக்குக் கொஞ்சங்கூட அலுக்காது. அத்தகைய புகழுக்குப் பாத்திரமான உங்களை அறிமுகம் செய்து கொள்ளும் பாக்கியம் இன்றுதான் எனக்குக் கிடைத்தது. அதற்காக நான் மிகவும் பெருமை கொள்கிறேன்!" என்றாள் குஸுமா.

சுகபால், சாந்திப்பிரியன், மனோஹர் மூவருடைய பார்வையும் இம் மூவர்மீதே லயித்திருந்தது. ஒவ்வொரு ஆடவனுடைய உள்ளத்திலும் ஒரு பெண்ணின் கவனத்தைத் தன் பால் கவரவேண்டும் என்ற எண்ணமோ ஆவலோ உதிப்பது சகஜந்தான். ஆனால் அந்த எண்ணமும் ஆவலும் ஈடேறுவது என்பதுதான் சகஜமில்லை.

கூடியிருந்த ஒவ்வொருவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பேச்சு அரசியல் சூழ்நிலை சம்பந்தப் பட்டதாக மாறிவிட்டது. நாலு படித்தவர்கள் கூடிவிட்டால், இந்த நாட்களில் அரசியலையும், சமூகத்தையும் தவிர அவர்களுக்குப் பேச வேறு விஷயம் ஏது? இது தினசரி வாழ்வில் நாம் கண்கூடாகக் காணும் விஷயம்தானே?

சாதாரணமாக ஆரம்பித்த அவர்களது பேச்சில் சிறிது சிறிதாகச் சூடேறியது. அவர்

அவர்கள் தங்கள் தங்கள் கட்சியைக் கன கார சாரமாக எடுத்துக் கூறலாயினர். பேச்சு வர வரத் தடித்துச் சந்தைக் கடை இரைச்சலாக மாறியது. ஜகதீஷோ ரமேஷோ அந்தப் பேச்சில் பங்கு பற்ற வில்லை. ஸர் பிஹாரி லாலுக்கும் பிராணலாலுக்கும் அந்தச் சம் பாஷணை வெகு காரசாரமாகப் பட்டது. ஆயினும் அவர்கள் என்ன செய்ய முடியும்? வந்திருந்த விருந்தினர்களுக்கு 'இந்தப் பேச் செல்லாம் இங்கே வேண்டாம்!' என்று சொல்லி வாய்ப் பூட்டுப் போடலாமா? அப் படிச் செய்வது அழகாகுமா அல்லது நாக ரிகச் செயலாகத் தான் கருதப்படுமா?

பேச்சுப் போகும் போக்கைக் கவனித்த பிராணலால் அரசியல் பேச்சு அடிதடியில் கொண்டு வந்து விட்டு விடுமோ என்று அஞ்சினர். அதனல் சட்டென்று எழுந்து ஜக தீஷைப் பார்த்து, "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. அதனல் நான் அவசர மாகப் புறப்பட வேண்டி யிருக்கிறது. நீங்கள் என்னுடன் ஆலைக் காரியாலயத்துக்கு வர முடியுமா?" என்று கேட்டார். பிறகு, "நீங்கள் கூடக் கொஞ்ச நேரத்தில் ஆலைக்கு வர வேண்டும். நாம் ஏற்கெனவே நிர் மானித்த பிரகாரம் வேலை நிறுத்தத்தைப் பொறுத்த வரை நாம் இன்று ஒரு முடிவுக்கு வந்து விடுவது தானே நல்லது?" என்று மஹேஹரையும் சுகபாலையும் பார்த்துக் கூறினர். பிராணலால் நடுவில் இப்படிக் குறுக்கிட்டு விடவே, அரசியல் பேச்சு அந்த நேரத்துக்கு அப்படியே ஸ்தம்பித்து விட்டது.

பிராணலால் தன்னை எதற்காக அழைக் கிருர் என்ற விஷயம் ஜகதீஷுக்கு விளங்க வில்லை. இருந்தாலும் பேசாமல் யோசனை செய்த வண்ணம் தயங்கியவாறே அவன் அவரைப் பின் தொடர்ந்தான்.

ஜகதீஷும் பிராணலாலும் ஆலைக்குப் போய் விட்டனர். அவர்கள் சென்ற பிறகு வந்திருந்த விருந்தினர்களும் ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர். அவர்களில் பலர் ஆலைக்குப் போக வேண்டிய வர்கள். ஏனெனில் அன்றே வேலை நிறுத்தம் சம்பந்தமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்து விட வேண்டும் என்று அவர்கள் திட்ட மிட்டிருந்தார்கள் அல்லவா?

பிராணலால் வண்டியிலேயே ஜகதீஷைப் பரீக்ஷித்துப் பார்த்து விட்டார். பத்திரிகை நடத்துவதற்கு அத்தகைய அறிவாளியான மனிதன் தேவைதான் என்ற முடிவுக்கும் அவர் வந்து விட்டார். பிராணலாலுக்குப் பத்திரிகை எந்த நீதியைக் கடைப்பிடிப்ப தாக இருக்க வேண்டும், எந்தக் கொள்கையை ஆதரிப்பதாக இருக்க வேண்டும் என்பதை யெல்லாம் பற்றி அநுபவம் பற்ருது. ஆலைத் தொழிலாளிகளைப் பற்றித் தோன்றியதை எழுதலாம். வேலை வெட்டியின்றிப் பிறர் வேலையைக் கெடுப்பதெற்கென்று 'நாங்கள் தலைவர்கள்' என்று சொல்லிக் கொண்டு வரும் ஆசாமிகளை மட்டம் தட்டலாம். இம் மாதிரியான இன்னும் பல விஷயங்களுக்குப் பத்திரிகையை உபயோகப்படுத்திக் கொள்ள லாம் என்பது போன்ற எண்ணங்கள்தான் அவர் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தன.

ஆலையில் அவருக்கென்று ஒரு அழகிய பெரிய அறை கொடுக்கப்பட்டிருந்தது. அவ் வறையில் அவர் மட்டுமே தான் தனியாக உட்காருவது வழக்கம். தமது அறையை அடைந்ததும் அவர் மெத்தை தைத்த நாற் காலி ஒன்றில் அமர்ந்தார். பிறகு தமக்கு எதிர்த்தாற் போலிருந்த நாற்காலியில் ஜகதீஷை உட்கார வைத்தார். அடுத்த கணம் மணியை அடித்து வேலைக்காரனைக் கூப்பிட்டார். அவன் வந்ததும், நான்கைந்து குமாஸ்தாக்களின் பெயர்களைச் சொல்லிக் கையோடு கூப்பிட்டு வருமாறு உத்தர விட்டார். வேலைக்காரன் சென்று குமாஸ் தாக்களுக்குத் தகவல் தெரிவித்து விட்டுத் திரும்புவதற்கு முன்பாகவே அவர் மறுபடி யும் மணியை அடித்தார். ஆனல் யாரும் வராமற் போகவே, இரண்டு மூன்று ஆட் களின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். அவர் குரலைக் கேட்ட ஒருவன் ஓடோடி வந்து கைகட்டி வாய் புதைத்து நின்ருன். பிராணலாலுக்கு அங்கே எத்தகைய செல் வாக்கு இருக்கிறது என்பதை அந்தக் காட்சி யைக் கண்டவர்கள்தான் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

"ஏண்டா! எல்லோரும் எங்கேடா போய்த் தொலைந்தீர்கள்?" என்று பிராண லால் சீறி விழுந்தார்.

"எசமான், இங்கே தான் இருந்தோம், எசமான்!" என்று கையைப் பிசைந்து கொண்டு பதில் அளித்தான் அவன்.

"வர வர உங்களுக்கும் துளிர்த்து விட்ட தடா. தொழிலாளிகளைப் போல் நீங்களும் வேலை நிறுத்தம், இலை நிறுத்தம் செய்யப் போகிறீர்களோ? அப்புறம் உங்கள் வயிற் றில் மண்தான். நினைவிருக்கட்டும்!"

தெய்வம் ஒன்று

★ நமக்கு இவ்வுலகத்தில் வேண்டியவை நீண்ட வயது, நோயின்மை அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற்றைத் தரும்படி தத்தம் குல தெய்வங்களை மன்றாடிக் கேட்க வேண்டும். எல்லாத் தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காண வேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானே கிடைக்கும்.

—கவியரசர் பாரதியார்.

பிராணலாலின் கர்ண கடூரமான சொற்களைக் கேட்டுக் கேட்டுப் பழகியிருந்த வேலைக்காரன் ஒன்றும் பதில் பேசவில்லை. பதில் பேசாததற்காக அவன் அவரிடம் வசவு வாங்கும்படியாகி விட்டது. பதில் பேசியிருந்தாலும் வசவுதான். எனவே, எந்த வகையில் வசவு வாங்கிக் கொண்டால் என்ன?

"ஏண்டா காட்டேறி மாதிரி நின்று கொண்டிருக்கிறாய்? சக்கு ஸேட் வீட்டிலிருந்து யாராவது வந்தார்களா? சங்கரராம் டெலிபோனில் ஏதாவது சொன்னாரா?" என்று குரலில் சீற்றம் தொனிக்க மறுபடியும் கேட்டார் பிரரணலால்.

சக்கு ஸேட்டும் சங்கரராமும் ஆலை உலகத்தில் மிகமிகப் பிரசித்தமான பேர்வழிகள். அவர்களைத் தெரியாதவர்கள் தொழில் துறையில் யாருமே இருக்க முடியாது.

"சக்கு ஸேட்டின் வீட்டிலிருந்து ஆள் வந்து உட்கார்ந்திருக்குது. சங்கர ராம் ஐயா வீட்டிலிருந்து டெலிபோன் வந்தது. நீங்கள் வந்ததும் தெரியப்படுத்தச் சொல்லியிருக்காங்க!" என்று மிகவும் அடக்கமான குரலில் பதில் அளித்தான் வேலைக்காரன்.

"ஏண்டா, உன் வாயில் என்ன கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது? நான் வந்ததும் இதைச் சொல்வதற்கென்னடா? சரி, சரி! போய் வந்திருக்கும் ஆசாமியை இங்கே அழைத்து வா!" என்றார் பிராணலால்.


சக்கு ஸேட்டின் குமாஸ்தா வந்ததும் அவருடன் வியாபார விஷயமாகப் பேசினார். தம் குமாஸ்தாக்களுடன் காரியாலய சம்பந்தமான காரியங்களைப் பற்றி விசாரித்தார். பிறகு சங்கர ராமுடன் டெலிபோனில் மார்க்கெட் நிலவரத்தைப் பற்றியும் வியாபார விஷயத்தைப் பற்றியும் பேசினார். அப்புறம் தொழிலாளிகளின் வேலை நிறுத்தம் சம்பந்தமாகவும் ஏதேதோ பேச்சு நடந்தது.

ஜகதீஷ் எத்தனை நேரம்தான் சும்மா பேசாமல் உட்கார்ந்திருப்பான்? வெளிநாட்டு வியாபார முறையைப் பற்றியும் உள்நாட்டு வியாபார முறையைப் பற்றியும் சிந்திக்கலானான். பிராணலாலின் அலுவல்களைக் கவனித்த அவனுக்குப் பிராணலால் பலே பேர்வழி என்று தோன்றியது. இயந்திரத்தைப் போலவே தம் அலுவல்களை அலுக்காமல் சலிக்காமல் கவனிக்கும் இவர் அபாரக் கைகாரர்தான் என்று மனத்துள் வியந்தான். அரை மணி நேரம் காக்கவைத்த பிறகுதான் பிராணலாலுக்கு ஜகதீஷுடன் பேச அவகாசம் கிடைத்தது.

"ஏன், சார்! இப்பொழுது உங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்!" என்று ஆரம்பித்தார் பிராணலால்.

ஜகதீஷுக்கு அவரிடம் சொல்லக் கூடியதென்று ஏதாவது விஷயம் இருந்தால் அல்லவா? பிராணலால் தன்னை எதற்காக இவ்வளவு தூரம் ஆலை வரைக்கும் அழைத்து வந்தார் என்பதே அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. அப்படியிருக்கும்பொழுது அவன் என்ன பேசுவான்? (தொடரும்)

சரியான சமரசம்!



தெம்பூட்டுகிறது

காலையில் உபயோகித்தால்!

மென்மை உணர்ச்சி

மணிக்கணக்காய் மாறுது!



காஷ்மீர் பொக்கே டேல் எவ்வளவு தெம்பூட்டுகிறது! அந்த மென்மை உணர்ச்சி மணிக் கணக்காக நீடிக் கிறது! ஈரத்தை உறிஞ்சி, அரிப்பும் புண் ணும் வராமல் தடுக்கிறது. குளுமை மணம், புத்துணர்ச்சி அளிக்கிறது.

கால்கேட் 1806 முதல்
தரத்துக்குப் பெயர்போனது

காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்

ஆண்கள் விரும்பும் நறுமணம்

CBG/13

போட்டியும் புதையலும்



எம். எஸ். மணி

தோழர் புஸ்வாணம் அவர்களைத் தெரிந்த அந்தப் பேட்டை வாசிகள் அனைவருக்கும் தோழர் புதையல் நாயகம் அவர்களையும் தெரிந்திருக்கும். சென்ற யுத்தத்தின் போது தனித்தனியே பழைய இரும்பு ஆணிகளிலும் பழைய கிராமபோன் ஊசிகளிலும் வியாபாரம் செய்து வந்த இருவரும் தொழில் பழக்கத்தினால் ஒன்றாகச் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் நட்பு தொடர்ந்து பெருகியது போல அவர்களுடைய கூட்டு வியாபாரமும் படர்ந்து தழைத்தது. பழைய ஆணிகள், பழைய கிராமபோன் ஊசிகள் இவற்றில் ஆரம்பித்த அவர்கள் கூட்டு வியாபாரம் இன்னும் பழைய இரும்புச் சாமான்கள், பழைய கிராமபோன் பிளேட்டுகள், பழைய மர அலமாரிகள், பழைய கண்ணாடி புட்டிகள், பழைய தோல் பைகள் இவைகளில் பரவி, பழைய பாய், தலைகாணிகள், பழைய புடவை வேஷ்டிகள் வரை போய் நின்றது.

வியாபாரம் என்றால் எதையும் செய்யலாம் என்ற அனுபவ நோக்குள்ள தோழர் புஸ்வாணத்தையும் தோழர் புதையல் நாயகத்தையும் பார்த்து அந்தப் பேட்டை வாசிகள் முதலில் சிரித்தாலும், மேற்படி இரு நண்பர்களும் இந்தப் பழைய வியாபாரத்தின் மூலமாகவே சில காலத்துக்குள் அதே பேட்டையில் இரு பழைய வீடுகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள நேர்ந்த போது அவர்கள் சிரிப்பு சிந்தனையாக மாறியது. அடுத்த மாதமே அந்த வீடுகளில் ஒன்றில் "புஸ்வாணம் அண்டு புதையல் நாயகம் கம்பெனி" என்ற கொட்டை எழுத்துக்களைக் கொண்ட பளபளப்பான போர்டு ஒன்று அழுத்தலாக அசைந்தாடுவதைக் கண்டதும் அவர்கள் சிந்தனை ஆவலாக உருவெடுத்தது.

ஏன், நாமும் புஸ்வாணத்தையும் புதையல் நாயகத்தையும் போலச் சாமர்த்தியமாகச் சம்பாதிக்கக் கூடாது என்று பலருக்குத் தோன்றியது. ஆனால் யோசித்துப் பார்த்த போது வியாபாரம் என்பது என்ன, அதை எப்படி ஆரம்பிப்பது, எங்கே நடத்துவது, எப்பொழுது முடிப்பது என்ற, நடைமுறைக் கேள்விகளோடு, வியாபாரத்தைத் தொடங்குவதற்கே பணம் என்ற பண்டம் எங்கே போய் ஒளிந்து கொண்டிருக்கிறது என்ற பொருளாதாரப் பிரச்னையும் கூடவே எழுந்தது. ஆகையால் அவர்கள் மனத்தில் எழுந்த யோசனையை அடி வயிற்றிலேயே அமுக்கி விட்டு மேற்கொண்டு அப்பழைய வீடுகள் இரண்டும் துரிதமாகப் புதிப்பிக்கப்படுவதை ஆச்சரியத்துடன் நோக்கி விட்டு ஆயாசத்துடன் சென்றார்கள். ஆனால், பாவம்! அவர்களுக்குப் பணமில்லாமலேயே வியாபாரம் செய்து அவ் வியாபாரத்தில் லாபமில்லாமலேயே வீடும் வாங்கலாம் என்ற ரகசியம் தெரியாது! தெரிந்திருந்தால்தான் அவர்களும் புஸ்வாணத்தையும் புதையல் நாயகத்தையும் போல மாறிப் பார்ப்பவர்கள் கண்களுக்கு ஒரே பச்சையாகத் திகழ்ந்திருக்கலாமே!

உண்மையில் தோழர் புஸ்வாணம் புத்திசாலி. கையில் காலணா இல்லாமலேயே முதலில் தன் சுய வியாபாரத்தைத் தொடங்கிய அவர் வெகு சீக்கிரத்தில் தோழர் புதையல் நாயகத்திடம் கொஞ்சம் முதல் இருக்கிறது என்பதை அறிந்தார். உடனே ஏன் இருவரும் கூட்டாக வியாபாரம் செய்து துண்டு துண்டாக வரும் லாபத்தை ஒரேயடியாக அடிக்கக் கூடாது என்ற தன் யோசனையை நயமாக வெளியிட்டார். தன் வியாபாரத்தை விஸ்தரிப்பதில் ஆவலாயிருந்த புதையல் நாயகமும் அதற்குச் சம்மதித்தார். அதன் விளைவுதான் "புஸ்வாணம் அண்டு புதையல் நாயகம் கம்பெனி!" என்ற ஸ்தாபனத்தின் உதயம்.

கூட்டு வியாபாரம் ஆரம்பித்த முதலில் நல்ல லாபம் இருந்தபோது வருமான வரியை உத்தேசித்தும் போர்டில்லாமலேயே வியாபாரம் செய்தார்கள். பிறகு சில காலம் கழித்து லாபம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து முதலுக்கே (நிஜமான 'முதல்' இல்லை; பழமொழியில் வரும் 'முதல்'தான்) மோசம் வரும் போலிருந்த போதுதான் மேலே சொன்னபடி "புஸ்வாணம் அண்டு புதையல் நாயகம் கம்பெனி" என்ற பளபளப்பான போர்டைத் தொங்க விட்டார்கள்! முதலில் நஷ்டம் கொஞ்சமாக விருந்த போது போர்டும் சிறியதாக இருந்தது. பிறகு அடுத்த மாதம் நஷ்டம் அதிகமான போது சிறிய போர்டு மாறிப் பெரிய போர்டு ஒன்று புதிதாக வந்தது. பிறகு அடுத்த மாதம் நஷ்டம் பின்னும் அதிகரிக்கவே புதையல் நாயகம் புஸ்வாணத்திடம் "போர்டை இன்னும் பெரிதாக மாற்ற வேண்டுமா?" என்று கவலையுடன் கேட்ட



போது, புஸ்வாணம் "ஆமாம்!" என்று கலங்காமல் பதிலளித்தார். மேற்கொண்டு மூன்று மாதங்களுக்குப் பின் அவர்களுக்கு வாடிக்கையாகப் போர்டுகள் எழுதும் பொன்னையா, புஸ்வாணத்தையும் புதையல் நாயகத்தையும் நோக்கி, "சாமி! நீங்கள் சொல்லுகிற அவ்வளவு பெரிய 'சைஸ்' போர்டு என்னால் எழுத முடியாது. அப்படி எழுதினாலும் அந்தப் போர்டு இந்தத் தெருவுக்குள் நுழையாது!" என்று தீர்மானமாகச் சொன்னான். அப்போது தான் புஸ் வாணத்துக்கு இந்த நிலைமை நீடிக்காது என்ற உண்மை விளங்கிற்று.

அப்போது தான் புஸ்வாணம் முதல் தடவையாக, "நான் ஒரு முட்டாள்" என்று தன்னைச் சலித்துக் கொண்டார். தன்னம்பிக்கை மிகவும் கொண்டுள்ள தன்னை அப்படிக் குறைத்துக் கூறிக் கொண்டது அவருக்குப் பிடிக்கவில்லை தான். இருந்தாலும் வாயிலிருந்து வந்து விட்டது. அதைத் தொடர்ந்து, "நான் ஒரு மடையன்" என்று புதையல் வாணமும் தன்னை நொந்து கொண்டார். சிறு வியாபாரம் செய்து கொண்டிருந்த தான் பெரிய வியாபாரத்தில் மாட்டிக் கொண்டு சங்கடப் படுகிறோமே யென்று புதையல் நாயகத்துக்கு உள்ளுக்குள் வருத்தம்.

சில விநாடிகள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். போர்டு எழுதும் பொன்னையா இவர்களைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய மனம் அவ்வளவு பெரிய போர்டை அந்தத் தெருவுக்குள் எப்படித் திருப்பிக் கொண்டு வருவது என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தது. அப்படி இந்தத் தடவை சமாளித்து விட்டாலும் அடுத்த மாதம் இன்னும் பெரிய போர்டு எழுதும்படி ஆர்டர் கொடுத்தால் ஒன்று 'முடியாது' என்று சொல்லி விட வேண்டும்; அல்லது அவர்கள் அந்தத் தெரு முனையிலிருக்கும் வீட்டை வாங்கி இடித்து விட்டு வழி செய்தால் தான் போர்டு அந்தத் தெருவில் சுலபமாக நுழையும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட வேண்டும் என்று அவர் மனம் தீர்மானித்துக் கொண்டிருந்தது.

மேற்கொண்டு சில விநாடிகள் நிசப்தம் நிலவியது! திடீரென்று மேஜையின் மீது ஒரு குத்து விட்டார் புஸ்வாணம். கவலைப் பட்டுக் கொண்டிருந்த பொன்னையாவும் புதையல் நாயகமும் திடுக்கிட்டனர். குத்து விட்டதும் பொன்னையாவைப் பார்த்து புஸ்வாணம், "அப்பனே! பொன்னையா! தெருவில் போர்டு எப்படி நுழையும் என்று கவலைப்பட வேண்டாம்! ஏனென்றால் இன்னும் பெரிய போர்டு வேண்டியதில்லை! ஆனால் சிறியதாக 'புஸ்வாணம் புதையல் போட்டி' என்று அழகான ஒரு போர்டு நாளைக் காலைக்குள் எழுதிக் கொண்டு வா! போ சீக்கிரம்!" என்று விரட்டினார்.

புஸ்வாணத்தை ஆச்சரியத்துடன் நோக்கிப் புதையல் நாயகம் "புஸ்வாணம்! நீ சொன்னது, செய்யப் போவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே!" என்று பரிவுடன் கேட்டார். வெற்றிப் புன்னகை ஒன்றைச் சொரிந்து கொண்டே புஸ்வாணம் புதையல் நாயகத்தை நோக்கி, "நண்பரே! சற்று முன்பு என்னை நான் என்னவென்று கடிந்து கொண்டேன்?" என்று கேட்டார்.

"முட்டாள் என்று!" எனப் பதிலளித்தார் புதையல் நாயகம், புரியாமல்.


"உங்களை நீங்கள் என்னவென்று நொந்து கொண்டீர்கள்?" என்று மறுபடியும் கேட்டார் புஸ்வாணம்.

"மடையன் என்று!" எனக்கூறி மேலும் விழித்தார் புதையல் நாயகம்.

"அந்த இரண்டு வார்த்தைகளின் அர்த்தமும் நாம் இருவரும் புத்திசாலிகள்——"

"——இல்லை என்பதை நன்றாக வெளிப்படுத்துகிறது" என்று அடித்துக் கூறிய

அவர் யோசனை!



புதையல் நாயகம், "அதற்கும் புஸ்வாணப் புதையல் போட்டிக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?" என்று கேட்டார்.

"அது தான் நம் புதிய வியாபாரத்துக்கு முதல்!" என்று கூறிப் புஸ்வாணம் மேலும் புதையல் நாயகத்தை நோக்கி, "நான் சொல்லப் போவதை எழுதிக் கொள்ளுங்கள்!" என்று தொடர்ந்து கூறினர்.

இன்னும் ஒன்றும் புரியாமல் காகிதத்தையும் பென்சிலையும் எடுத்து வைத்துக் கொண்டு எழுத வாரம்பித்தார் புதையல் நாயகம். ஆரம்பத்தில் சலிப்புடனும் சுளிப்புடனும் இருந்த அவர் முகம் புஸ்வாணம் சொன்னதை இரண்டு வரிகள் எழுதியதும் அவர் முகம் புன்னகையை வீசி நன்றியைக் கொட்டியது. இன்னும் நாலு வரிகள் எழுதிய பிறகு அவர் முகம் அதிக சந்தோஷத்தை வெளிப்படுத்தியதுடன் அவர் வாயும், "ஆஹா! ஆஹா!" என்று கோஷித்தது. புஸ்வாணம் சொன்னதை யெல்லாம் புதையல் நாயகம் எழுதி முடித்தபோது அவர் கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின!

புஸ்வாணம் திடீர் என்று சொன்னதும் புதையல் நாயகம் அவசரமாக எழுதிக்கொண்டதுமான வரிகள் இவைகள்தாம்:—

1. இவர் புத்திசாலி அல்ல என்பது நிச்சயம்......முட்டாள்—மடையன்.

2. எட்டுத் திசைகளில் ஒன்று......வட மேற்கு — தென் கிழக்கு.

○ ✶ ○ ✶ ○ ✶ ○ ✶ ○ ✶ ○ ★ ○

ஏன் தொலையவில்லை?

பாரத உள்நாட்டு அமைச்சர் திரு கைலாச நாத கட்ஜு அவர்கள் அண்மையில் "பரீட்சைகள் ஒழிக!" என்று முழங்கினர்.

ஏற்கெனவே முதலமைச்சர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் நமது கல்வி முறை மகா மட்டமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தங்களது இருபது வருட மாறாத கொள்கை அகில பாரதத் தலைவர்களாலும் ஒப்புக் கொள்ளப் பட்டமை பற்றித் தங்களைவிட நான் மகிழ்வு கொள்கிறேன், தங்களது கொள்கையை ஆதரிப்பவன் என்ற முறையில்.

ஆமாம். ஜவாஹரே சர்வ மட்டம் என்று குறிப்பிட்ட பின்னும் இந்தக் கல்வி முறை ஏன் தொலையவில்லை!

ராஜமந்திரி
14—10—54 **கே. சி. லட்சுமி நாராயணன்**

○ ✶ ○ ✶ ○ ★ ○ ✶ ○ ★ ○ ★ ○

3. வயிற்று வலிக்காரர்கள் இதைச் சாப்பிடுவார்கள்.........வென்னீர்—சோடா.

4. ஒருவர் பேசமுடியவில்லை என்றால் அவருக்கு இது என்று அர்த்தம்......தொண்டைக் கட்டு—பல்வலி.

5. இது இல்லாமல் வீடு கட்ட முடியாது...... அஸ்திவாரம்—மணைக்கட்டு.

6. இது வீடுகளில் சாதாரணமாய் வசிக்காது......புலி — காண்டாமிருகம்.

7. இது ஆகாயத்தில் பறக்கும்...ஏரோப்ளேன்—காக்காய்.



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களுக்கு அதிகப்படி சக்தியை... துரிதமாக அளிக்கிறது!



உங்களுடைய சிறு பிள்ளைகளுக்கு அவர்களுடைய வாழ்நாளில் ஏற்படும் சங்கடங்களைச் சமாளிக்க உதவிபுரியுங்கள். ருஜு™வான ஆரோக்கிய டானிக், வாட்டர்பரீஸ் காம்பவுண்டின் மூலம் அவர்களை தேக சௌக்யமுள்ளவர்களாக இருக்கச் செய்யுங்கள்.

தினசரி உட்கொண்டால், நாவிற்கினிய வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் கடுமையான வேலையிலிருந்தும், விளையாட்டிலிருந்தும் அடைந்த சிறுவர்களுடைய அதிக களைப்பை அகற்ற அதிகப்படிச் சக்தியை அளிக்கிறது. மேலும் அது அவர்களை இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் காப்பாற்றுகிறது. அதிகப்படி ஆகாரமாக உட்கொள்ளப்படும் இம் மருந்து திடமான வளர்ச்சிக்குத் தேவையான ஜீவாதார போஷணையை அவர்களுக்கு அளிக்கிறது. தினசரி வேலைக்கும் விளையாட்டுக்கும் அது உரமான வீரியத்தை அளிக்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டிலிருந்து உங்களுடைய சிறு பிள்ளைகள் அதிகப்படிச் சக்தியைப் பெறுவர்...உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு ருஜு™வான ஆரோக்கிய டானிக் அதுவே!



ஆரோக்கியத்தைத் தரும்
வாட்டர்பரீஸ் காம்பவுண்டை
உங்களை சௌக்யமாகவைக்க உட்கொள்ளுங்கள்

B.I.S.N. CO. LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 நவம்பர் 8
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 நவம்பர் 9

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

சென்னையிலிருந்து 8-11-54 : பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

நாகப்பட்டினத்திலிருந்து 9-11-54 : பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் காலை 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 8-11-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

மதுரா கம்பெனி லிமிடெட்
முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாருமே எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுபாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. மிகக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிப்பு, எரிச்சல் வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாத வரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் கண்ட ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழு வழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.



அன்பு மலர்ந்தது

எஸ்.வி.எஸ்

"சரஸா! சரஸா!"

ஐந்து நிமிஷம் சென்றது. மீண்டும், "சரஸா! சரஸா!" என்று குரல் வந்தது.

"இதோ, வந்து விட்டேன்!"

"சரஸா! சரஸா!"

"'வந்து விட்டேன்! வந்து விட்டேன்!' என்றுதான் சொல்லுகிறேனே! அதற்குள் இப்படி ஒரே அடியாய்ப் பறக்கிறீர்களே!"

சரஸா, உண்மையிலேயே வந்து விட்டாள்.

எங்கே!

நோய்ப் படுக்கையில் கிடக்கும் தன் கணவன் அருகிலேதான்!

ஒரு காலத்தில் அவள் தன் கணவன்மீது எவ்வளவு அன்போடிருந்தாள். ஏன் என்றால் எண்ணெயாக நிற்பாளே! கணவன் முகம் கோணாமல், மனம் கனியாமல் நடந்து கொள்வதுதான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்றெல்லாம் எண்ணி வந்தாளே! அப்படியெல்லாம் வாழ்ந்தவள் இன்று ஏன் இப்படியிருக்கிறாள்! நோய் வாய்ப்பட்டிருக்கும் கணவன் அத்தனை தடவை கூப்பிடும்போது சற்றும் லட்சியம் செய்யாமல் மெள்ள வருவானேன்!

இதையெல்லாம் யோசிக்கும் போது சந்தானத்துக்குத் தவறெல்லாம் தன் மேல்தான் என்பது தெரியாமல் இல்லை! ஆனாலும், சரஸா இவ்வளவு தாமதித்து வந்தது அவனுக்கு எரிச்சலை மூட்டியது. "ஏன், கூப்பிட்டவுடன் வருவதற்கு என்ன கேடாம்!" என்று வெறுப்புடன் அவளைக் கேட்டான்.

"பாதிமா பேகத்தைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தேன்!" என்றாள்.

"உனக்கு எப்பொழுது பார்த்தாலும் பாதிமா பேகத்தின் நினைவுதான். இங்கு நான் ஒருவன் கிடக்கிறேனே என்ற உணர்ச்சியே உனக்குக் கிடையாது!" என்று ஆத்திரத்துடன் கூறினான்.

இதைக் கேட்கச் சரஸாவுக்கு எரிச்சலாக இருந்தது. "இதைவிட என்னால் உங்களைக் கவனித்துக் கொள்ள முடியாது!" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அப்பால் செல்ல முயன்றாள். அவள் கண்களில் நீர் முட்டி நின்றது.

"வந்தது வந்தாய், எனக்கு ஒரு வாய் ஜலம் கொடுத்து விட்டுப் போ. தொண்டை வறள்கிறது. அதற்குத்தான் உன்னைக் கூப்பிட்டேன்!" என்றான். அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தண்ணீரைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

* * *

சந்தானம் கலியாணம் செய்து கொள்வதற்கு முன் மனைவி இப்படி இருக்க வேண்டும், அப்படியிருக்க வேண்டும் என்று என்னவெல்லாமோ கற்பனை செய்து வாழ்ந்து வந்தான். ஆம், மிகவும் முற்போக்கு எண்ணம் கொண்டவளாகவும், பாரதியாரின் புதுமைப் பெண்ணாகவும் திகழ வேண்டும் என்று எல்லாம் எண்ணினான். எண்ணியபடி எதுதான் நடக்கிறது! சரஸா, அவன் கற்பனைக் காதலிக்கு முற்றும் மாறானவளாக விளங்கினாள். ஆனால் ஒரு குணத்தைப் பாராட்ட வேண்டும் சந்தானத்தினிடம். இப்படிச் சுத்த கர்நாடகமான பெண் மனைவியாக வாய்த்தாளே என்று அவள் மீது எரிந்து விழுவது, ஒதுக்கி வைப்பது, துன்புறுத்துவது என்ற காரியங்களில் ஈடுபடவில்லை. தான் நினைத்தால் ஆகாததும் ஒன்று இருக்கக்கூடுமா என்றே நினைத்தான். மனம் உண்டானால் மார்க்கமும் உண்டு என்று அவளை நவநாகரிக நாரீமணியாக்கி விடுவது என்று முடிவு செய்து, அந்தப் பணியில் ஈடுபட்டான்.

வாரத்தில் இரண்டு நாள் சினிமாவுக்கு அழைத்துப் போவான். புதுப் புதுப் புஸ்தகங்கள் வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்வான். பல நண்பர்



"அதென்ன? நான் சொன்ன ஆச்சரியமான விஷயத்துக்கு உங்கள் முகத்தில் கொஞ்சமேனும் ஆச்சரியத்தினுடைய அறிகுறியையே காணுமே!"

"ஓகோ! அதைத்தான் தேடிக் கொண்டிருந்தீரா! என்னுடைய தலைக்கு மேலே பாரும். இருக்கும்!"

களை வரவழைத்து விருந்தளித்து அவர்களுக்குத் தன் மனைவியை அறிமுகப் படுத்திக் கூச்சம் ஏது மின்றிச் சர்வசாதாரணமாகப் பழகவழக்கப்படுத்தினான். பின்னர் தன் நண்பர்களுடன் அன்றன்றைய அரசியல் பிரச்னைகளை அலசும்போது தன் மனைவி சரளாவையும் கூப்பிட்டு, "சரளா, இதில் உன் அபிப்பிராயம் என்ன!" என்று கேட்பான். விழாப் பிரசங்கங்களுக்கு அழைத்துச் செல்வான். இப்படி அவளைப் பல துறைகளில் ஆர்வமும் ஈடுபாடும் கொள்ளச் செய்தான். இவைகளில் எல்லாம் அவன் மனைவி சரளா முன்னேற முன்னேற, சந்தானம் உள்ளம் பூரிப்படைந்தான்.

"சரளா, மாட்டைக் தொட்டியில் கட்டிப் போட்டு, பால் முழுவதையும் மனிதன் கறந்து எடுத்துக்கொள்ளுகிறானே, அதுபோல் பெண்ணை வீட்டுக்குள்ளே அடைத்து வைத்து, கணவனே தெய்வம், எல்லாம் என்று நினைக்கும்படி செய்து அவளைத் தன் அடிமையாக ஆக்கிக்கொள்ள விரும்பும் பத்தாம் பசலி ஆண் வர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல நான்! கணவன் —மனைவி என்ற அன்பைத் தவிரவும் தேச பக்தி, சமுதாயத் தொண்டு, இன்னும் எத்தனையோ விஷயங்களில் சிரத்தையும் ஈடுபாடும் கொண்டு, கணவனுடைய காரியங்களில் கைகொடுக்க வேண்டும். அது தான் புதுமைப் பெண்ணின் லட்சணம். தேசத்தின் முன்னேற்றம் பெண்களின் கையில்தான் இருக்கிறது! அதனால்தான் உன்னை இவ்வளவு சிரமப்படுத்தினேன், சரளா!" என்று தழுதழுத்த குரலில் சொல்வான் சந்தானம்.

"இதற்குச் சிரமம் என்று பெயரா! நன்றாகச் சொன்னீர்கள்! கண் இழந்து கபோதியாகக் கிடந்த என்னை, கண் திறந்துவிட்டு உலகத்தைக் காண அல்லவா செய்திருக்கிறீர்கள்! உங்களைக் கணவனாகப் பெற்றதற்கு முன் ஜென்மத்தில் நான் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்று அளவு கடந்த நன்றியுணர்ச்சியுடன் கூறுவாள் அவன் அன்பு மனைவி சரளா.

"போதுமே, உன் பத்தாம் பசலி வார்த்தைகள்! இதுதான் கூடாது என்று நான் சொல்லுவது! நான் என்ன பிரமாதமாகச் செய்து விட்டேன்! என் கடமையைத்தானே செய்தேன்!" என்பான்.

"ஆமாம், இதெல்லாம்தான் கடமையாக்கும்!" என்று முகத்தைத் திருப்பிக் கொள்வாள் சரளா பொய்க் கோபத்துடன்.

இப்படி யெல்லாம் ஆரம்பமான இந்தப் புது மாறுதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, முன்னேற்றப் பாதையில் முன்னால் சரளா நடக்கப் பின்னால் சந்தானம் நடக்கும் அளவுக்கு வந்து சேர்ந்தது!

• • •

சந்தானம் வீட்டில் நாள் தவறாமல் யாராவது வந்த வண்ண மிருப்பார்கள். நடன கோஷ்டிகள், சங்கீத விற்பன்னர்கள், அயல் நாட்டுத் தூதர்கள், இலக்கிய விற்பன்னர்கள்—இப்படிப் பல துறையிலிருப்பவர்கள் சந்தானம்—சரளாவின் பங்களாவில்தான் இறங்குவார்கள். எங்கேயாகிலும் பஞ்சம், பட்டினி, வெள்ளச் சேதம், புயல் சேதம் என்றால், நிதி வசூலிக்க வருபவர்கள் முதலில் சந்தானம்—சரளா வீட்டில் தான் வசூல் ஆரம்பிப்பார்கள்!

இவற்றினால் சந்தானத்தை விட சரளாவின் பெயரும் புகழும் அதிகரித்தது. சரளாவின் புன்னகை தவழும் வதனமும், இனிய பேச்சும், தாராள மனப்பான்மையும் பற்றியே பேசுவார்கள், நாலுபேர் கூடிவிட்டால். சந்தானத்திடமே கூடக் கூறுவார்கள். முதலில், சந்தானம் இவை யாவும் பெருமையாகவே கருதினான்!

நாளாக நாளாக, சந்தானம், வருவாயை விட வீட்டுச் செலவு அளவுக்கு மிஞ்சியேறிப் போய் வருவதை யுணர்ந்தான். செலவைக் கட்டுப் படுத்த முடியவில்லை. செலவுக்கு ஈடு கொடுக்கக் கடன் வாங்க வேண்டியதாகி விட்டது. கடன் தொல்லை வேறு சேர்ந்து கொண்டது இரவும் பகலும் இனம் தெரியாத வேதனை சந்தானத்தைப் பற்றிக் கொண்டது. சரளாவின் புற உலகத் தொடர்பு அதிகமாகி வந்தது. வீட்டிலிருக்கும் நாழிகை குறைந்து வந்தது. ஒவ்வொரு தரம் வெளியே செல்லும் போதும், சந்தானத்தின் உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து நீண்ட பெரு மூச்சு வெளிப்பட லாயிற்று.

உள்ளத்தில் வேதனை யுண்டானாலும் வெளியுலக உல்லாச வாழ்க்கையில், கேளிக்கைகளில் பற்றேது! அவன் தன் வெளியுலகத் தொடர்பைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளப் பார்த்தான். ஒருநாள் சரளா, "இன்றைக்கு நித்யானந்தர், டாக்டர் குணசேகரன் வீட்டுக்கு வருகிறாராம். 'மேல் நாட்டில் பாரத நாட்டுப் பண்பு' என்னும் பொருள் பற்றிப் பேசப் போகிறாராம். நீங்கள் வருகிறீர்களா!" என்று கேட்டாள்.

சந்தானம், "இல்லை; நான் வரவில்லை. நீ போய் விட்டு வா! எனக்குத் தலை வலிக்கிறது" என்று சொல்லித் தட்டிக் கழித்தான்.

இந்த நிலைமையில் சந்தானத்தின் நண்பர் ஒருவர் உயர்ந்த ஜாதி குட்டை நாய்க்குட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கி விட்டுப் போனார். "வேண்டாம்" என்று சந்தானம் எவ்வளவோ தடுத்துப் பார்த்தான். அவர் கேட்கவில்லை. பலாத்காரமாக நாய்க் குட்டியைச் சந்தானத்தின் தலையில் கட்டி விட்டுத்தான் போனார்.

நாய் வந்ததிலிருந்து, சரளாவுக்கு அவன் பராமரிப்புக்குரிய மற்றோர் விஷயமாகி விட்டது அது.

அவளுக்கு அந்த நாய்க்குட்டி ரொம்பவும் பிடித்து விட்டது. அதற்குப் பாதிமா பேகம் என்று பெயர் சூட்டினாள். அவள் எப்போது வெளியே சென்றாலும் பாதிமா பேகத்தையும் உடன் அழைத்துச் செல்லலானாள்.

சந்தானத்தின் மனோவேதனை நாளடைவில் அவன் உடலையும் பற்றிக் கொண்டது. க்ஷயரோகமாக மாறிப் படுத்த படுக்கையாகி விட்டான். அவனை நோய் ரொம்பவும் வருத்தியது. மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாத நிலையிலிருந்தான். நோயுற்ற இந்த நிலைமையில் தன் மனைவி அவனைக் கவனிக்க வேண்டும்; அவன் தேவைகளை யுணர்ந்து நடக்க வேண்டும் என்று அவன் ஏங்கினான். ஆனால் சரஸாவோ, ஓயாமல் விழாவென்றும், 'மீட்டிங்' என்றும், 'க்ளப்' என்றும் வெளியில் போய்க் கொண்டிருந்தாள். வீட்டுக்குள்ளிருந்த சற்று நாழிகையும் பாதிமா பேகத்தின் தேவைகளைக் கவனிக்கவே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது! இது சந்தானத்துக்கு அளவு கடந்த எரிச்சலை உண்டாக்கியது. கூடவே, சரஸாவின் இந்தப் போக்குக்குத் தானே அல்லவோ காரணம் என்று வேறு நினைத்து நினைத்து மனம் புழுங்கினான்.



* * *

அன்று சரஸா வெளியில் போகும்போது, "தண்ணீராகிலும் கொடுத்து விட்டுப் போ" என்று சந்தானம் சொன்னான் அல்லவா!

"தண்ணீர் கொடுக்கக்கூட நான்தான் வர வேண்டுமா! நர்ஸ் லட்சுமி எங்கே போய்த் தொலைந்தாள்!" என்று எரிச்சலோடு கேட்டாள் சரஸா.

"அவள் வீட்டுக்குப் போய் விட்டாள்!"

"என்ன! வீட்டுக்குப் போய் விட்டாளா! இந்த நேரத்திலா! ஏன்!"

"நான்தான் அவள் கணக்கைத் தீர்த்து அனுப்பி விட்டேன்! இனி மேல் வரமாட்டாள்!"

இதைக் கேட்டவுடன், சரஸாவின் தலை கிறுகிறு என்று சுழன்றது.

"என்ன! அனுப்பி விட்டீர்களா!"

"ஆமாம்; சரஸா! உன் செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடியாது. பின் என்ன செய்வது! என் செலவுகளைத் தானே குறைத்துக் கொள்ள வேண்டும். அதனால் என் தேவைகளைக் கவனித்து வந்த நர்ஸை அனுப்பி விட்டேன். இதைத் தவிர வேறு வழி!" என்றான்.

புண்பட்ட நெஞ்சில் வேலிட்டுக் குத்துவது போலிருந்தது. அவள் கண்களில் நீர் முட்டியது. அப்படியே ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் ஊற்றிக் கொடுத்து விட்டு, அப்புறம் சென்றாள். அப்போது அவள் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் பெருகிப் பூமியில் சிந்தின!

அவள் நெஞ்சத்தின் துயரத்துக்கு பாதிமாபேகம் தான் அனுதாபப் பட்டாற் போல் தோன்றியது!

* * *

அன்றைய தினத்திலிருந்து சரஸா தன் வெளியுலகத் தொடர்பைப் பெரிதும் குறைத்துக் கொள்ளத் தொடங்கினாள். பல கூட்டங்களுக்கு வர முடியாது என்று தெரிவித்து வந்தாள்! தோழிகள் அழைத்தால் தனக்கு வர இயலாது என்று தெரிவித்து விடுவாள். இப்படி ஒன்று இரண்டா! பல காரியங்களில் தன் தொடர்பை அறுத்துக் கொண்டு வந்தாள்!

ஆனால் நோய்ப் படுக்கையில் கிடந்த சந்தானம், காரணமின்றித் தன் சீரழிவுக்கு எல்லாம் காரணம் சரஸா என்று எண்ணி எரிந்து விழுவான். இருந்தாலும் சரஸா பொறுமையைக் கடைப் பிடித்து அவனுக்குத் தொண்டு செய்து வந்தாள். 'ஆம், முன்பு அவர் எவ்வளவு உற்சாகமாகத் தன்னுடன் பழகுவார். அப்படிப்பட்டவர் இன்று இப்படி மாறி விட்டாரே! இதற்குக் காரணம் அவர் நோய்தான்' என்று பொறுத்து வந்தாள்.

அவள் வாழ்க்கை வரவர இருண்டு வந்தது. அந்த இருளில் மின்னல்போல் மின்னி ஒளிவீசி அவளுக்கு ஆறுதல் அளித்தது பாதிமா பேகம்தான்!

பாதிமா மிகவும் நன்றியுள்ள பிராணி. அவளைக் கணப்பொழுதும் பிரியாது சுற்றிச் சுற்றி வரும். வெளியில் வாசலில் எங்கே போனாலும் சரஸா கூடவே பாதிமாவை அழைத்துச் செல்வாள்!

சந்தானம் நோய் குறைந்து, குணமாகும் வழியோ காணவில்லை. ஆனால் பணம் மட்டும் கரைந்து கொண்டே வந்தது. ஊரிலிருந்த நிலங்களில் பெரும் பகுதி விற்று விட்டான். சரஸாவின் செலவு குறைந்து விட்டாலும் மருந்துச் செலவு அதிகமாகி வந்தது! இந்த நிலையில் பணம் சம்பாதிக்க வழியில்லை. ஆகவே, செலவைக் குறைத்துத்தான் மிச்சப் படுத்தவேண்டும்! இப்படித் திட்டமிட்டு, வீட்டிலிருந்த இரண்டு சேவகர்களையும் அனுப்பி விட்டான். தினம் டாக்டர் தன்னை வந்து பார்க்க வேண்டாம் என்றும், சரஸா தன் உடல் நிலையை டாக்டரிடம் தெரிவித்து மருந்து வாங்கி வந்தால் போதும் என்றும் ஏற்பாடு செய்தான். ஆகவே, சரஸாவுக்கு வேலை அதிகமாகியது. மனம் கோணாமல் செய்து வந்தாள்!

இவ்வளவு செய்தும், சந்தானம் கொஞ்சமாகிலும் இரக்கத்துடன் அல்லது அனுதாபத்துடன் சரஸாவிடம் பேசவில்லை. ஆயினும் சரஸா, சந்தானத்தின் பழைய அன்பை நினைத்து நினைத்து, இந்தக் கொடுமைகளை யெல்லாம் சகித்து வந்தாள். மேலும் 'பணமில்லாத கொடுமை அவரை அப்படிப் படுத்துகிறது. நாம் கோபங்கொண்டு புண்ணியமில்லை' என்றே நினைத்து வந்தாள்!

* * *

டாக்டர் குணசேகரன் வீட்டில் நவராத்திரி விழாவுக்குச் சரஸாவை அழைத்திருந்தார்கள்.

சரஸா, தான் நல்ல நிலைமையிலிருந்த காலத்தில் கொண்டிருந்த பல பெரிய இடத்துச் சகவாசங்களை முற்றும் அறுத்துக் கொண்டு விட்டாள்.

ஆனாலும் டாக்டர் குணசேகரன் வீட்டுத் தொடர்பை மட்டும் அறுத்துக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் ஸ்ரீமதி குணசேகரத்துக்கும், சரஸாவுக்கும் இடையே யிருந்த நட்பு பணம், லௌகிக அந்தஸ்து முதலியவற்றிற்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ஆகவே, நவராத்திரி பொம்மைக் கொலு விழாவுக்கு ஸ்ரீமதி குணசேகரன் அழைப்பு அனுப்பியதும் சரஸாவினால் தட்டிக் கழிக்க முடியவில்லை.

ஆகவே, அன்று மாலை சரஸா வீட்டை விட்டு வெளியே புறப்பட்டபோது, தான் டாக்டர் குணசேகரம் வீட்டுக்குப் போய்விட்டு, அப்படியே சந்தானத்தைக் கவனிக்கும் டாக்டரின் வீட்டுக்கும் போய் மருந்து வாங்கிக்கொண்டு வருவதாகச் சந்தானத்தினிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

டாக்டர் குணசேகரம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது, அங்கே பல டாக்டர்களும், சமூகத் தொண்டில் ஈடுபட்டுள்ள பல மாதர்களும் பிரமாத சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார்கள்.

அதாவது, தீராத நோயில் ஈடுபட்டிருக்கும் ஒரு நோயாளியை விஷ மருந்தைக் கொடுத்துக் கொன்று விடுவது முறையா! தர்மமாகுமா! என்பது பற்றிச் சர்ச்சை நடந்து கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் சரஸா போய்ச் சேர்ந்ததும், 'பளிச்'சென்று அந்த விஷயத்தை அப்படியே நிறுத்தி ஒருவரை யொருவர் திருதிரு வென்று பார்த்து விழித்துக் கொண்டு நின்றனர்.

தன்னைக் கண்டதும் அமைதி நிலவியவுடன், சரஸாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. 'ஏன் சந்தர்ப்பம் அறியாமல் வந்து விட்டோமா! நம்மைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்திருப்பார்களோ! அதனால்தான் நிறுத்தி விட்டார்களோ!' இப்படிப் பலப் பல எண்ணினாள்.

"ஏன், நான் கேட்கக் கூடாத விஷயமோ! நான் வந்ததினால் உங்களுக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டு விட்டதோ!" என்று பணிவுடன் தன் வெறுப்பைக் கலந்தே கேட்டாள் சரஸா.

"சே, சே! அப்படி எல்லாம் இல்லை. நாங்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சு நீங்கள் இப்பொழுதிருக்கும் நிலையில் பேசலாகாது..."

"ஆம்; செல்வத்தின் அந்தஸ்திலிருந்து குறைந்து விட்டேனல்லவா! இனி உங்களுக்கு என்னைக் கண்டால் பிடிக்காதுதான். உங்கள் பேச்சில் நான் கலந்து கொள்ளக்கூடிய யோக்கியதை அற்றவளாகத்தான் போய் விட்டேன்..." என்று குத்தலாகவும், ஆற்றாமையோடும் பேசினாள்.

"பார்த்தாயா, சரஸா! நாங்கள் அப்படியெல்லாம் நினைத்துப் பேச்சை நிறுத்த வில்லை. உண்மையில் பேசிக் கொண்டிருந்த விஷயம் என்னவென்றால் சாவுடன் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியை அவனை அறியாமல் விஷம் கொடுத்துக் கொன்று விடுவது சரியா, அல்லது சாவு வரும் போது வந்து ஏற்றுக் கொள்ளட்டும் என்று சும்மா இயற்கையின் தயவில் விட்டு விடுவது சரியா என்று சர்ச்சை செய்து கொண்டிருந்தோம். உன் கணவர் படுத்த படுக்கையில் இருக்கும் இந்த நிலையில் உன் எதிரில் இப்பேச்சை அலசுவானேன் என்றுதான் பேச்சை 'டக்' என்று நிறுத்தினோம்" என்றாள் ஸ்ரீமதி குணசேகரம்.

"நிறுத்தினது தவறு என்றுதான் நான் சொல்வேன். இவ்விஷயமாக என்னைவிடச் சரியான அபிப்பிராயம் யார் சொல்லக் கூடும்! என் கணவர் படுத்த படுக்கையில் கிடக்கிறார். இந்நிலையில் இவ் விஷயமாக என் கருத்து என்னவாக இருக்கக்கூடுமோ அதுதானே, பெரும்பாலான பெண்களின் கருத்தாக இருக்க முடியும். ஆகவே, இவ்விஷயத்தில் என் அபிப்பிராயம் நீங்கள் நிச்சயம் கேட்டிருக்க வேண்டும். நான் வந்தது பற்றிச் சந்தோஷப்பட வேண்டியது போக அனாவசியமாக நிறுத்தி விட்டீர்கள்! ஆகவே இனி தொடருங்கள்!" என்றாள் சரஸா.

இந்தப் பேச்சைக் கேட்டதும் அப்படியே ஆச்சரியத்தில் மூழ்கினர். "சபாஷ், சரஸா!" என்று அவள் தைரியத்தைப் பாராட்டினர்.

"என்ன இருந்தாலும் படித்த பெண் என்றால் படித்த பெண்தான். எவ்வளவு தைரியமாக இந்தப் பிரச்னையை இந்த நிலையிலும் அலச முன்வருகிறாள்! புதுமைப் பெண் வாழ்க!" என்றார்கள்.

"என்னை வாழ்த்துவது ஒருபுற மிருக்கட்டும். டாக்டர் குணசேகரம் அபிப்பிராயம் என்ன!" என்று கேட்டாள் சரஸா.

பிறகு ஒவ்வொருவராகத் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லி வந்தார்கள். சிலர் குறுக்கே பாய்ந்து தங்கள் அபிப்பிராயங்களைக் கூறினார்கள். கடைசியில் சரஸா, "என் கணவர் படுத்த படுக்கையிலிருக்கிறார். நோயின் உபத்திரவம் நாளுக்கு நாள் அதிகமாவது போல் தோன்றுகிறதே தவிர குறைவதாகக் காணோம். மருந்துகளும் அவர் நோயைக் குறைப்பதாகக் காணோம். அவர் எதற்கெடுத்தாலும் என்மேல் எரிந்து விழுவதும், திட்டுவதும் இரவில் பத்து நிமிஷங்கூட நிம்மதியாய் இருக்க விடாமற் கத்துவதும் கொஞ்சமாகிலும் சகிக்கும்படியாக இல்லை. இருப்பினும் நான் டாக்டரிடம் போய் என் கணவர் ரொம்பவும் கஷ்டப்படுகிறார், எப்படியாவது அவரைச் சீக்கிரமாக மூட்டை கட்டி அனுப்பி விடுங்கள் என்று சொல்ல என் மனசு இடம் தராது. எந்தப் பாரதப் பெண்ணுக்கும் மனம் வராது. அதை ஒரு பெரிய பாதகமாகத்தான் நினைப்பாள்......அதற்கு மாறாக தன் கணவருக்குத் தொண்டு செய்யும் பேறுமிலும் தனக்கு என்றென்றும் இருக்கட்டும் என்றுதான் நினைப்பாள்!" என்றாள்.

இதைத் தொடர்ந்து இன்னும் கொஞ்ச நேரம் விவகாரம் நீடித்தது. சரஸா தனக்கு நேரமாகிறது என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டாள்.


• • •

தன் கணவரைக் கவனித்து வந்த டாக்டர் ஸ்ரீ பால் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். செல்லும் வழியெல்லாம் டாக்டர் குணசேகரம் வீட்டில் நிகழ்ந்த பேச்சைப் பற்றியே எண்ணிக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். இப்படி யோசனை செய்து கொண்டிருந்தபோது அவளுக்கு வலதுபுறத் தெருவிலிருந்து ஒரு கார் வந்து பாதிமா பேகத்தின் மீது ஏற விருந்தது. நல்ல வேளை, கார் ஓட்டியவர் திடீர் என்று 'பிரேக்' போட்டு நிறுத்தி நாய்க்கு உயிர்ப் பிச்சை யளித்தார். இல்லை—சரஸாவுக்கே உயிர்ப் பிச்சை யளித்தார் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த நாய்க்கு ஏதாவது ஏற்பட்டிருந்தால் தன் உயிரே போனாற்போல் சரஸா துடித்திருப்பாள். இப்பொழுது மட்டும் என்ன! ஒரு கண நேர ஆபத்தான கட்டத்தில் 'பாதிமா பேகம் சிக்கிக் கொண்டதால் ஏற்பட்ட துணுக்கம் சரஸாவுக்கு இன்னும் ஓயவில்லையே!

இப்படி நெஞ்சில் படபடப்புடனும் முகத்தில் சோகக் களையுடனும் டாக்டர் ஸ்ரீபால் வீட்டுக்குள் சரஸா நுழைந்தாள். சரஸாவின் மனநிலையைக் கண்டு, டாக்டர் வேறு விதமாக எண்ணிக் கொண்டார். சந்தானத்துக்கு இன்று இன்னும் உடம்பு அதிகமாகி விட்டதோ என்று நினைத்தார்.



அஜந்தா
சிகரெட்டுகள்
Ajanta
CIGARETTES
அசல் புகையிலை
இன்பத்திற்கு
தி ஹிந்து டொபாக்கோ அண்டு சிகரெட் கம்பெனி லிமிடெட்



தசைப் பிடிப்புகளை

எப்படி ஸ்லோன்ஸ்

லினமெண்ட் போக்குகிறது

நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்! ஸ்லோன்ஸ் ஆச்சரியகரமாக எப்படி இல்வாதத்தையும், நரம்பு வலியையும், கழுத்துப் பிடிப்பையும், தசைப் புண்களையும் போக்குகிறது என்பதை விஞ்ஞானம் தெரிவிக்கிறது. இன்பரா-ரெட் கிரணங்களை உபயோகித்து விஞ்ஞானிகள் சருமத்துக்கு அடியிலிருக்கும் இரத்தக் குழாய்களை போட்டோ எடுத்திருக்கிறார்கள். வலியுற்ற பாகங்களுக்கு ஸ்லோன்ஸ் அதிகமான இரத்த சப்ளை செய்து தசைகளை போஷித்துக் குணப்படுத்துகிறது. மகிழ்ச்சி தரும் நிம்மதியைத் தருவதற்கு ஸ்லோன்ஸ் இயற்கைக்கு உதவுகிறது. அதனால்தான் லினமெண்டுகளில் ஸ்லோனுக்கு சிறந்த பெயர்.

ஸ்லோன்ஸ் லினமெண்ட்



SLOAN'S LINIMENT



பாதி விலைக்கும் குறைவு

ஒரு மாதத்திற்கு இந்தச் சலுகை
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாதம்

	ஒரிஜினல் விலை	விற்பனை விலை
அலாரம்கடிகாரம்	ரூ. 30,	14/-
,, உயர் ரகம்	ரூ. 40,	16/-
பாக்கெட் கடிகாரம்	ரூ. 30,	12/-

No. 11 Size 6½"



	ஒரிஜினல் விலை	விற்பனை விலை
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 80	36/-
15 ஜுவல்ஸ் 10 மைக்ரோன்ஸ்	ரூ. 90	38/-

No. 13 Size 9½"
Water Proof



	ஒரிஜினல் விலை	விற்பனை விலை
15 ,, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ. 80	37/-
17 ,, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ. 90	44/-
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு 10 மைக்ரோன்ஸ்	ரூ.130	60/-

No. 14 Size 8½"



	ஒரிஜினல் விலை	விற்பனை விலை
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 75	32/-
15 ஜுவல்ஸ் 10 மைக்ரோன்ஸ்	ரூ. 85	34/-
5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 42	20/-

குறைந்த விலையில் பவுண்டன் பேனாக்கள்



ஸ்வான் கோல்ட் நிப் பவுண்டன் பேனா ரூ. 14/-
கோல்ட் கேப் ரூ. 18/- பிளாக் பேர்டு ரூ. 13/-
ராஜா(ஜெர்மன்) ரூ. 10/- வெல்குரோப் மாடல் ரூ. 8/-
மின்னல் ரூ. 5/- பார்க்கர் ஜூனியர் மாடல் (அம்பர்) ரூ. 7/-

PIONEER WATCH COMPANY

Post Box No. 11428 - CALCUTTA-6

"எப்படி இருக்கிறது!" என்றார். "அப்படியேதான் இருக்கிறது" என்று துயரம் தோய்ந்த குரலில் சொன்னான் சரவணா.

"ஏன் நீங்கள் சிரமப்படுகிறீர்கள்! இத்தனை நாளாக மருந்து கொடுத்து வருகிறேன். ஒரு பலனும் காணவில்லை. புதிதாக இப்பொழுது ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை வேண்டுமானால் கொடுக்கலாம். ஆனால் அந்த மருந்துச் செலவே இருநூற்றைம்பது ரூபாய் ஆகுமே!" என்றார் டாக்டர் ஸ்ரீ பால்.



"இருநூற்றைம்பது ரூபாய் மருந்துக்கு என்று அவரைக் கேட்டால் 'மருந்தில்லாமலே சாகிறேனே' என்பாரே! அவ்வளவு ரூபாய்க்கு எங்கே போவது!" என்று கவலையோடு கேட்டான் சரவணா.

"ஆமாம், அவ்வளவு ரூபாய் அவரைக் கேட்காமலே நீங்கள் புரட்ட முடியாதா! அவரைக் கேட்டால், 'இருநூற்றைம்பது ரூபாயா!' என்று அந்த அதிர்ச்சியிலேயே இறந்து போய் விடுவார். அதனால் அவருக்குத் தெரியாமலிருப்பதே நலம்!"

"ஆனால் அவ்வளவு ரூபாய்க்கு நான் எங்கே போவேன்!"

"ஏன், உங்கள் நாயே ஐந்நூறு ரூபாய் பெறுமே. அதை விற்று விடுங்களேன்!"

சரவணாவுக்குச் சம்மட்டி கொண்டு யாரோ தலையில் 'படார்' என்று அடித்தாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது!

"சரி, பார்ப்போம்!" என்று சொல்லி விட்டு, டாக்டரின் கம்பௌண்டர் கலந்து வைத்திருந்த மருந்து பாட்டிலை எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான்!

இப்பொழுது அவன் மனநிலை எவ்வளவு குழப்பமுற்று இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா!

• • •

வீட்டுக்குள் நுழைந்து, சந்தானம் அறைக்குச் சென்றான். சந்தானம் ஒருக்களித்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் அருகிலிருந்த மேஜையின் மீது மருந்து சீசாவை வைத்து விட்டுச் சத்தப்படுத்தாமல் அடிமேலடி வைத்து அறைக்கு வெளியே செல்ல முயன்றான். இருந்தாலும் அவனுடைய மெல்லிய காலடிச் சத்தம், அவன் காதில் விழுந்து விட்டது போலும்! "சரவணா, சரவணா!" என்று குரல் கொடுத்தான். அந்தக் குரலில் கடுமை மிருந்தது. அது எப்பொழுதும் இருக்கும் கடுமைதான் என்று அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தான்.

அவன் கண்களில் கனல் பறந்து கொண்டிருந்தது. "ஏன் இத்தனை நாழிகை! நான் இங்கே சாகக் கிடக்கிறேன் என்பது கூட மறந்து விட்டதா! உன்னுடைய அருமை நாயுடன் உலாவப்போய் விட்டாயாக்கும்" என்று கத்தினான்.

"என்னை எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். கூடவே நாயையும் ஏன் வம்புக்கு இழுக்கிறீர்கள்! அது ஒரு பாவமும் செய்ய வில்லையே!" என்று தன் பாதிமாவுக்குப் பரிந்து பேசினான்.

"ஏன், அது ஒன்றிருப்பதனால்தான் உனக்கு என்னைக் கவனிப்பதற்கே நேரம் இருப்பதில்லை. அது தொலைந்தால்தான், என் மனசு நிம்மதியடையும்!" என்று சொல்லி மேஜையின் மேலிருந்த மருந்துப் பாட்டிலை எடுத்து நாயின் மீது வீசினான்.

நல்ல வேளை; பாட்டில் கீழே விழுந்து சிதறிச் சுக்கு நூறாக உடைந்தது. மருந்தெல்லாம் கீழே பரவலாகக் கொட்டியது!

சரவணாவுக்கு வெறுப்பாகப் போய்விட்டது. "இது என்ன காரியம்!" என்று வெறுப்புக் கலந்த குரலில் சொல்லி விட்டு அப்புறம் போய் விட்டான். நாய் மட்டும், கீழே பரவிக் கிடந்த மருந்தை நக்கிக் கொண்டிருந்தது.

• • •

அறையை விட்டு வெளியே வந்த சரவணா, கூடத்திலிருந்த நாற்காலியில் வந்தமர்ந்தான். அவன் மூளை ரொம்பவும் கனத்தது.

"இது என்ன! நாளுக்கு நாள் இவருடைய தொல்லை பெருந் தொல்லையாகி வருகிறதே! கொஞ்சமாகிலும் நம் நிலையை உணரவில்லையே! கண்டபடி ஏசி ரகளை கட்டுகிறாரே! இவருக்காக என் நாயை விற்று இவருக்கு வைத்தியம் செய்யலாம் என்று இருந்தேனே! நன்றி கெட்ட மனிதர்! இவருக்கு என்ன செய்தால்தான் என்ன! நன்றி யென்பது லவலேசமும் இருக்கப் போவதில்லை. ஆனால் பாதிமா எவ்வளவு நன்றியும்

விசுவாசமுள்ள ஜீவன். நன்றியுள்ள அந்த ஜீவனை விற்று நன்றி கெட்ட இந்த ஜீவனுக்கு வைத்தியம் செய்வதா! வேண்டாம். வேண்டாம்......" என்று பலப்பல நினைத்தாள்.

ஆனால் அவளது அந்தராத்மாவிலிருந்து, 'சரளா, இதெல்லாம் என்ன எண்ணங்கள்! நாற்றம் பிடித்த எண்ணங்கள்! கொண்ட கணவனை, ஒரு காலத்தில் உன்மேல் தன் உயிரையே வைத்திருந்த கணவனைக் காப்பாற்ற உன்னாலானதைச் செய்யவே மாட்டாயா! ஏன், உன் நெஞ்சறியப் பொய் எண்ணுகிறாய். உன்னால் அப்படியெல்லாம் கடுமையாக இருக்கச் சற்றும் முடியாது! அது உன் இயல்பல்ல! உனக்குக் கணவன்தான் தெய்வம். அதனால் நீ முதலில் தீர்மானித்தபடி நாயை விற்று அவருக்கு வைத்தியம் செய்யப் பார்!" என்று ஒரு குரல் வந்தது.

அந்தச் சமயத்தில் கீச் கீச் என்று பாதிமா ஏதோ மாதிரி கூவிக்கொண்டே வந்து, சரளாவின் கால்களைச் சுற்றிச் சுற்றி வந்தது. சிந்தனையில் ஆழ்ந்திருந்த சரளா, இந்த நாய் தன்னுடன் இப்பொழுது விளையாடுகிறது என்றுதான் நினைத்தாள். ஆகவே, "பாதிமா, போ! போ! என் மனசு சரியாகவில்லை. இப்பொழுது விளையாட வராதே! தூரப் போ!" என்றாள்.

மறுபடியும் அந்த நாய் முதுகை நெளித்துக் கொண்டும், தலையைக் குனிந்து கொண்டும் ஏதோ வேதனை தரும் குரலை எழுப்பிக் கொண்டும் மூலையில் போய்ப் படுத்தது.

சரளா, அவள் உள்ளத்தை அழுத்திய கவலை பாரம் காரணமாக நாய்க்கு, தன் அருமை நாய்க்கு என்ன நேர்ந்து விட்டது என்றுகூடத் தெரிந்து கொள்ளவில்லை. அவள் தன் சிந்தனையிலேயே மீண்டும் ஆழ்ந்து விட்டாள்.

அதிக நேரம் அவள் சிந்தனையில் ஆழவிடாமல், "அம்மா! அம்மா!" என்று வாசற்புறத்திலிருந்து ஒரு குரல் வந்தது.

யார் என்று பார்க்க வெளியே வந்தாள். அவளுடைய டாக்டர் வீட்டுக் கம்பவுண்டர் உடம்பெல்லாம் நடுநடுங்க, "அம்மா! இது என்ன உங்கள் மருந்துப் பாட்டிலை வைத்துவிட்டு, அங்கே வேறொருவருக்காக வைத்திருந்த மருந்து பாட்டிலைக் கொண்டு வந்து விட்டீர்களே! அது விஷம் ஆயிற்றே!" என்றான். அவ்வளவுதான் சரளா பறந்து அடித்துக் கொண்டு கணவன் படுத்திருந்த அறைக்கு ஓடினாள்.

அங்கே உள்ளே நுழைந்த பிறகு தான், அந்தப் பாட்டிலைத் தன் கணவன் விட்டெறிந்து உடைத்தது ஞாபகம் வந்தது. கீழே கண்ணாடித் துண்டுகள் சிதறிக் கிடந்தன. ஒரு துண்டுக் கண்ணாடியில் "விஷம்" என்று சிவப்பு மையில் அச்சடித்த காகிதம் ஒட்டப்பட்டிருந்தது தெரிந்தது. அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள். மனத்தை அழுத்திய பாரம் கீழே இறக்கப்பட்டது போன்ற உணர்ச்சி பெற்றாள்.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த கம்பவுண்டரும் நிம்மதியடைந்தான் — உடைந்து கிடந்த பாட்டிலைப் பார்த்து விட்டு.

"அம்மா, ஒரு அவுன்ஸ் மருந்து கூடச் சாப்பிட்டிருக்க மாட்டாரே!" என்று சந்தேக நிவர்த்திக்காகக் கேட்டான்.

"இல்லையப்பா! இந்தப் பாட்டிலைக் கொண்டு வந்து வைத்ததும், வேறு எதன் மேலோ கோபம் வந்து இதை உடைத்தெறிந்து விட்டார்."

"இந்த மருந்து அவர் உள்ளுக்குள் போகாமல் வெளியே போயிற்றே அதுவரைக்கும் சந்தோஷம். இல்லையென்றால், இதற்குள் அவர் யமபட்டணத்து வாசலைப் பிடித்திருக்க வேண்டும். அவ்வளவு கடுமையான விஷம்!"

"ஆனால்..." என்று இழுத்தாள் சரளா!

"என்ன! 'ஆனால்' என்கிறீர்கள்!"

"ஒன்றுமில்லை, இங்கே கொட்டிப் போன மருந்தை என் நாய் நக்கிக் குடித்து விட்டாற் போல் காண்கிறது. அதனால்தான் இந்த இடம் இவ்வளவு சுத்தமாக இருக்கிறது" என்றாள்.

"அப்படியானால் அந்த நாய் இன்னும் இரண்டு மணி நேரத்தில் விடைபெற்றுக் கொண்டு விடும்; அவ்வளவு கடுமையான விஷம்" என்று சொல்லிவிட்டு, "சரி, அம்மா! நான் வருகிறேன். என் முன்னோர் செய்த புண்ணியத்தில் இன்று என் தலை தப்பியது!" என்று சொல்லிவிட்டு அவன் மனத் திருப்தியுடன் வெளியே போனான்.

இப்போதுதான் சரளாவுக்குப் பாதிமா என்னவோ மாதிரி கூவிக் கொண்டு தன் காலைச் சுற்றிச் சுற்றி வந்ததின் பொருள் புலப்பட்டது. 'ஆகா! பாதிமா, உன்னை விற்க வேண்டும் என்று நினைத்தேன். கடைசியில் இந்த உலகத்தையே விட்டுப் போகத் தீர்மானித்து விட்டாயா! ஐயோ, நீ என்மேல் எவ்வளவு அன்போடு இருப்பாய். எவ்வளவு நன்றி விசுவாசத்தோடு என்னை விட்டுப் பிரியாமல் இருப்பாய். இப்பொழுது, எரிந்து விழும் கணவனுடன் என்னை இருக்கச் செய்து விட்டுப்



உயர் பதவிக்கு உகந்தவன்




ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்

பணம் மிச்சமாகிறது. டக்கான தோற்றம்.
க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை.
வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

7 o'clock BLADES



பஞ்சாயத்து ரேடியோ

இப்பொழுது பஞ்சாயத்துப் போர்டு தலைவர்களும், உப தலைவர்களும் 'கல்கி'யில் தங்களுடைய ஊருக்குச் செய்ய வேண்டிய நன்மைகள் செய்யவில்லை என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்கச் சில ஊர்களில் தலைவர்கள் பஞ்சாயத்துப் போர்டுக்குச் சொந்தமான ரேடியோவைப் பொது மக்களுக்கு உபயோகப்படாதபடி தங்கள் சொந்த உபயோகத்துக்கு வீட்டில் வைத்துக் கொள்ளுகின்றனர். "இவ்வாறு வைத்துக் கொள்ளலாமா!'' என்று கேட்டால் "திருட்டுப் போகாமல் இருப்பதற்கு'' என்று பதில் சொல்லி விடுகிறார்கள். இவ்வாறு ரேடியோவை வீட்டினுள் வைத்திருப்பவர்கள் ஒரு ஒலிபெருக்கியை யாவது பக்கத்திலுள்ள தந்திக் கம்பங்களிலோ அல்லது மரக் கிளையிலோ கட்டி அவ்வூர் பொது மக்கள் கேட்டுப் பயன் அடையும்படி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பு:—உதாரணத்துக்குத் தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சித் தாலூகாவில் தெரிந்து கொள்ளலாம்.

திருப்பாதிரிப்புலியூர்
13—10—54

மூகவை
ம. வே. இராசாமணி

போய்விடப் போகிறாயா! இனிமேல் என்மேல் அன்பு செலுத்தக் கூடியவர் யாருமே இல்லை, பாதிமா! நான் இனி நடைப்பிணம்தான்!'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டான் தனக்குத் தானே. பிறகு "பாதிமா" என்று குரல் கொடுத்தான். ஒருமுறை கண்களைத் திறந்து பார்த்து விட்டு மூடிக் கொண்டு விட்டது. மெல்லிய குரல் வேறு கொடுத்தது! உயிர் கொஞ்சம் இருக்கிறது போலும், இன்னும் சற்று நேரத்தில் பிரிந்து விடுமோ என்று பலபடியாக எண்ணினான்.

* * *

"சரளா!'' என்று குரல் வந்தது.

கணவன் படுக்கையருகில் சென்றாள். சந்தானம் ஏதோ கேட்டான். கொடுத்தாள். அதைச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் தூங்கலானான்.

சரளா அவன் படுக்கையருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

இரவு ஒரு மணி இருக்கும். சந்தானம் விழித்துக் கொண்டான். சரளா தன் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். "உங்களுக்கு ஏதாகிலும் வேண்டுமா!'' என்று கேட்டாள். அவள் குரலில் ஏதோ புதுமை தொனித்தது.

அவன் ஏதோ கேட்டான்.

சரளா கொடுத்தாள்.

அவன் மீண்டும் கண்களை மூடித் தூங்கலானான்.

மணி மூன்றிருக்கும். விழித்துக் கொண்டான். சரளா, "ஏதாகிலும் வேணுமா!'' என்று கேட்டாள். அவள் குரலில் முன்னைவிட அதிகக் குழைவிருந்தது.

இப்படி இரண்டு நாட்கள் இரவும் பகலும், சந்தானத்தின் பக்கத்திலிருந்து அவனுக்கு அரும் பணி புரிந்து வந்தாள். மனைவியின் அன்பும், தாயின் அன்பும் கலந்து அவளிடமிருந்து வருவதைக் கண்டான். அவன் நெஞ்சம் தழதழத்தது.

"சரளா, நீ ஏன் இரவு பகல் தூங்காமல் என் பக்கத்திலேயே இருக்கிறாய்! நீ சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா! இப்படியே நீ தூங்காமல் என்னையே கவனித்துக் கொண்டிருந்தால் உன் உடம்பு என்னத்துக்காகும்! சற்று உன்னுடைய உடம்பையும் பார்த்துக் கொள்!'' என்றான் சந்தானம்.

"உங்கள் உடம்பு குணமானால் போதும். என் உடம்பு அடுத்த நாளே சரியாகி விடும். நீங்கள் பழையபடி எழுந்து நடமாடினால் அதுவே எனக்குப் புது வாழ்வு அளிப்பதாகும்'' என்றாள்.

"இத்தனை அன்புடனும் பரிவுடனும் நீ என்னைக் கவனித்து வருவதே எனக்குப் புத்துணர்ச்சியும் புத்துயிரும் அளித்து வருகிறது. சமீப காலத்தில் கொஞ்ச நாட்களாக உன்னிடம் அருமையாக இருந்த அன்பு, திடீரென்று மலர்ந்திருப்பதைக் காண என் மனம் பூரித்து நிறைந்திருக்கிறது. உன் பாதிமா பேகத்தைக் கூடத் துறந்து விட்டு இப்படி இரவும் பகலும் எனக்கே சிசுருஷை செய்து கொண்டிருக்கிறாயே! உன்னுடைய இவ்வளவு அன்பும் எனக்கா என்று எண்ண எண்ண என் நெஞ்சம் விம்முகிறது. இந்த அளவு கடந்த ஆனந்தத்தால் என் உள்ளம் விம்மி வெடித்து விடும் போலிருக்கிறது!'' என்றான்.

பாதிமா பேகத்தை நினைத்தவுடன் அவள் உள்ளம் ஆறாத் துயரமுற்றது. கண்களில் பொல பொலவென்று கண்ணீர் உதிரத் தொடங்கியது. சந்தானத்தின் கண்களுக்குப் படாமல் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

* * *

அதற்கடுத்த நாள் காலை, கையில் காப்பி டம்ளருடன் சரளா, சந்தானத்தின் அறைக்குச் சென்ற போது, அவளுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

சந்தானம் தனது கட்டிலில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் பக்கத்தில் பாதிமா பேகம் படுத்திருந்தது. அதன் மேல் ஒரு கையை வைத்து அணைத்துக் கொண்டும் மற்றோர் கையில் அன்று காலை வந்த பத்திரிகையைப் பிடித்துப் படித்துக் கொண்டிருந்தான். இந்தக் காட்சியைக் கண்டதும் அப்படியே அதிசயத்தில் மூழ்கிப் போனாள் சரளா.

ஆம், பாதிமாவை முதல் நாள் இரவு கூடப் பார்த்து விட்டு வந்தாள். சோர்ந்து படுத்திருந்தது. இப்படி மூன்று நாட்களாகப் படுத்திருக்கும் பாதிமா இனி எங்கே பிழைக்கப் போகிறது, நாளைக் காலைக்குள் உயிர் போய் விடும் என்று எண்ணிக் கொண்டு போய்ப் படுத்தாள். ஆனால் காலையில் இப்படி வந்து உட்கார்ந்தால் அவளுக்கு அதிசயமாகத்தானே இருக்கும்!

"இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பாதிமா உங்கள் பக்கத்தில் வந்து படுத்துக் கிடக்கிறதே!'' என்றாள் சரளா.

"இந்த ஆச்சரியம் கிடக்கட்டும், சரளா! இதோ இன்று பத்திரிகையில் இன்னொரு ஆச்சரியம் விளைவிக்கும் செய்தி வந்திருக்கிறதே, பார்த்தாயா! நம் நாட்டில் **விஷம்** கூடக் கலப்படமில்லாத **சுத்த விஷமாகக்** கிடைப்பதில்லையாம். நேற்று டில்லி லோக் சபாவில் பேசியிருக்கிறார்கள்! இது என்ன தேசம்!'' என்றான் சந்தானம்.

பாதிமா பிழைத்து எழுந்ததின் மர்மம் பளிச்சென்று சரளாவுக்குப் புரிந்து விட்டது!

இவ்வளவு தீமையிலும் ஒரு நன்மை இருக்கிறதல்லவா என்று நினைத்தாள் சரளா.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10



Bharat Jyoti *OF COURSE!*

The BHARAT JYOTI is a family paper.

Its features, from the Women's Page to the reviews on current literature and literary trends in all the languages—do not discriminate. For people of all tastes, it is The BHARAT JYOTI, with exclusive magazine features and comprehensive reviews by special contributors, Political Cartoons, Exclusive Personality Interviews, Serialisation of Kulapathi's Letter by Shri K. M. Munshi, Governor of U. P., The Sunday Charivari, an exposition of the stray thoughts of a not too common man. Extensive coverage of the Film World—Indian and Foreign—Sports and Commerce.

The Bharat Jyoti comprising 12 pages is priced at 2 annas only.

FROM BOMBAY, EVERY SUNDAY.

REGISTERED No. M. 4392

Registered as a newspaper in Ceylon



எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நடனம் ஆடியிருப்பேன்...

திரை விழும்முன் ஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரித்ததைக் கேட்டதும் என் மனம் என்றுமில்லாத சந்தோஷத்தால் பூரித்தது. முதற் பரிசான தங்கப் பதக்கத்தை சபா அத்யக்ஷர் எனக்கு அணிந்த பொழுது நான் மெய்மறந்து போனேன். எனது நடன ஆசிரியர் பெருமிதத்துடன், "இரண்டு வருடங்களுக்குமுன் என்னிடம் நடனம் கற்றுக் கொள்ள வந்த நோய்ஞ்சலான பெண் இவள்தான் என்று இப்பொழுது யார் கூறுவார்கள்" என்று சொன்னார். ஆம், இரண்டு வருடங்களுக்கு முன் கால் மணி நேரம் கூட நடனமாட எனக்கு சக்தியில்லாமல் இருந்தது. என் தாய் இது விஷயமாக எங்கள் டாக்டரிடம் கேட்டாள். அவர் என்னைப் பரிசோதித்து, இவ்வாறு கூறினார்: "கவலைப்பட ஒன்றுமில்லை. விட்டமின்கள், புரதசத்துக்கள், மாவு சத்துக்கள், தாதுப்பொருள்கள், மேலும் முக்கியமாக சக்தியைத்தரும் சுத்தமான கொழுப்புகள் சேர்ந்த சமநிலை உணவுதான் அவளுக்குத் தேவை."

மறுநாள் என் தாய் கடைக்குச் சென்று உண்மையிலேயே சிறந்த சமையல் கொழுப்பு தனக்கு வேண்டுமென்று கேட்டாள். உடனே கடைக்காரர் ஒரு டால்டா வனஸ்பதி டின்னை எடுத்துக் கொடுத்தார். டால்டாவில் தயாரித்த சமையல் சாப்பிட்டபின்தான் எனக்கு சாப்பாட்டில் ஆசை பிறந்தது. டால்டா வனஸ்பதி எல்லா உணவின் இயற்கை ருசியையும் பரிமளிக்கச் செய்கிறது. வெகு சீக்கிரமே உடம்பில் தெம்பு ஏற்பட்டு மணிக்கணக்காக நடனம் கற்றுக் கொள்ள முடிந்தது. சக்தி அளிக்க டால்டா வனஸ்பதியைப் போல் சிறந்த வஸ்து வேறெதுவுமில்லை. இப்பொழுது டால்டா வனஸ்பதியில் விட்டமின் 'ஏ', 'டி', சேர்ந்திருக்கிறது. மேலும் அது காற்றுப்புகாத சீல்செய்த டின்னில் கிடைப்பதால் எப்பொழுதும் புதுமணம் மாறாமலும், சுத்தமாகவும், ஊட்டமளிப்பதாகவும் இருக்கிறது. அது மிகவும் சிக்கனமானதும்கூட.

உடல் வளர்ச்சிக்கு உதவும்
உணவுகளின் முக்கியத்துவம்.

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு



மர அடையாளமுள்ள
டின்னைப் பார்த்து
வாங்குங்கள்

HVM. 216-50 TM